விலை : 20.00 website : www.valampurii.lk
பக்கங்கள் : இருபத்து நான்கு
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail : valampurii@sltnet.lk
valampurii@yahoo.com

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2046 மார்கழி 21 புதன்கிழமை (06.01.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 018

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# நல்லிணக்கத்தை ஏற்படுத்த வெளி.உதவி தேவையில்லை

## இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் நல்லிணக்க செயற்பாடுகளை முடுக்கிவிடுவதற்கு அமைதி ஏற்பாட்டாளர் என்ற பெயரில் எந்த வெளிநாட்டவரின் உதவியும் தேவையில்லை என இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (23ஆம் பக்கம் பார்க்க)

## இந்.மீனவர்கள் 4 பேர் கைது

(கொழும்பு)

இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நாகப்பட்டினத்தை சேர்ந்த இந்திய மீனவர்கள் 4 பேர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களை எதிர்வரும் 19ஆம திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதிபதி ஏ.எம்.மொஹமட் றியாஸ் நேற்றைய 24ஆம் பக்கம் பார்க்க....

## மயங்கி வீழ்ந்த கடற்றொழிலாளி மரணம்

(யாழ்ப்பாணம்)

கடற்பரப்பில் மயங்கி விழுநத கற்றொழிலாளி ஒருவர் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்துள்ளார்.

இதில் காரைநகர் களபூமியைச் சேர்ந்த தங்கவேல் மோதலால்நேரு (வயது 31) என்ற இளம குடும்பஸ்தரான தொழிலாளியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நேற்று அதிகாலை கடற்றொழி லுக்கு சென்றுவிட்டு நல்ல நிலையில் வீடு திரும்பிச்சென்ற குறித்த 24ஆம் பக்கம் பார்க்க....

## மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

கோதுமை மா கிலோ ஒன்றின் விலை 2 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதன்படி 87 ரூபாயாக இருந்த 23ஆம் பக்கம் பார்க்க....

கம்பவாரிதியின் மடலுக்கு புருசோத்தமனின் விளக்கம் உள்ளே....




வர்ணக் கலண்டருடன்
நாளைய வலம்புரி
வாங்கத் தவறாதீர்கள்

## கூட்டமைப்பைப் பிளவுபடுத்துவது விக்னேஸ்வரனின் எண்ணம் அல்ல

### கலாநிதி குமரகுருபரன் கருத்து

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பிளவுபடுத்துவதோ அதிலிருந்து விலகிச்செல்வதோ ஒருபொழுதும் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் எண்ணப்பாடு அல்ல என ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கூட்டு முன்னணியின் தலைவர் கலாநிதி நல்லையா குமரகுருபரன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பபை பிளவுபடுத்துவதோ அதிலிருந்து விலகிச்செல்வதோ கிஞ்சித்தும் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனின் எண்ணப்பாடு அல்ல என்பதை 23ஆம் பக்கம் பார்க்க....

## வதை முகாமிலிருந்த தடயங்கள் அழிப்பு!

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு வீமன்காமம் பகுதியில் இராணுவத்தினரின் வதை முகாம்களாக இருந்திருககலாம் என சந்தேகிக்கப்பட்ட வீடுகளில் இருந்த தடயபொருட்கள் இராணுவத்தினரால் அழிக்கப்பட்டு உள்ளன.

குறித்த பகுதி கடந்த 25 வருடகாலமாக இராணுவத்தினரின் அதி உயர் பாதுகாப்பு வலயமாக இருந்து, கடந்த 29-ம் திகதி முதல் மக்கள் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டு இருந்தனர். அதனை அடுத்து அப்பகுதிக்கு மக்கள் சென்ற போது அருகருகாக உள்ள இரு வீட்டின் உட்பகுதி கூரை முட்கம்பிகள் கொண்டு வேயப்பட்டு காணப்பட்டது.

அதில் ஒரு வீட்டின் ஒரு அறை, இருட்டறையாக பயன்படுத்தப்பட்டு அங்கு தடுத்து வைக்கப்பட்டவர்கள், சித்திரவதைக்கு உட்படுத்தபட்டு இருக்கலாம் என சந்தேகம் எழுந்து இருந்தன.

குறித்த அறையின் மேற்பகுதி கூரை முட் 24ஆம் பக்கம் பார்க்க....

## ஊழல் அற்ற நல்லாட்சிக்கு பாகிஸ்தான் பிரதமர் பாராட்டு

### ஜனாதிபதியுடன் நேற்று சந்திப்பு



(கொழும்பு)

இலங்கையில் ஊழல் மற்றும் மோசடிகளை இல்லாதொழித்து நல்லாட்சியை ஏற்படுத்துவதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்னெடுக்கும் வேலைத் திட்டத்தை பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் வெகுவாகப் பாராடடினார்.

இலங்கையை உலகின் ஓர் உன்னத நாடாக உயர்த்துவதற்கு பாடுபடும் 24ஆம் பக்கம் பார்க்க....

## ரவிராஜ் படுகொலைக்கான திட்டம் கடற்படை முகாமிலேயே தீட்டப்பட்டது

### நீதிமன்றில் சஞ்ஜய சாட்சியம்



(கொழும்பு)

கொழும்பு கங்காராம வீதியில் உள்ள கடற்படைப் புலனாய்வு முகாமிலேயே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த நடராஜா ரவிராஜ் படுகொலைக்கான திட்டம் தீட்டப்பட்டது.

இவ் வாறு இந்த படுகொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று முன்தினம் திங்கட்கிழமை கொழும்பு மேல திக நீதி வான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளபபட்ட போது, 24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை - பாகிஸ்தான் இடையில் 8 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கை மற்றும் பாகிஸ்தானுக்கு மிடையே இருதரப்பு உறவுகளை மேலும் உறுதிசெய்து கொள்ளும் முகமாக இரு நாடுகளுக்கு மிடையே 08 ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டுள்ளன.

இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்புக்கும் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேனவுக்குமிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றதுடன், அதனைத் தொடர்ந்து இரு நாட்டுத் தலைவர்கள் முன்னிலையில் ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையே விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஒத்துழைப்பு தொடர்பான புரிந்துணர்வு உடன்படிக்கை முதலாவதாக இலங்கை விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சுக்கும் பாகிஸ்தான் விஞ்ஞான, தொழில்நுட்ப அமைச்சுக்கும இடையே கைச்சாத்திடப்பட்டது.

இரு நாடுகளுக்குமிடையில் தொழில்நுட்பத்தை பரிமாற்றுதல் மற்றும் 24ஆம் பக்கம் பார்க்க....

## முன்னாள் பெண் போராளி தீ விபத்தில் உயிரிழப்பு

### பிள்ளைகள் மூவர் நிர்க்கதி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் பெண் போராளி ஒருவர் தீ விபத்தில் உயிரிழந்த நிலையில் அவரது உடலை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு அவரது பிள்ளைகள் யாழ்.போதனா வைத்தியசாலை தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

எனினும் யாழ்.போதனா வைத்தியசாலை அதிகாரிகளின் உதவியுடன் சடலம் முல்லைத்தீவில் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வற்றாப்பளை கேப்பாப்பிலவை சேர்ந்த ஜீவா செல்வகுமாரி எனும் குடும்ப பெண்ணிற்கு மூன்று பெண் 23ஆம் பக்கம் பார்க்க....

## ST.JOHN'S COLLEGE, JAFFNA AND THE JAFFNA ACADEMY & SCHOOL OF TECHNOLOGY

Admission 2016

1.G.C.E (A/L) August 2018-Bio,Maths & Commerce in English & Tamil medium
-Bio system Technology,Engineering Technology,Arts in Tamil medium
-Register on or before 06.01.2016 (Hostel Facilities available)
-Classes will begin on 06.01.2016

**2.Boys and Girls – G.C.E (A/L) August 2016 2nd & 3rd Attempt –**
Bio,Maths, Technology,Commerce,
-Register on or before 09.01.2016 (Hostel Facilities available)
-Classes will begin on 06.01.2016

**3.Boys and Girls – G.C.E (O/L) December 2016 2nd & 3rd Attempt-**
(Technology subject Available)
-Register on or before 09.01.2016 (Hostel Facilities available)
-Classes will begin on 06.01.2016

**4. Boys and Girls-Sinhala Language**
. Spoken
.Second Language Sinhala to prepare for G.C.E(O/L) December 2016 Examination
-Register on or before 09.01.2016
-Classes will begin on 18.01.2016

**5. Boys and Girls- English language**
.Spoken
.TKT- The Cambridge Teaching Knowledge Test
TKT is a leading International qualification for teachers in English. Whether you teach English as a Subject,or teach other subjects in the English medium,TKT will help you to improve your skills.
-Register on or before 09.01.2016
-Classes will begin on 18.01.2016

**6. Boys and Girls-IT**
**. Database Management . Web design .Hardware**
-Register on or before 09.01.2016
-Classes will begin on 18.01.2016

(C-3338)

**The Director,**
**The Jaffna Academy & School of Technology**
**021 321 6006/ 021 222 8585**

**The principal**
**St.John's College**
**Jaffna.**
**T.P.021-222-2432**



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/பரியோவான் கல்லூரியில்
(சென்ஜோன்ஸ்) கல்வி பயிலும் எமது
பெறாமகன் **வி.திருசாந்** 13 வயது
ஆண்களுக்கான கராத்தே
காட்டா போட்டியில்
தேசிய ரீதியில் முதலிடம்
பெற்று தங்கப்பதக்கம் வென்றமைக்கு
அவரை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
மேலும் பல கலைகளிலும்
சிறப்புற்று முதலிடம்
பெற வாழ்த்துகின்றோம்.

Dr.ஜெ.ஜெயலன் J.P (பெரியப்பா)
மருத்துவப் பதிவாளர் யாழ்.நகர் மேற்கு
போதனா வைத்தியசாலை
சுஜீவா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.
பரியோவான் கல்லூரி, பழைய மாணவன்.

Dr.திருமதி.ச.ஜெயலன் J.P (பெரியம்மா)
சுஜீவா வைத்தியசாலை யாழ்ப்பாணம்.

Dr.k.o இராஜரட்ணம் (அம்மப்பா), இ.சுசீலா (அம்மம்மா)
சுஜீவா வைத்தியசாலை பாலிநகர், வவுனிக்குளம்.

(சி-3340)



## நடமாடும் மிருக வைத்திய சேவை

தாவடிக்கு அண்மையில் மிருக வைத்திய சேவைகளுக்கு தொடர்பு
Mob:-0779738802, Ph:-0212242502
**மாலை:-5-7**
**நாவலர் ரோட், நல்லூர்** (3083)



## விற்பனைக்குண்டு

- லிஸ்ரார் டீசல் ஜெனரேற்றர் Lister Disel Generator 10 KVA
- YAMAHA Organ

**தொடர்புகள்:-0772242394** (3082)


## மாவட்டச் செயலகம் யாழ்ப்பாணம்

தவிசாளர் பெறுகைக்குழு மாவட்டச் செயலகம் சார்பாக அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளரால் **மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரகவாகனஙகளை வாடகைக்கு அமர்த்துதல்-2016** எனும் செயற்பாட்டிற்காக தகமையுடையோரிடமிருந்து விலைக் கேள்விகள் கோரப்படுகின்றன.

### விலைக்கேள்வி அறிவித்தல் - நிபந்தனைகள் மற்றும் மேலதிக தகவல்கள்

1.விலைக் கேள்வியானது தேசியவிலைக்கேள்வியின் மூலம் நடாத்தப்படும்

2.தகமைகள் பற்றிய தேவைப்பாடுகள் விலைக்கேள்வி ஆவணத்தில் உள்ளடக் கப்பட்டுள்ளது.

3.ஆர்வமுள்ள தகமையுடைய விலைக்கேள்வியாளர்கள் மேலதிக அரசாங்க அதிபர் -காணி, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 07.01.2016ந் திகதி தொடக்கம் காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரை விலைக் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேலதிக அரசாங்க அதிபர் -காணி, (தொலைபேசி இலக்கம் 0212212631) அவர்களிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4.விலைக்கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை மேலதிக அரசாங்க அதிபர் -காணி, மாவட்டச்செயலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து 07.01.2016ந் திகதி முதல் 19. 01.2016 வரை காலை 9.00 மணியிலிருந்து பி.ப 3.00 மணி வரையான காலப் பகுதியில் மீளளிக்கப்படாத தொகையான 1000/= கட்டணமாகச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்

5.பூர்த்தி செய்யப்பட்டு பொறியிடப்பட்ட விலைக்கேள்விகள் யாவும் **"தவிசாளர் பெறுகைக்குழு, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்"** என்ற முகவரிக்கு **22.01.2016 திகதியன்று பி.ப 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.** நேரடியாக ஒப்படைக்கப்பட்டவர்கள் அரசாங்க அதிபர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் இட்டு அங்கு வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் ஒப்பமிடல் வேண்டும்.

6.காலந்தாழ்த்தி கிடைக்கப்பெறும் விலைக்கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் தபாலுறையின் இடதுமேல் மூலையில் **"பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண்அணைகள் அகற்றுவதற்காக கனகரவாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல் -2016"** என்ற வாசகத்தினை குறிப்பிடுதல்வேண்டும்.

7.விலைக்கேள்விகள் யாவும் மேல்குறிப்பிடப்பட்ட முகவரியில் 22.01.2016 ந் திகதி பி.ப.3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் விலைக்கேள்வி மனுக்களை சமர்ப்பித்தவர்கள அல்லது அவரினால் எழுத்து மூலம் நியமிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்கமுடியும்.

8.கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைச்சபையின் இறுதித் தீர்மானத்திற்கமைவானதாகும்.

| கேள்வி இல | வேலைவிபரம் | மீளளிக்கப்படாத தொகை (ரூபா) |
|---|---|---|
| JF/MRS/RES/TENDER/Gen/2016 | மீள்குடியேற்ற பிரதேசங்களில் பற்றைக்காடுகள், இடிபாடுகள் மற்றும் மண் அணைகள் அகற்றுவதற்காக கனரக வாகனங்களை வாடகைக்கு அமர்த்துதல்-2016 | 1000.00 |

நா.வேதநாயகன்
அரசாங்க அதிபர்/ மாவட்டச் செயலாளர்
மாவட்டச்செயலகம்
யாழ்ப்பாணம்.

(சி-3339)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



செல்வன் **ஞானசூரியன் திவாகரன்**
**பிரிவு : வர்த்தகம்**
**பெறுபேறு - 3A**
**மாவட்ட நிலை -7**
பாடசாலை:- **யா/நாவற்குழி மகா வித்தியாலயம்**
**யா/பரியோவான் கல்லூரி**



செல்வி **விஜிதா கோபாலசிங்கம்**
**பிரிவு:விஞ்ஞானம்**
**பெறுபேறு- B2C**
**மாவட்ட நிலை - 10**
பாடசாலை:- **யா/வேம்படி மகளிர் கல்லூரி**

எங்களுடைய கிராமத்தை பெருமைப்படுத்திய எங்களுடைய மாணவர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதோடும் மேலும் வெற்றியடைய வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: **ஸ்ரீசரஸ்வதி சனசமூக நிலையம்**
**கோவிலாக்கண்டி மேற்கு, தச்சன்தோப்பு.**

(3080)



**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532



## தொலைபேசி திருத்துநர் தேவை

தொலைபேசி திருத்துவதில் அனுபவமுள்ள திருத்துனர் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
**Arunthathy Mobile Repairing & Accessories**
A9 Road, kilinochchi.
T.P:-0777729029, 0212285829 (3072)



## குடும்ப பொறுப்பற்ற பெண் தேவை

யாழ்.நகரில் மூன்று பேர் கொண்ட குடும்பத்திற்கு வீட்டில் இருந்து சமையல், வீட்டு பராமரிப்புக்கு குடும்ப பொறுப்பற்ற பெண்தேவை.

**தொலைபேசி:-**
**0771353194**

(3090)

# கறுப்பு ஆடையில் கம்மன்பில



பிவிதுரு ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும் நாடாளும ன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தலைமையிலான குழுவி னர், நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில், முழுமையாக கறுப்பு ஆடையை அணிந்திருந்தனர்.

இந்த ஊடகவியலாளர் மாநாடு, கோட்டையில் நடத்தப்பட்டது. அதில், கலந்துகொண்டவர்களே இவ்வாறு கறுப்பு ஆடை அணிந்திருந்தனர். இங்கு கருத்துத் தெரிவித்த உதய கம்மன்பில, ஜனாதிபதி பதவியேற்று ஓராண்டு நிறைவை முன்னிட்டு தேசியக்கொடியை உயர்த்துமாறு அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார். அப்படியாயின் பதவியேற்பு, தேசிய வைபவமா என்றும் அவர் கேள்வியெழுப்பினார்.

தேசிய வைபவங்களில் மட்டுமே தேசியக்கொடி ஏற்றப்படும் என்பது அமைச்சருக்கு தெரியாதா என்று வினவிய, உதய கம்மன்பில, இவ்வாறான வைபவங்களில் தேசியக் கொடியை ஏற்றுவது அரசியலமைப்பை மீறும் செயலாகும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7)

# எரிபொருள் திருடிய நால்வர் மாட்டினர்

சட்டவிரோதமன முறையில் எரிபொருளை திருடிய நால்வர் கல்ஓயாப் பொலிஸாரினால் நேற்று முன்தினம் திங்கட்கிழமை கைது செய்யப்பட்டதுடன் எரிபொருள் நிரப்பும் வாகனமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

திருகோணமலையில் இருந்து வவுனியா நோக்கிச் சென்று கொண்டிருந்த மேற்படி எரிபொருள் நிரப்பு வாகனம் கல்ஓயாப் பகுதியில் வைத்து கல்ஓயாப் பொலிஸாரினால் இடைநிறுத்தப்பட்டது. பொலிஸாரின் சோதனையில் இருந்து 90 லீற்றர் எரிபொருள் சட்டவிரோதமான முறையில் களவாடப்பட்டது தெரிய வந்தது. அத்துடன் அக்கடத்தலுடன் தொடர்புடைய சாரதி உட்பட நால்வரையும் பொலிஸார் கைது செய்ததுடன் 90 லீற்றர் எரிபொருளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டது. கைது செய்யபபட்ட நால்வரும் பொலிஸ் நிலையம் கொணடு செல்லப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளனர் எனவும் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் தெரிய வந்துள்ளது. (இ-5)

மூலநோய்களுக்கு முறையான சிகிச்சை

Ayurvedic Treatment for Piles

நாட்பட்ட அல்லது குறுகிய கால மூலநோய் கோளாறுகள், மலச்சிக்கல், கஷ்டமான மலப்போக்கு, உள்மூலம், வெளிமூலம், இரத்தமூலம் (Hemorrhoids Such as Internal & External Piles, Bleeding & Non Bleeding Piles), பகந்தரம் (Fistula), மூலம் இறங்குதல், மூலத்தில் வெடிப்பு, எரிவு, கடுப்பு, மூலக்கரப்பன், கண், கை, கால் உடல் இவற்றில் அதிக எரிவு உணர்வு, உடல் மெலிவு, தேகபுஷ்டியின்மை போன்ற பிரச்சினைகளும் மற்றும் புற்றுநோய் சிகிச்சைகளின் பின்னர் ஏற்படும் குடற்பாதிப்புக்கள், பலவீனம், மனஉளைச்சல் இவைகள் சிறுவர், பெரியவர்களுக்கு ஏற்றவாறான உணவுமுறை, வாழ்க்கைமுறை ஆலோசனைகளுடன் கூடிய சித்தஆயுள்வேத சிகிச்சைகள் பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். (2579)

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# 'கம்பீரமான பாகிஸ்தான்' நூல் கொழும்பில் வெளியீடு



இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கிடையிலான நல்லுறவை வளர்க்கும் நோக்கிலும், பாகிஸ்தான் சுற்றுலாத்துறையை வலுவூட்டும் வகையிலும் 'கம்பீரமான பாகிஸ்தான்' எனும் நூல் நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப்பட்டது.

உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பினால் கொழும்பு நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதரகம் ஒழுங்கு செய்த விருந்துபசாரத்திலேயே இந்த நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. இதன் முதல் பிரதியை இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, பாகிஸ்தான் பிரதமரிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

அத்துடன், இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவை வளர்க்கும் பொருட்டு தமிழ், சிங்களம், உருது ஆகிய மொழிகளில் இரு நாடுகளையும் சேர்ந்த சிறுவர்களினால் ஒற்றுமை கீதம் இசைக்கப்பட்டது. இவ்விருந்துபசாரத்தில் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் அமைச்சர் ரவி கருணாநாயக்க, அமைச்சர் றிசாத் பதியுதீன் உள்ளிட்ட அமைச்சர்களும், பாராளுமன்ற உறுப்பினர்கள், உயர் அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் என பலர் கலந்து கொண்டனர். (இ-7)

# பேஸ்புக் பார்க்கத்தடை

(கொழும்பு)

விமானப் படை வீரர்களுக்கு சமூக வலைத்தளமான பேஸ்புக் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை வீரர்கள் தெரிவித்துள்ளனர்.

விமானப்படை தளபதி சுகத் புளத் சிங்களவின் உத்தரவுக்கு அமைய விமானப்படை நிர்வாக இயக்குநர் இதற்கான அறிவுறுத்தலை விமானப்படை வீரர்களுக்கு வழங்கியுள்ளார். (இ-7)

குடற்புண்ணிற்கு (அல்சர்) நிரந்தரசிகிச்சை

Special Treatment for Gastric Ulcer

சடுதியாக அல்லது நாட்பட்ட நிலையில் ஏற்பட்ட இரைப்பை, சிறுகுடல் விரணாங்கள் (Acute or Chronic Gastric & Peptic Ulcer),வயிற்றுவலி, வயிற்றில்எரிவு, சமிபாட்டுவேளைவலி, அடிக்கடி பசியுணர்வு, நெஞ்செரிப்பு, புளித்தஏப்பம், வாயில் மணம், காலையில் பித்தவாந்தி அல்லது வாந்தியுணர்வு, உணவில் வெறுப்பு அல்லது பசியின்மை, தொடர் விக்கல், கல்லீரலில் அதிகொழுப்பு, ஈரல் வீக்கம் (Fatty & Enlarged Liver), மற்றும் மலச்சிக்கல் அல்லது அடிக்கடி மலம்கழிக்கும் உணர்வு (Irritable Bowel Syndrom), உடற்பலவீனம், அமைதியின்மை, களைப்பு போன்ற பிரச்சினைகளுக்கு மருத்துவ ஆலோசனைகளுடன் கூடிய சிகிச்சை களால் நிரந்தர குணம்பெறலாம்.

ஆலோசனைகளுக்கு அனுமதி பெற தொலைபேசியில் தொடர்பு கொள்ளவும். (2579)

Dr. R.LAKSHMANA IYER (D A M (cey), D M G (ind)
Regd - (7966,Dep Ayu - 6-3/1/2541)
மங்களபதி சித்த ஆயுள்வேத வைத்தியசாலை
41/5, அரச வீதி (சங்கிலியன் வீதி எதிரில்)
நல்லூர் - யாழ்ப்பாணம்,
Tel. 021 205 4066 / 077 872 5251

# பருத்தித்துறையில் மீன்பிடி துறைமுகம்

## விரைவில் அமைக்கப்படும்; யாழ்.அரச அதிபர் தகவல்

(யாழ்ப்பாணம்)

**பாரிய நிதி ஒதுக்கீட்டின் கீழ் பருத்தித்துறைப் பகுதியில் விரைவில் மீன்பிடித் துறைமுகம் அமைக்கப் படவுள்ளதாக யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தெரிவித் துள்ளார்.**



கடற்றொழில் மற்றும் நீரியல்வள அமைச்சினால் 2016ஆம் ஆண்டு அபிவிருத்திசெய்யப்படவுள்ள பருத்தித்துறை மீன்பிடித் துறைமுகம் தொடர்பான ஆரம்பகட்ட கலந்துரையாடல் யாழ். மாவட்ட அரச அதிபர் தலைமையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இது தொடர்பாக அரச அதிபர் கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித்துறைமுகங்கள், இறங்கு துறைகள் அமைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. அந்த வகையில் கடற்றொழில் மற்றும் நீரியல்வளத்துறை அமைச்சினால் துறைமுகங்கள் அமைத்தலும் கரையோரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டமும் உருவாக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் யாழ். மாவட்டத் தில் உள்ள கரையோரப்பகுதிகளில் மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கடல் சார் பொறியியலாளர்களூடாக ஆய்வினை மேற்கொண்டு பொருத்தமான இடங்களில் மீன்பிடித்துறைமுகங்கள், இறங்குதுறைகள் அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித்துறைமுகம் அமைப்பதற்கென குருநகர், பருத்தித்துறை, மாதகல் ஆகிய 3 இடங்களும் தெரிவுசெய்யப்பட்டு அதில் முதலாவதாக பருத்தித்துறை பகுதியில் அமைப்பதற்கான ஆரம்பகட்ட சாத்தியவள ஆய்வுகள் மேற்கொள்வது தொடர்பில கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இத் துறைமுகமானது 7 ஹெக்டேயர் பரப்பளவும், 200 தொடக்கம் 300 பலநாட் கலங்கள் தரித்து நிற்கக்கூடிய துறைமுகமாக இது அமையவுள்ளது.

அத்துடன் குளிரூட்டியஅறை, ஐஸ் உற்பத்தி நிலையம், ஏலவிற்பனை நிலையம், இயந்திரம் திருத்தும் அலுவலகம், எரிபொருள் நிரப்பு நிலையம், மீள்களஞ்சியப்படுத்தும் அறை, படகு திருத்தும் நிலையம், நீர், மின்சார நிலையம் போன்ற பகுதிகள் அமைக்கப்படவுள்ளன.

இத் திட்டத்தின் மூலம் தொடர்ச்சியாக யாழ். மாவட்டத்தில் ஏனைய மீன்பிடித்துறைமுகங்களும் விரைவில் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்ததார்.

இக்கலந்துரையாடலில் நீரியல்வள அமைச்சின் அதிகாரிகள், அதன் கீழ் இயங்கும் துறைமுக மற்றும் படகு நிறுத்துமிட அபிவிருத்தித்திட்ட உத்தியோகத்தர்கள், கடற்றொழில் கூட்டுறவுச்சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (இ-9)

# முன்னாள் ராணுவ அதிகாரி பிணையில் செல்ல அனுமதி

முன்னாள் இராணுவ மேஜர் ஜெனரலான பண்டார ஜெயசுந்தரவை 10 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் பெறுமதியான இரண்டு சரீர பிணைகளிலும் செல்ல கொழும்பு முதன்மை நீதிமன்ற நீதவான் கிஹான் பிலப்பிட்டிய நேற்று முன்தினம் உத்தரவிட்டார். ரக்னா லங்கா நிறுவனத்தில் இடம்பெற்ற மோசடிகள் தொடர்பில் ஏற்கனவே ஜெயசுந்தர, ஊழல்களுக்கு எதிரான ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்.

இந்தநிலையில் கறுவாக்காடு பொலிஸார், ஜெயசுந்தர மீது தாக்கல் செய்த வழக்கின் விசாரணை நேற்று முன்தினம் இடம்பெற்றபோது நீதவான் அவரை பிணையில் செல்ல அனுமதித்தார். இதேவேளை இவர் தொடர்பிலான விசாரணை முன்னேற்ற அறிக்கையை 2016 மே 19க்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு நீதவான் உத்தரவிட்டார். (இ-7)

# அம்லா பொறுப்பான இரட்டைச் சதம் இங்கிலாந்துக்கு பதிலடி கொடுத்து தெ.ஆபிரிக்கா

அம்லாவின் அபார இரட்டைச் சதம் மற்றும் பவுமாவின் ஆட்டமிழக்காத சதத்துடன் இங்கிலாந்துக்கு பதிலடி கொடுத்தது தென்னாபிரிக்கா.


தென்னாபிரிக்க- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 2-வது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நடைபெற்று வருகிறது. முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து அணி 629 ரன்கள் குவித்து டிக்ளேர் செய்தது.

629 ரன்கள் குவித்ததால் தென்னாபிரிக்கா இந்த டெஸ்டிலும் தோல்வியடைய வாய்ப்பு இருக்கிறது என்று எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், தென்னாபிரிக்கா அணியும் தக்க பதிலடி கொடுத்தது. அந்த அணியின் தொடக்க வீரர் வான் சைல் 4 ரன்னில் ஏமாற்றம் அடைந்தாலும், மற்றொரு தொடக்க வீரர் எல்கர் 44 ரன்கள் எடுத்தார். ஆனால், 3-வது நபராக களம் இறங்கிய அம்லா அபாரமாக விளையாடி 201 ரன்கள் குவித்தார். இவருக்குத் துணையாகடி வில்லியர்ஸ் 88 ரன்னும், டு பிளசிஸ் 86 ரன்னும் சேர்த்தனர்.

6-வது நபராக வந்த பவுமா சிறப்பாக விளையாடி சதம் அடித்தார். இதுதான் அவரது முதல் சதம் ஆகும்.





டி ஹொக் 5 ரன்னிலும் ஏமாற்றினாலும், ஆல்ரவுண்டர் மோரிஸ் 69 ரன்கள் எடுத்தார்.

பவுமாவின் சிறப்பான ஆட்டத்தால் தென்னாபிரிக்கா அணி 627 ரன்கள் குவித்திருக்கும் போது தனது முதல் இன்னிங்சை டிக்ளேர் செய்தது. பவுமா 102 ரன்கள் குவித்து அவுட்டாகாமல் இருந்தார்.

பின்னர் 2 ரன்கள் முன்னிலையுடன் இங்கிலாந்து 2-வது இன்னிங்சை தொடங்கியது. நேற்றைய 4-வது நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி 16 ரன்கள் எடுத்துள்ளது. இன்று இறுதிநாள் ஆட்டம் நடைபெறவுள்ளது. இரண்டு அணிகளும் 2-வது இன்னிங்சை விளையாட வேண்டியிருப்பதால் இந்த டெஸ்ட் சமநிலையில் முடிய வாய்ப்புள்ளது. (க)

## மரண அறிவித்தல்

### அமரர் கிருஷ்ணர் குணரத்தினம்

(ஓய்வுநிலை தபால் ஊழியர், அல்வாய் வடக்கு)



அல்வாய் வடக்கு நதுவோலையை பிறப்பிடமாகவும் நாயன்மார்க்கட்டை வசிப்பிடமாகவும், தற்போது கொற்றாவத்தை மலையன் தோட்டத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணர் குணரத்தினம் அவர்கள் 04.01.2016 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணர் பொன்னம்மா தம்பதிகளின் பாசமிகு மகனும் அமரர்களான மார்க்கண்டு, புத்திசிகாமணி (முருகேசு), புவனேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற குகவதியின் அன்புக் கணவரும், குணசீலன் (ஜேர்மன்), அனுரா (கனடா), குகநேசன் (கனடா), சௌசல்யா (ஆசிரியை-கொழும்பு), லக்ஸ்மணஸ்ரீ (பொறியியலாளர்-யூரோவில்), ரமணன் (சிலிங்கோ பொதுக் காப்புறுதி அலுவலர், அச்சுவேலி), ஜீவிதா (அமெரிக்கா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சாமினி, சற்குணதாஸ் (கனடா), வனிதா (கனடா), உமாசங்கர் (உயிரியல்துறை, ஆசிரியர்), அகல்யா (மேம்படுத்துகை உத்தியோகத்தர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்), சுகந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை), பிரசாத் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும், அனுஷா, நிரோசன், ஜெனிஷா, சாரங்கன், தாரகா, ராதிகா, மஹேறாற்கரன், பார்கவி, சாம்பவி, அபிலாசா, அகர்ஷன், அத்மிகா, அத்விகன், தனுஷ்ரிகா, லக்ஷயன் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் வெள்ளிக்கிழமை (08.01.2016) காலை பத்து மணியளவில் மலையன் தோட்டம், கொற்றாவத்தை எனும் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மலையன் தோட்டம்
கொற்றாவத்தை. (இ)

தகவல்:-குடும்பத்தினர்.
தொ.பே:-0779773002

## இளைஞன் ஒருவன் சடலமாக மீட்பு

(பன்னீருற்று)

தூக்கில் தொங்கிய நிலையில் இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

இச் சம்பவம் நேற்றுக்காலை 6 மணியளவில் முல்லைத்தீவு உடுப்புக்குளம் அலம்பில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப இளைஞனின் தயார் நித்திரையில் இருந்த தனது மகனை காணவில்லை என தேடிய போது வீட்டில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நடராஜா நாகநந்தன் (வயது 20) என்ற இளைஞனே இவ்வாறு உயிரிழந்தவராவார்.


மீட்கப்பட்ட இளைஞனின் சடலம் மாஞ்சோலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை முல்லைத்தீவு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (செ-12,292)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## மரண அறிவித்தல்

### கந்தப்பு ஜெயராசா



கரவெட்டியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கந்தப்பு ஜெயராசா நேற்று (05.01.2016) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் கந்தப்பு-சிவகாமியின் அன்பு மகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும், விமல்ராஜா, தவராசா (பவா), காலஞ்சென்ற சிவராசா (அப்பர்), (அஜா கிறீம் ஹவுஸ் உரிமையாளர் மற்றும் சுந்தர்ராஜா, வில்வராஜா (கனடா), நளாயினி (நோர்வே) ஆகியோரின் சகோதரரும், வர்மேந்திரா, ஜெயந்தா, திவ்வியாவின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.01.2016) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் ஒரு மணியளவில் தகனக்கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி-3341) தகவல்:-குடும்பத்தினர்.

# அஞ்சலிக் கூட்டம்

## திருமதி நாகநந்தினி குணராஜ் (நந்தினி)



முன்னைநாள் 180, நாவலர் வீதியில் பிரபல வைத்தியராக கடமையாற்றிய டாக்டர் சோமசேகரம் சண்முகலிங்கம் அவர்களின் புதல்வியும் திரு.ராஜேந்திரன் குணராஜ் (கனடா) அவர்களின் மனைவியும் மதுமிதாவின் தாயாருமான திருமதி நாகநந்தினி குணராஜ் 08.12.2015 அன்று கனடாவில் காலமானார். அவர்கள் தனது இல்லத்தை மாற்றுவலுவுடையோரின் பாவனைக்காக பல வருடங்கள் தந்து உதவியவர். பின்னர் சங்கத்திற்கே கொடுத்தவர்.

அன்னாரின் ஞாபகார்த்தமாக ஒரு அஞ்சலி கூட்டம் வியாழக்கிழமை 07.01.2016 அன்று காலை 10 மணிக்கு நடைபெறும்.

திருமதி நந்தினியுடன் தொடர்புடைய அனைவரையும் பயன்பெற்ற மாற்றுத் திறனாளிகள் அனைவரையும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

நிர்வாக சபை,
வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கம்,
47/2, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

(சி-3333)





# யாழ். மாவட்ட முச்சக்கர மோட்டார் ஊர்தி உரிமையாளர் சங்கம் (தலைமையகம்)

TP: 021 320 5722
Reg.No.8232

40, முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம்.

### வருடாந்தப் பொதுக்கூட்டமும், புதிய நிர்வாகத் தெரிவும்.

எமது சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் கடந்த 20.12.2014 இல் தலைவர் திரு.மு.தர்மகுலராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றதன் பின் தற்காலிக அவைத் தலைவர் திரு.து.யோகராசா அவர்கள் தலைமையில் 2016 ஆம் ஆண்டிற்கான புதிய நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

### புதிய நிர்வாக சபை உறுப்பினர் விபரம்

| | |
|---|---|
| 1.திரு.இ.விஜயராசா அவர்கள் தலைவர் | V-3 |
| 2.திரு. செ.யோகநாதன் அவர்கள் உப தலைவர் | V-3 |
| 3.திரு. சி.கிரிதரன் அவர்கள் செயலாளர் | C-2 |
| 4.திரு. தே.நிக்கொலஸ் ஜோண்சன். அவர்கள் உப செயலாளர் | B-C-57 |
| 5. திரு. சீ.சிறீதரன் அவர்கள் பொருளாளர் | H-1 |
| 6.திரு. த.சுகந்தன் அவர்கள் நிர்வாக உறுப்பினர் | C-J-34 |
| 7.திரு.சி.நாகேஸ்வரன் அவர்கள் நிர்வாக உறுப்பினர் | H-1 |
| 8. திரு. செ.செல்வக்குமார் அவர்கள் நிர்வாக உறுப்பினர் | C-2 |
| 9.திரு.ப.மயூரன் அவர்கள் நிர்வாக உறுப்பினர் | R-X-85 |
| 10. திரு.சி.சிவராசா அவர்கள் போசகர் | V-3 |

**குறிப்பு:-பழைய (2015) புதிய (2016) நிர்வாகிகள் ஒன்றுகூடலும்பொறுப்புஒப்படைத்தல்பொறுப்பேற்றல்நிகழ்வும் 06.01.2016 இன்று புதன்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ளது.**

(சி-3233)

இங்ஙனம்
நிர்வாகம்



Schweizerische Eidgenossenschaft
Confédération suisse
Confederazione Svizzera
Confederaziun svizra

Swiss Agency for Development and Cooperation SDC
Swiss Cooperation Programme Office Jaffna

# INVITATION FOR BIDS: SALE OF USED MOTOR CYCLES – SDC JAFFNA

1.The Head of Programme Office, Swiss Agency for Development and Co-operation, Jaffna on behalf of the tender board invites sealed bids for the sale of the under mentioned used motor cycles belonging to the SDC Jaffna Programme.

2.

| NO | Description | Registration Number | Year of Make |
|---|---|---|---|
| 01 | Hero Honda, Super splendor | NP WL 8826 | 2011 |
| 02 | Hero Honda, Super splendor | NP WL 8829 | 2011 |
| 03 | Hero Honda, Super splendor | NP WL 8834 | 2011 |
| 04 | Hero Honda, Super splendor | NP WN 6669 | 2011 |
| 05 | Hero Honda, Super splendor | NP WN 6681 | 2011 |
| 06 | Hero Honda, Super splendor | NP WU 1937 | 2011 |
| 07 | Hero Honda, Super splendor | NP WU 1941 | 2011 |
| 08 | Hero Honda, Super splendor | NP WU 1948 | 2011 |
| 09 | Hero Honda, Super splendor | NP WU 1952 | 2011 |
| 10 | Hero Honda, Super splendor | NP XR 1175 | 2012 |
| 11 | Hero Honda, Super splendor | NP XR 1179 | 2012 |
| 12 | Hero Honda, Pleasure | NP XR 1208 | 2012 |
| 13 | Hero Honda, Pleasure | NP XR 1216 | 2012 |
| 14 | Hero Honda, Super splendor | NP XR 1224 | 2012 |
| 15 | Hero Honda, Super splendor | NP XR 5878 | 2012 |
| 16 | Hero Honda, Super splendor | NP XR 5883 | 2012 |
| 17 | Hero Honda, Super splendor | NP XR 5871 | 2012 |
| 18 | Hero Honda, Super splendor | NP BAF 721 | 2013 |
| 19 | Hero Honda, Super splendor | NP BAF 734 | 2013 |
| 20 | Hero Honda, Super splendor | NP BAF 738 | 2013 |

3.Motor Cycles could be inspected only during the office hours (8:00 AM – 05:00 PM) from 06.01.2016 to 10.01.2016 at SDC Jaffna Office, 18/10, Wyman Road, Jaffna.

4.Separate tender for each offer, one tender should carry only one bid. Any bidder violating the above conditions will be rejected.

5.The envelope and the bidding document should state the registration number of the motorcycle.

6.Completed sealed bids should be deposited to the tender box kept at the same address on or before the 10.01.2016 before 05:00 PM. The price offer must be indicated in Sri Lanka Rupees Only.

7.Opening of bids will be held on 11.01.2016 at 10:00 AM and the selected bidders will be notified on the same day. Bidder or the representatives of the bidder could be present at the bids opening meeting and we strongly encourage the presence.

8.The bidder has to accept that the motor cycle will be sold in its current conditions and that SDC has no further obligations to supply spare parts or provide any after-sale repairs or maintenances. SDC reserve the right to make the final decision to select the bidder and is entitled to cancel partially or fully the entire sales procedures at any time with or without giving any reasons.

9.The selected bidder should confirm their interest within 1 day after receiving the information's from SDC and the full payment has to be made before 13.01.2016. The ownership transfer could be done only in the name of the selected bidder, no exception will be given. The buyer should be responsible for changing the ownership, transfer fees related to the motor cycles.

10.The buyer has to submit the new registration book and should remove the motor cycle from the SDC premises before 18.01.2016. The Motor cycle will not be released from the premises without the presenting a copy of transferred registration book for reference and return.

11.One bidder gets one motorcycle only.

12.In case one bidder submitted highest bids for more than one motorbike, the bidder has to go for the highest bid.

**Head of the Programme Office**
**Swiss Agency for Development and Co-operation (SDC)**
**Swiss Co-operation Programme Office Jaffna**
**18/10, Wyman Road, Jaffna, Sri Lanka 05.01.2016**

(C-3334)


# இராசி பலன்

06.01.2016
(மார்கழி 21, புதன்கிழமை)
சூரிய உதயம் காலை 6.24மணிக்கு,
துவாதசி முழுவதும்
விசாகம் காலை 7.12 மணிவரை
சுபநேரம் 5.01-6.31 மணிவரை
இராகுகாலம் 12.31-2.01 மணிவரை
வைஷ்ணவ ஏகாதசி விரதம்
சித்தாமிர்தம்

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி | | |
| சூரி<br>புத | சனி<br>சுக்<br>சந் | செவ் | குரு<br>ராகு |

**மேடம்** தேகாரோக்கியத்தில் கொஞ்சம் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்,கூட்டாளிகளை அனுசரித்துச் செல்வது நல்லது, வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள்.

**இடபம்** நண்பர்களால் வளர்ச்சி கூடும் நாள்,ஆடம்பரப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்,கலகலப்பான தகவல்கள் வந்து சேரலாம்,போசன சுகமுண்டு.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காண்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த குழப்பங்கள் தீரும்.

**கடகம்** தொழிலில் புதிய பொறுப்புக்கள் வந்து சேரலாம், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்,கல்வி நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**சிம்மம்** தாயின் உடல்நலன் சீராகும், தொலைபேசி வழியில் சுபதகவல்கள் வந்து சேரலாம், தொழில் முயற்சியில் அதிக பிரயாசை காட்டுவீர்கள்.

**கன்னி** கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக வள்ளல்களின் உதவியை நாடுவீர்கள், குடும்பத்தில் நில விய குழப்பங்கள் அகலும், வெளியூர்த் தொடர்புகள் நன்மை தரும்.

**துலாம்** உங்களின் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், நிலையான வருமானத்திற்கு வழிசமைத்துக் கொள்வீர்கள்,சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**விருச்சிகம்** விரும்பிய காரியம் விரும்பியபடியே நடைபெறும் நாள், குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், கௌரவமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**தனுசு** வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், இடமாற்றம், ஊர்மாற்றம் என்பன இடம் பெறலாம்.

**மகரம்** தனவரவு திருப்திகரமாக அமையும்,இறை வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்,குடும்ப மகிழ்ச்சி கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கும்பம்** நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் பெருகும்,கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்,எதிர்கால முன்னேற்றம் கருதிய புதிய திட்டமொன்றைத் தீட்டுவீர்கள்.


**மீனம்** அன்பால் சாதித்துக் காட்டும் நாள்,அரைகுறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

### கடற்படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள

# நெடுந்தீவு மாவலி துறைமுகத்தை உடன் மீட்டுத்தருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

**நெடுந்தீவு மாவலி துறைமுகத்தை கடற்படையினரிடம் இருந்து மீட்டுத்தருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனிடம் யாழ் கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளனத்தினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



வடமாகாண கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசனுக்கும் யாழ் கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசங்களின் சம்மேளன உறுப்பினர்களுக்குமிடையே கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன அலுவலகத்தில் நடைபெற்றது .

இது தொடர்பாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன உப தலைவர் வே.தவச்செல்வம் கருத்துத்தெரிவிக்கையில்,

யாழ்.மாவட்டத்தில் மீனவ சமூகத்தினர் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக அமைச்சருடன் கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தோம்.

குறித்த கலந்துரையாடலில் இந்திய மீனவர் அத்துமீறல்களால் எமது சமூகம் பாரிய நட்டத்தினை எதிர்கொண்டுள்ளது. எனவே இது தொடர்பாக சுமுகமான முடிவை எடுப்பதற்காக வடமாகாண முதலமைச்சர் ஊடாக ஜனாதிபதியை சந்திப்பதற்கு ஏற்பாடு செய்து தரும்படி கோரிக்கை விடுத்துள்ளோம்.

அத்துடன் மயிலிட்டி துறைமுகத்தை பயன்படுத்த அனுமதி தரவேண்டும் என கூறி வடமாகாண சபையால் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படவேண்டும் எனவும் மீனவ சமுதாயம் பெற்றுக் கொண்ட வங்கிக்கடன்களை ரத்து செய்ய வேண்டும் எனவும். கடற்றொழிலாளர்சம்மேளனத்துக்கென நிரந்தர கட்டடம் ஒன்றினை அமைத்து தர வேணடும் எனவும் கோரியிருந்ததோடு பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடியிருந்தோம்.

மேற்குறிப்பிட்ட பிரச்சினைகள் தொடர்பாக குறித்த தரப்பினருடன் பேசி நடவடிக்கைகள் எடுப்பதாக அமைச்சர் உறுதிமொழி அளித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

# விண்ணப்ப காலம் நீடிப்பு

சர்வோதயம் அமைப்பினால் தொழில் பயிற்சி கற்கை நெறிக்காக கோரப்பட்டிருந்த விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் நீடிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாவட்ட சர்வோதய அமைப்பின் இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன்தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக கனேடிய பல்கலைக்கழக நிறுவனத்தின் அனுசரணையுடன் சர்வோதயம் அமைப்பின் யாழ் மாவட்ட அலுவலகம் மற்றும் வடமாகாண சுற்றுலாத்துறை சம்மேளனத்துடன் இணைந்து தொழில் பயிறசி கற்கை நெறிகளை முன்னெடுத்து வருகின்றன.

நடுத்தர வருமானத்தை ஈட்டும் குடும்பங்களில் உள்ள இளைஞர், யுவதிகளை சுயதொழில் பயிற்சி ஊடாக அவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவற்கு உதவுவதை நோக்கமாக கொண்டு இப் பயிற்சி நெறிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் சர்வோதயம் அமைப்பின் யாழ். மாவட்ட அலுவலகத்தினால் சுற்றுலாத்துறையும் விருந்தோம்பலும் மற்றும் மோட்டார் வாகன பழுது பார்த்தல் ஆகிய கற்கை நெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

குறித்த கற்கை நெறிகளுக்காக கடந்த டிசெம்பர் மாதம் 5 ஆம் திகதி தொடக்கம் இந்த வருடம் ஜனவரி மாதம் 5 ஆம் திகதிக்குள் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆயினும், காலநிலை சீர்கேடு மற்றும் பண்டிகைக் காலங்கள் காரணமாக கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டதாக பலர் கருத்து தெரிவித்திருந்தனர்.

இந்நிலையில் குறித்த கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை நீடிக்கப்பட்டிருக்கின்றது. அதன்படி இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 15 ஆம் திகதி வரையில் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரிகள் இணைப்பாளர், சர்வோதயம், இலக்கம் 568, நெடுங்குளம் சந்தி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு விண்ணப்பிக்க முடியும். அத்துடன் மின்னஞ்சல் (E.mail) மூலமாக விண்ணப்பிப்பவர்கள்Jaffna@sarvodaya.org எனும் முகவரி ஊடாகவும் தமது விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறும் மேலும் தெரிவித்தார். (இ-9)

# தீக்காயங்களுக்குள்ளான குடும்பப்பெண் உயிரிழப்பு

தீக்காயங்களுக்குள்ளான நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இளம் குடும்பப் பெண்ணொருவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் கடந்த சனிக்கிழமை உயிரிழந்துள்ளார்.

முல்லைத்தீவு கேப்பாப்புலவைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தாயான பாஸ்கரன் செல்லக்குமாரி (வயது-30) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது,

குறித்த பெண் கடந்த நவம்பர் மாதம் 12 ஆம் திகதி அன்று தனது வீட்டில் நுளம்புகளை அழிப்பதற்காக புகை வைத்துள்ளார். இதன் பின்னர் அப்புகை கொண்ட நெருப்புக்கு மண்ணெண்ணெய் எடுத்து ஊற்றியவேளை அந் நெருப்பானது பரவலாக எரியத் தொடங்கியதுடன் இப் பெண் மீதும் தீ பரவியது.

பின்னர் உறவினர்களின் உதவியுடன் தீ அணைக்கப்பட்டு வைத்தியசாலைக்குஅனுப்பிவைக்கப்பட்டார்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டு ஒன்றரை மாதங்களாக சிகிச்சை பெற்று வந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி கடந்த சனிக்கிழமை உயிரிழந்தார்.

பெண்ணின் சடலம் பிரேத பரிசோதனையின் பின்னர் நேற்றையதினம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (இ-5-30)

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள்-2015

**யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி**

**கலைப்பிரிவு**

ஐ.சோபிசா-ஏ2பி, ரி. யூடித்தர்மிகா-ஏ2பி, எஸ்.ரேவதி-ஏபிசி, ஐ.லக்சாந்தி-ஏபிசி, செ.பிரசாந்தினி-ஏ2சி,ரி.சயந்தினி-ஏ2சி, பி. சிவகாமசுந்தரி-3பி, ஏ.விஜிதா-2பிசி, ரி.சாரங்கன்-2பிசி, ஐ.சுகன்ஜா-பி2சி, ஆர்.மதுர்க்கா-பி2சி, எஸ்.மாதவி-பி2சி, எஸ்.கௌசிகா-பிசிஎஸ், என்.பிரணவி-3சி, பி.சதுர்சன்-3சி, ரி.விஜிபா-3சி, ஏ.நிவேஜா-3சி, ரி.தர்ஷிகா-பிசிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**

கே.கயூரன்-ஏ2பி, எஸ். இசையரசி-2ஏசி, எஸ்.கிரிசாந்- 2சிஎஸ், எஸ்.நிர்மலா-3சி

**யாழ்.இந்து மகளிர் கல்லூரி**

**விஞ்ஞானப்பிரிவு**

எஸ்.நிவேதிகா-2ஏபி, எஸ்.சுபலட்சுமி-ஏ2பி, ஏ.மேசிஞானரூபி-ஏ2பி, எம்.ஆத்மிகா-ஏபிசி, ஜெ.டிசாயினி-ஏசிஎஸ், எஸ்.அம்பிகா-ஏபிசி, பி.துசாங்கி-ஏபிசி, எஸ். சாம்பவி-ஏ2சி, எஸ்.நிசோபா-ஏஎஸ்சி.

**வர்த்தகப்பிரிவு**

என்.வேணுஜா-3ஏ,ரிபிரதாயினி-3ஏ, எஸ்.துவாரகா-2ஏபி, ஆர்.ரம்ஜிதா-2ஏபி, ஜி.மஜிதா-2ஏபி, ஏ.சிவமுகுந்தினி-2ஏபி, கே.மிதுஷா-ஏ2பி, லவண்யா-ஏ2பி.

**கலைப்பிரிவு**

ஐ.ஜனனி-3ஏ, கே. மதிவதனி-3ஏ, ரி.காவேரி-2ஏபி, எல். தயாலக்சி-2ஏபி, எஸ்.விதுர்சனா-2ஏபி, ஆர்.கோபினா-2ஏசி, எஸ். காயத்திரி-2ஏசி, கே.பிரியதர்சினி-2ஏசி, பி.மதுஸ்கா-2ஏஎஸ், எஸ்.தேவகி-ஏபிசி, என்.மதுரா-ஏ2சி, கே.மதினி-ஏ2சி, ரி.இளமதி-ஏ2சி, கே.கிருஜா-ஏ2சி, எஸ்.கல்பனா-ஏ2பி, இ.ரூபினி-ஏபிசி, கே.லக்சனா-3பி, யு.லக்சனா-3பி, ரி.தாட்சாயினி-3பி

**யா/ஸ்கந்தவரோதய கல்லூரி**

**பௌதீக விஞ்ஞானப்பிரிவு**

எஸ். ஆறுமுதன்-சி2எஸ், எஸ்.அனுசன்-சி2எஸ்.

**உயிரியல் விஞ்ஞானப்பிரிவு**

பி.டிவின்சிகா-2சிஎஸ், ரி.நிறோஜன்-3எஸ், ஜே.வஸ்மியா-3எஸ்,

**வர்த்தகப்பிரிவு**

இ.லக்ஷி-2ஏபி, ரி.விரதசரணி-2ஏபி.

**கலைப்பிரிவு**

கே.கஜானா-2ஏசி, எஸ்.தர்சிகன்-ஏ2பி, ஏ.சர்மிலா-2ஏசி, வி.குலைவாணி-2பிசி, ஜே.அஜித்தன்-ஏ2சி, எம்.நிறோஜினி-2பிசி, வி.கல்யாணி-ஏபிஎஸ், பி.நளாயினி-2பிசி, ரி.தனுரேகா-ஏபிசி, என்.திவாகர்-ஏபிசி, ஏ.அனுசியா-பிசிஎஸ், எல்.அனரெனிலோஜிகா-ஏசிஎஸ்.

**யா/கொக்குவில் இந்துக் கல்லூரி**

**வர்த்தகப்பிரிவு**

வி.சொரூபினா-ஏ2பி

**கணிதப்பிரிவு**

எஸ்.கபில்ராஜ்-3சி

**உயிரியல்துறைப்பிரிவு**

எல்.வேணிகா-ஏபிசி, கே.ஜஸ்மிதா-ஏ2சி





அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளாரின் செய்தி நடத்துநர் பணியின் அடிப்படைகள் என்ற 11 ஆவது ஊடகவியல் நூல் வெளியீடும் யாழ்.ஆயருக்கும் அர்ப்பணம் செய்யப்பட்ட நேரலை பத்திரிகையியல் ஓர் அறிமுகம் என்ற 12 ஆவது ஊடகவியல் நூல் வெளியீடும் அண்மையில் கத்தோலிக்க அச்சக பாதுகாவலர் மண்டபத்தில் நடைபெற்ற போது...

# மாற்றத்தின் திறவுகோலாக தமிழ் மக்கள் பேரவை

## வறட்டு கௌரவங்களை விடுத்து தலைமைகள் ஒன்றிணைய வேண்டும்

தமிழர் தலைவிதியை தீர்மானிக்கப் போகின்ற தத்தெடுப்பை தமிழ் மக்கள் பேரவை இன்று கையில் எடுத்திருக்கின்றது.

வரவேற்கத்தக்கதான இச்செயலை ஊக் கப்படுத்தி அதனை பலப்படுத்துவதற்கான ஆலோசனைகளை முன்மொழிவுகளாக தமிழ் மக்கள் பேரவைக்கு வழங்க வேண் டியது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் தலையாகிய கடமையுமாகும்.

இதில் எவரும் அவருக்கு அழைப்பு விடுத் தார்கள் எனக்கு விடுக்கவில்லை என்பத ற்காக ஒதுங்கி நிற்கக்கூடாது.


இந்த தமிழ் மக்கள் பேரவையினை உருவாக்குவதற்கும் அதன் சாதக பாதக தன் மைகள் தொடர்பில் சிந்திப்பதற்கும் விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலர்தான் தமது மண் டையை போட்டு குடைந்திருக்கின்றார்கள்.

இந்நிலையில் இதை வெறுமனே அரசியல் சார்புடையவர்கள்தான் தோற்றுவித்திருக்கின றார்கள் என்கின்ற புறநடையான ஊடகப் பரப் புரைகள் உண்மை நிலைக்கு அப்பாறபட்டது.

இந்த அமைப்பில் அரசியலுக்கு அப்பால் இயங்கு நிலையில் உள்ள ஏனைய துறை கள் தான் பெரும்பான்மையாக இருக்கின் றன என்பதையும் புரிந்து கொள்ள வேண் டும்.

இவ்வாறானதொரு நிலையில் புறத்தே இருந்து வெட்டித்தனமான விமர்சனங் களையும் ஊடக அறிக்கைகளையும், ஊடக மாநாடுகளையும் நடத்துவதை விடுத்து இந்த புதிய சிந்தனைக்கு எந்த வகையில் ஆதரவு வழங்கலாம், வலுச்சேர்க்கலாம் என்பது தொடர்பில் சிந்திக்க முயற்சிக்க வேண்டும்.

அதற்கு முடியாது என்றால் எங்கேயாவது



ஒரு மூலையில் போய் ஒதுங்கி நிற்பது அதைவிட மேலானதாகவும் இருக்கும்.

கட்டப்பட்ட மணியினை எவரும் தொங் கித் தொங்கி இழுத்து அடிக்கலாம், ஆனால் அந்த மணியினை கட்டுவதற்கு முதலில் முயற்சி எடுத்திருக்க வேண்டும்.

எந்தவொரு அரசாங்கமும் முன்னெடுக்க உத்தேசித்திருக்காத விடயமான புதிய அரசியலமைப்பை உருவாக்கும் முயற் சியை தற்போதைய புதிய அரசாங்கம் முன் னெடுத்திருக்கின்றது. இதில் தமிழ் மக்களின் அபிலாசைகள், கருததுக்கள், அரசியல் உரி மைகள் உள்ளடக்கப்பட வேண்டிய தேவை அதிகமாகவே இருக்கின்றது.

இதனை இலக்காகக்கொண்டு செயற்றி றன் மிக்கதான பணியினை முன்னெடுக் கும் முயற்சியினை இதுவரை காலத்தில் தமிழ் அரசியல் தலைமைகள் முன்னெடுக் கத் தவறியதாகவே தெரிகின்றது.

அதிலும் குறிப்பாக தமிழ் மக்களின் தலைவிதியினை நாம்தான் தீர்மானிப்போம் எனும் சண்டித்தன பாணியிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த முயற்சியையும் எடுத்திருப்பதாக தெரியவிலை.

இவ்வாறான நிலையினை ஊகித்ததால் தமிழ் மக்கள் பேரவையின் தோற்றம் என்பது காலத்தின் கட்டாயமாகவே மாறிவிட்டது எனலாம்.

தேசிய இனப்பிரச்சினைக்கு சிறந்த தீர்வாக சமஷ்டி முறையே பலராலும் பிரஸ் தாபிக்கப்படுகின்றது. இது ஒருவகையில் நியாய பூர்வமானதாகவும் இருக்கலாம்.

ஏனெனில் இலங்கை என்பது பல்லின, பல்தேசிய மற்றும் பல்வேறு கலாசார சூழலை கொண்டமை ஒரு காரணமாகும்.

ஒற்றையாட்சி என்பதன் கீழான நிர்வாக முறைமை அல்லது ஆட்சி முறை என்பது இன்றைய காலகட்டத்தில் பொருந்தாத ஒன்றாகவே இருக்கின்றது.

தமிழர் தேசிய பிரச்சினை என்பது சுமார் எழுபது வருடங்களை அண்மித்து வரும் நிலையில் அதற்கான நீதியானதும், நிலை த்து நிற்கக் கூடியதுமான தீர்வும் எட்டப்பட வேண்டிய தேவை காலத்தின் கட்டாயமாகவே பார்க்கப்படுகின்றது. ஆளுக்காள் பழைய பஞ்சாங்கத்தை மாறி மாறி புரட்டுவதை விடு த்து பெரும்பாலும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு புள்ளியில் ஒத்திசைய வேண்டும்.

**இவ்வாறான நிலையில் இந்த தேசிய இனப பிரச்சினை எனும் கருப்பொருளை எத்தனை தலைமுறையினர்க்கு கடத்தப் போகின்றோம் என்பதுதான் எமக்கே தெரியாத அதேவேளை எம்முன் இருக்கும் ஒரு கேள்வியாகும்.**

ஏதோ ஒரு இடத்தில் தொடக்கப்புள்ளி வைக்க வேண்டும். அதனை யார், எதனால், எப்படி, எங்கு..? வைப்பது என்பது முக்கியமல்ல.

மாறாக ஒன்றுபட்ட, ஐக்கியப்பட்ட கூட்டு நடவடிக்கைகளே அதற்கு இன்றியமை யாததாகும் என்பதே கடந்த காலத்திலிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடமா கும்.

அதற்கு யார் யார் எல்லாம் தமிழர் தலை விதியை நாம்தான் தீர்மானிப்போம் என புறப்பட்டார்களோ அவர்கள் அத்தனை பேரும் ஓரிடத்தில சங்கமிக்க வேண்டும். தங்களுக் குள் அடிபடுவதை முதலில் நிறுத்திக் கொண்டு ஒன்றாக சேர்வது பற்றி சிந்திக்க வேண்டும். சாப்பாட்டு மேசைகளில் மட்டும் ஒன்றுபட்டு உண்பதால் எதுவும் பெரிதாக நடக்கப் போவதில்லை.

மாறாக **அரசியல் தளத்தில் ஒன்றாக ஆற அமர இருந்து விவாதிக்க முன் வரவேண்டும். அப்போதுதான் எங்க ளுக்குள் ஒரு தெளிவு பிறக்கும்.**

சர்வதேசம் எமது பிரச்சினையை ஒரு பொது பிரச்சினையாக, பொருட்டாக கருத்தில் எடுக்க வேண்டுமானால் முதலில் எங்களுக் குள் தெளி வான ஒருமித்த கருத்து இருக்க வேண்டும்.

**ஜேம்ஸ்**

# மக்களின் ஆணையை எட்டி உதைத்துவிட்டு ஜனாதிபதியும் பிரதமரும் பயணிக்கின்றனர்

## ஜே.வி.பி. கடும் விசனம்

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 8ஆம் திகதியன்று இந்நாட்டு மக்கள் வழங்கிய ஆணையை எட்டி உதைத்துத் தள்ளிவிட்டு, ஜனாதிபதியும் பிரதமரும் பயணிக்கின்றனர் என்று மக்கள் விடுதலை முன்னணி தெரி வித்துள்ளது.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அந்த முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பின ரும் பிரசார செயலாளருமான விஜித ஹேரத் இவ்வாறு தெரிவித்தார்.

மக்களின் ஆணையை எட்டி உதைத் துவிட்டு பயணிப்பதனால்தான், கடந்த அரசாங்கத்தினால் நாட்டுக்குள் முன்னெடுக்



கப்பட்ட ரவுடித்தனம், யதார்த்தத்தில் அன் றிருந்ததைவிடவும் மேலோங்கி நிற்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

அரசாங்கத்தின் இந்த செயற்பாட்டை கண்டித்து நாளை மறுதினம் 8ஆம் திகதி யன்று எதிர்ப்புப் பேரணி மற்றும் கண்டன ஊர்வலத்தை நடத்துவதற்கு தீர்மானித் துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நுகேகொட- கொஹுவெல சந்தியிலி ருந்து நுகேகொட நகரம் வரையிலும் எதிர்ப் புப் பேரணியும் அதன்பின்னர் நுகேகொட நகரத்துக்குள் கண்டன ஊர்வலம் நடத் தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித் தார். (இ-7)


**யாரிடம் பேசுவது?**

யார் என்னைப் புரிந்து கொள்வார்?
நான் வாழ்ந்து என்ன பிரயோசனம்?
நான் என்ன தவறு செய்தேன்?
என்னால் ஒன்றுமே முடியாது
நான் என்ன செய்வது? என்று எண்ணுகின்றீகளா...

சனி - ஞாயிறு தினங்களில் முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை
திங்கள் - வெள்ளி முற்பகல் 9 மணிமுதல் பிற்பகல் 1 மணிவரை (2714)

**எம்முடன் பேசுங்கள்**

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மதசார்பற்றது ரகசியம் பேணப்படும்
021 222 8117, 077 900 8776
Sponsored By Enlightnment Circle, UK

**அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் கோவில் இலட்சார்ச்சனை பெருவிழாவில் இசை ஆராதனை செய்யும் கலைஞர்கள்**

**இசை ஆராதனை**
**நிகழ்ச்சி**
06.01.2016 புதன்கிழமை
பாட்டு: S.உமாரமணக் குருக்கள்
வயலின்: அ.ஜெயராமன்
மிருதங்கம்: நா.சிவசுந்தரசர்மா
கடம்: கு.ரவிசங்கர்
மோர்சிங்: சி.செந்தூரன்
(2901)

**முற்பகல் 11 மணிக்கு**

**இசை ஆராதனை அனுசரணை வழங்குவோர் முரளிதரன்,ஏழாலை.**

இவர்களுக்கு **மணமகள் தேவை** — **கல்யாண மாலை** — இவர்களுக்கு **மணமகன் தேவை**

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா:16<br>உயரம்: 5'11"<br>தகைமை/தொழில்:LLB, LLM/ சட்டத்தரணி லண்டன் குடியுரிமை<br>தொ.இ: B/5379 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: பூசம்<br>கி.பா: 95செவ் 7 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்:MSC ஜேர்மன் குடியுரிமை<br>தொ.இ: G/3975 |
| பிறப்பு: 1975 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 7<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில் : O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/5380 | பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 13சூரிசெவ் 11 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்:BSC/ NGO<br>தொ.இ: G/3980 |
| பிறப்பு: 1968 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 13சூரிசெவ் 9 ல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/அரசதொழில்<br>தொ.இ: B/5381 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>கி.பா: 43<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L/வங்கியாளர்<br>தொ.இ: G/3982 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 28செவ் 12 ல்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில் : O/L/ சொந்ததொழில்<br>தொ.இ: B/5383 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 86<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: வைத்திய கலாநிதி<br>தொ.இ: G/3983 |

**கல்யாண மாலை**
**(சர்வதேச திருமண சேவை)**
**இல. 144, பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்**
**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**
**தொடர்பு:-021 720 1005, 021 221 5434**
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )

முள்ளியவளை பொதுச்சந்தை வளாகத்தினுள்

# துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் அமைத்து நடைமுறைப்படுத்துங்கள்

## பொதுமக்கள்,வியாபாரிகள் பிரதேச சபையிடம் கோரிக்கை

(வற்றாப்பளை)

**முல்லைத்தீவு கரைதுறைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட பிரதான சந்தைகளில் ஒன்றான முள்ளியவளை பொதுச் சந்தைக்கு துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் ஒன்றை அமைத்து நடைமுறைப்படுத்துமாறு பொதுமக்கள், வியாபாரிகள்,நுகர்வோர் பிரதேச சபையிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.**

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மேற்படி பொதுச் சந்தைக்கு நாளாந்தம் பல நூற்றுக்கணக்கான பொதுமக்கள்,வியாபாரிகள் எனப் பல தரப்பினர்வருகை தருகின்ற னர்.

இவர்கள் கொண்டுவரும் துவிச்சக்கர வண்டிகள்,மோட்டார் வண்டிகள் என்பன பிரதான பாதை யோரமாக நிறுத்தப்படுவதால் நாளாந்தம் திருட்டுச் சம்பவங்கள் விபத்துக்கள் ஆகியன இடம்பெறுகின்றன. இதே வேளை பொது சந்தை வளாகத்தினுள் துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தை நடத்துவதற்கு போதுமான இடவசதியும் காணப்படுகின்றது.

எனவே உரிய தரப்பினர் உடனடியாக இதனைக் கருத்தில் கொ ண்டு துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையத்தை நடைமுறைப்படுத்தி திருட்டுக்கள்,விபத்துக்கள் என்பவற்றை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள், வியாபாரிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (2-310)

# பால் விற்பனை நிலையத்தை நேரத்திற்கு திறப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்க

## நுகர்வோர் கோரிக்கை

(வற்றாப்பளை)

முள்ளியவளை பால் பண்ணையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் பால் விற்பனை நிலையத்தை உரிய நேரத்திற்கு திறக்குமாறு நுகர்வோர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

முள்ளியவளை பிரதேசத்திலுள்ள பால் உற்பத்தியாளர்களை ஒன்றுதிரட்டி உருவாக்கப்பட்ட முள்ளியவளை பால் உற்பத்தியாளர் சங்கமானது முள்ளியவளை பிரதான வீதியில் பால் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வருகின்றது.

இந்நிலையமானது நுகர்வோரின் நேரத்திற்கு ஏற்றாற்போல் திறக்கப்படாது நேரம் கடந்த நிலையில் திறக்கப்படுகின்றது.

இதனால் பிரதான பால் நுகர்வோர்களான மாணவர்கள், உத்தியோகத்தர்கள் ஆகியோர் அதன் பயனை அடைய முடியவில்லை.

எனவே சம்பந்தப்பட்ட சங்க நிர்வாகத்தினர் இதனைக் கருத்திற் கொண்டு பால் விற்பனை நிலையத்தை உரிய நேரத்திற்கு திறப்பதற்கு ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் வேண்டுகோள் விடுக்கின்றனர். (2-310)




# பாதிக்கப்பட்ட மீனவருக்கு இழப்பீடு வழங்க வேண்டும்

## சாந்தி எம்.பி வலியுறுத்து

(மாமூலை)

முல்லைத்தீவுக்கடற்பரப்பில் முல்லைத்தீவைச்சேர்ந்த மீனவர் ஒருவரின் 6 இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடிப்படகு உட்பட்ட பொருட்கள் எல்லைதாண்டி வந்த இந்திய மீனவர்களின் ரோலர் படகு மோதியதில் முற்றாக சேதமடைந்துள்ளது.

அத்துடன் வலைகள் முற்றாக கடலில் மூழ்கியது.இதனையடுத்து மோதிச்சென்ற ரோலர் படகினை சுற்றிவளைத்துப்பிடித்த முல்லைத்தீவு மீனவர்கள் இந்திய மீனவர்கள் 8 பேருடன் ரோலர் படகினையும் கரைக்கு கொண்டு வந்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி ஸ்ரீஸ்காந்தராசா தெரிவித்துள்ளதாவது,

இந்திய மீனவர்களின் அத்துமீறிய இச்செயற்பாடுகள் அதிகரித்து வரும் நிலையில் இவ்வாறான சமபவங்கள் ஏற்படுவதற்கு இலங்கை கடற்படையினரின் கடமை தவறிய நிலையே காரணமாகும்.

குறிப்பாக முல்லைத்தீவு கடற்பரப்பிலிருந்து 5 கடல் மைல் தூரம் வரை அந்திய மீனவர்களின் ரோலர படகு வரும்வரை கரையோர த்தை பாதுகாக்கும் பணியிலீடுபட்டுள்ள கடற்படையினர் எங்கே போனார்கள் ?

இவ்வாறு திட்ட மிடப்பட்டு எமது கடல் வளங்கள் அழிக்கப்பட்டு வருகின்ற இந்நிலைமைக்கு கடற்படையினரின் கடமை தவறிய செயற்பாடுகளே காரணமாகும்.

இத்துடன் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவைச்சேர்ந்த மீனவரின் இழப்பீடு நிவர்த்தி செய்யப்படவும் வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.(2-301)

# டெங்கு நுளம்பு பரவும் இடங்களை அழிக்க 'வரும் முன் காப்போம்' திட்டம் ஆரம்பிப்பு



(குருமன்காடு)

வவுனியா வடக்கு பிரதேச செயலகப்பிரிவில், டெங்கு நோயில் இருந்து "வரும் முன் காப்போம்" திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

புளியங்குளம் தெற்கு கிராம சேவகர் பிரிவில் இவ் வேலைத் திட்டம் இடம்பெற்றதுடன், வீடு வீடாக டெங்கு பரவக்கூடிய இடங்களை அடையாளப்படுத்தியதுடன், டெங்கு நுளம்பு பரவக்கூடிய இடங்களை அதிகளவில் வைத்திருந்தவர்களுக்கு சிவப்பு எச்சரிக்கையும் வழங்கப்பட்டிருந்தது.

இதேவேளை, டெங்குபரவக்கூடிய இடங்களை அழிப்பதற்கான நடவடிகையும் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.(2-250)

# ஒட்டுசுட்டான் பிர.செயலகத்திற்கு பிரதேச செயலாளர் நியமனம்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத திற்கு பிரதேச செயலாளராக ய. அனுருத்திரன் நியமிக்கப்பட்டு நேற்று முன்தினம் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு நீண்ட நாட்களாக பிரதேச செயலாளர் ஒருவர் நியமிக்கப்படாதிருந்த நிலையில் உதவிப் பிரதேச செயலாளரே கடமையிலீடுபட்டு வந்தார. அந்த வகையில் புதிய பிரதேச செய லாளர் ஒருவர் நியமிக்கப்பட்டு ள்ளார்.

புதிய பிரதேச செயலாளராக ய.அனுருத்திரன் தனது கடமைகளை பொறுப்பேற்றுள்ளார். அண்மையில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்திற்கு உதவிப் பிரதேச செயலாளர் ஒருவரும் நியமிக்கப்பட்டிருந்தார். இப்பிரதேச செயலகத்திற்கு இன்னும் சில முக்கிய அதிகாரிகள் இல்லாமல் இருப்பதும் சில அதிகாரிகள் வேறு பிரதேச செயலகங்களில் கடமையாற்றிக் கொண்டு இங்கு பதில் கடமைகளை ஆற்றுவது குறிப்பிடத்தக்கது. (2-281)



(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஏ9 வீதியிலுள்ள கந்தசாமி கோயிலுக்கு முன்பாகவுள்ள எதிர்ப்பக்கத்தில் பியர் ரின்கள், ஏனைய பொருட்கள் குவிக்கப்பட்டு காணப்படுகிறது.

நகரப்பகுதியை அண்டிய இடத்தில் இது நடைபெறுவதால் சிறுவர்கள் இங்கு பியர் ரின்களை கையாளும் நடவடிக்கைகள் காணப்படுவதாகவும் இதனால் சமூகச் சீர்கேடுகள் ஏற்படும் வாய்ப்புக்கள் தென்படுவதாகவும் கோயில் வழிபாட்டிற்கு வருகை தரும் பக்தர்கள் சமூக ஆர்வலர்கள் ஆகியோரினால் சுட்டிக்காட்டப்படுகிறது.

இவ்விடத்தில் இது நடைபெறுவதற்கு பிரதேசசபையினரால் அனுமதி வழங்கப்பட்டுள்ளதா எனவும் பொதுமக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் இவ்விடயத்தில் கவனமெடுத்து சமூக சீர்கேடுகள் நடைபெறாத நிலையை ஏற்படுத்தித்தர வேண்டுமென பொதுமக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.(2-254)

## இந்திய மீனவர்கள் 8 பேரும் நீதிமன்றில் ஆஜர்

(தண்ணிரூற்று)

முல்லைத்தீவு கடற்பரப்பினுள் அத்துமீறிய இந்திய மீனவர்கள் 8 பேர் முல்லைத்தீவு மீனவர்களினால் பிடிக்கப்பட்டு முல்லைத்தீவு பொலிஸாரிடம் நேற்று முன்தினம் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டனர்.

அவர்கள் அனைவரும் நேற்று பிற்பகல் வைத்திய பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்தியசாலைக்கு பொலிஸாரினால் அழைத்து வரப்பட்டனர்.

இவர்கள் அனைவரும் வைத்திய பரிசோதனை முடிவடைந்ததும் முல்லை.மாவட்ட நீதவான் நீதிமன்றிற்கு அழைத்து செல்லப்பட்டு நீதவான் முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்டனர். முல்லைத்தீவு கடற்பரப்பில் வைத்து முல்லை.மீனவர்களின் படகினை மோதி சேதமாக்கியதையடுத்தே இவர்கள் பிடிக்கப்பட்டு கரைக்கு நேற்று முன்தினம் தீர்த்தக்கரைக்கு கொண்டு வரப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-292)

# முசலி கிராமத்தின் தேவைகளை எதிர்காலத்தில் முன்னேற்றுவேன்

## மன்/முசலி தேசிய பாடசாலை மாணவி தெரிவிப்பு



(மன்னார்)

சட்டத்தரணியாக வந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென்பதே எனது எதிர்கால கனவு என க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கலைப்பிரிவில் முதலிடம் பெற்ற மன்/முசலி தேசிய பாடசாலை மாணவி அலியார் ஸ்வீனா பேகம் தெரிவித்துள்ளார்.

3ஏ சித்திகளைப் பெற்று மன்னார் மாவட்டத்தில் முதல் இடத்தையும் ,தேசிய மட்டத்தில் 43 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

தனது தந்தை விவசாயத்தில் ஈடுபட்டு தனது கல்விக்காக பல்வேறு துன்பங்களை அனுபவித்தார். இந்த நேரத்தில் எனது பெற்றோருக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அத்தோடு எனது கற்றல் நடவடிக்கைக்காக பல்வேறு வகையிலும் உதவிகளை புரிந்த பாடசாலை அதிபர் , ஆசிரியர்கள் ஆகியோருக்கு எனது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு பின்தங்கிய கிராமமாக உள்ள முசலி கிராமத்தை எதிரகாலத்தில் முன்னேற்ற எனது பங்களிப்பு நிச்சயம் கிடைக்கும் என அவர் மேலும் தெரிவித்தார். (2-281)

# மக்களை ஏமாற்றி ஒருகோடி ரூபாய் பணத்தை சுருட்டிக்கொண்டு பெண்ணொருவர் தலைமறைவு

## மன்னார் பொலிஸார் வலைவிரிப்பு

(குருமன்காடு)

மன்னார் நகர் பகுதியில் குடும்பப் பெண் ஒருவர், அப்பகுதி மக்களிடம் சுமார் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் பணத்தை பெற்ற நிலையில் தப்பியோடியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணால் பாதிக்கப்பட்ட பலர், மன்னார் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மன்னார் உப்புக்குளம் புதுத்தெரு பிரதான வீதியை வதிவிடமாக கொண்ட குடும்ப பெண் ஒருவர், பல இலட்சம் ரூபாய் பணத்துடன் இந்தியாவிற்கு கடந்த வாரம் தப்பிச் சென்றுள்ளதாக பாதிக்கப்பட்டவர்கள் தெரிவிக்கின்றனர.

குறித்த பெண்ணின் கணவர் மத்திய கிழக்கு நாடொன்றில் பணி புரிந்து வரும் நிலையில் மன்னாரில் பல இடங்களில் வீடு வாடகைக்கு எடுத்து இரு பிள்ளைகளுடன் வாழ்ந்து வந்தார். வீட்டுடன் கூடிய அரிசி அரைக்கும் ஆலையை நடத்தி வந்த நிலையில் பலர் குறித்த பெண்ணிற்கு அறிமுகமாக இருந்தனர்.

இந்த நிலையில் குறித்த பெண் சீட்டு பிடித்தல், வட்டிக்கு பணம் வாங்குதல் மற்றும் நகைளை தேவைக்காக வேண்டுதல் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வந்துள்ளார். நீண்ட காலமாக பிரஸ்தாப பெண் மக்களுடன் அன்புடனும் பண்பாகவும் நட்புறவை ஏற்படுத்தி வந்த நிலையில் இறுதி நேரத்தில் பழகிய உறவினர்களை ஏமாற்ற தொடங்கியுள்ளார்.

கடந்த 3 மாதங்களுக்கு முன்னர் பலரிடம் கடனாக பணத்தைப் பெற்றுக் கொண்டதுடன், பல இலட்சம் ரூபாய் பெறுமதியான நகைகளையும் வாங்கியுள்ளார். அது மட்டுமன்றி குழு அடிப்படையில் தனியார் நிறுவனங்களில் கடன்களையும் பெற்றுள்ளார்.

இரு பிள்ளைகளின் தாயான இவர், இறுதியாக மன்னார் உப்புக்குளம் புதுத்தெரு பிரதான வீதியில் வாடகைக்கு வீடு ஒன்றில் வசித்து வந்துள்ளார்.

மக்களை ஏமாற்றி பணம், நகை என சுமார் ஒரு கோடி ரூபாவிற்கு மேல் சுருட்டிக் கொண்டு தலைமறைவாகியுள்ளார். பிரஸ்தாப பெண்ணினால் ஏமாற்றப்பட்ட பலர் மன்னார் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

இந்த நிலையில் குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர. (2-250)

## ‘சிறுவர்களுடன்’ நூல் அறிமுக விழா

(புதுக்குடியிருப்பு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில் மருத்துவர் எஸ். சிவதாஸ் எழுதிய “சிறுவர்களுடன்” எனும் நூல் அறிமுக விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு புதுக்குடியிருப்பு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் கலாசார உத்தியோகத்தர் வீ.பிரதீபன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சுகாதார சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திருமதி சாந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் செ.பிரணவநாதன், துணுக்காய் பிரதேச செயலாளர் எஸ்.குணபாலன், யாழ். பல்கலைக்கழக மெய்யியல் உளவியல்துறை கலாநிதி க.கஜவிந்தன், முல்லைத்தீவு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி உ.முனீஸ்வரன், புதுக்குடியிருப்பு பிரதேச வைத்திய சாலை வைத்திய கலாநிதி சத்தியரூபன், துணுக்காய் உதவி பிரதேச செயலாளர் இபிரதாபன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலின் ஏற்புரையை மனநல வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி எஸ்.சிவதாஸ் ஆற்றுவார்.

நிகழ்வுகளாக வரவேற்பு நடனம், சிறுவர் நடனம், ஆய்வுரை என்பன இடம்பெறும். (2)

## தனியாருக்குச் சொந்தமான காணியிலிருந்து சக்தி வாய்ந்த வெடிபொருள் மீட்கப்பட்டுள்ளது



மன்னார் பரப்பாங்கண்டல் பாலைத்தாழ்வு பகுதியில் உள்ள தானியார் ஒருவரின் காணியில் இருந்து சக்தி வாய்ந்த வெடிபொருள் நேற்று முன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த காணியின் உரிமையாளர் தோட்டச் செய்கைக்காக தனது காணியில் உள்ள மேட்டு நிலப்பகுதியை உழவு இயந்திரத்தினால் உழுது கொண்டிருந்த போது புதைத்து வைத்திருந்த சக்தி வாய்ந்த வெடிபொருள்வெளியே வந்துள்ளது.

உடனடியாக காணியின் உரிமையாளர் மன்னார் பொலிஸாருக்கு தகவல் வழங்கிய நிலையில் மன்னார் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வெடிபொருளை மீட்டுள்ளனர். இதன்போது இராணுவத்தினரும் அப்பகுதிக்குச் சென்றனர்.

மீட்கப்பட்ட குறித்த வெடிபொருள் சுமார் 10 கிலோ கிராம் எடை கொண்டது எனவும், சக்தி வாய்ந்ததாக காணபடுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச்சம்பவத்தை தொடரந்து பொலிஸாரும் இராணுவத்தினரும் குறித்த பகுதியில் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டு வருகின்றனர். உரிய அனுமதியைப் பெற்று இந்த சக்தி வாய்ந்த வெடிபொருளை செயல் இழக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-281)

## வவுனியாவில் நேற்று ஆர்ப்பாட்டம்





(குருமன்காடு)

வவுனியா மதவு வைத்த குளம் கிராமத்திற்கு வருகின்ற அபிவிருத்தி திட்டங்களை மக்களின் கருத்துக்களை அறியாமல் செயற்படுத்தப்படுவதை எதிர்த்து வவுனியாவில் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

வவுனியா,மதவுவைத்தகுளம் கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடத்திற்கு முன்பாக இந்த ஆரப்பாட்டம் நேற்று இடம்பெற்றது.

இது தொடர்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

எமது கிராமத்திற்கு வருகின்ற அபிவிருத்தி திட்டங்களை இப்பகுதி கிராம அபிவிருத்திச் சங்கம் மற்றும் மக்களின் கருத்துக்களை அறியாது. செயற்படுத்தப்படுகின்றது. தற்போது எமது கிராமத்திற்கு குடிநீர் திட்டம் ஒன்று வழங்கபபட்டுள்ளது. அதனை எமது கிராமத்தின் பாலர் பாடசாலை கட்டடத்தின் ஒரு பகுதியை உடைத்து அமைக்க முனைப்பு காட்டப்படுகின்றது. ஆனால் எமக்கு பாலர் பாடசாலை வேண்டும். அதனை வேறோர் இடத்தில் அமைக்கலாம். அதற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்க நாம் தயாராக இருக்கின்றோம். இதனை பல தரப்பினரிடமும் தெரிவித்தும் அவர்கள் அதனைக்கண்டு கொள்ள வில்லை. எமது கிராம அபிவிருத்திச் சங்கத்தை கலைப்பதாக அறிவித்துள்ளார். கிராமத்திற்காக கதைத்தால் சங்கத்தை கலைப்பதாக அறிவிக்கப் படடுள்ளது. இதனாலேயே ஆர்ப்பாட்டத்தில் நீதி வேண்டி ஈடுட்டுளளோம். தீர்வு கிடைக்காவிடின் தொடர் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனத் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களை சமரசம் செய்து வைத்த உதவி பொலிஸ் அத்தியட்சகர் பண்டார தலைமையிலான பொலிஸார் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் சார்பாக மூவரை வவுனியா அரச அதிபரை சந்தித்து பிரச்சினையை தெரியப்படுத்த சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். (2-250-281)

## வைத்தியசாலைகளுக்கு நிரந்தரமாக வைத்தியர்கள் நியமிக்கப்படுவார்கள்

### கிளி.மாவட்ட பொதுச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் நிரந்தர வைத்தியர்கள் விரைவில் நியமிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட பொது சுகாதார சேவைகள்பணிப்பாளர்மா.ஜெயராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

உருத்திரபுரம் வைததிய சாலையில் தற்போதுள்ள வைத்தியருடன் எதிர்வரும் ஏப்ரல் மாதம் நிரந்தர வைத்தியர் நியமிக்கப்படும் வரை வைத்தியர் எம்.சி.அருமை நாயகம் நியமிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வைத்தியர் செவ்வாய்கிழமை, வெள்ளிக்கிழமை ஆகிய நாட்களில் உருத்திரபுரம் வைத்தியசாலையில் கடமையாற்றவுள்ளார். நோயாளர்கள் தமக்கான வைத்தியத் தேவைகளை இங்கேயே பெற்றுக்கொள்ளலாம.

அத்துடன் கண்டாவளை வன்னேரிக்குளம் ஆகிய இடங்களில் உள்ள வைத்திய சாலைகளில்வைத்திய சேவை மூன்று நாட்கள் நடைபெற்று வரும் நிலையைக் கருத்தில் கொண்டு விரைவில் இவ் வைத்தியசாலைகளுக்கும் நிரந்தர வைத்தியர்கள் நியமிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (2-254)

## மன்னார் கடற்பரப்பில் கைதான இந்திய மீனவர்களுக்கு விளக்கமறியல்



மன்னார் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மன்னார்நீதிமன்ற நீதவான் ஆசீர்வாதம் கிரேசியஸன் உத்தரவிட்டார்.

இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்ட நிலையில் நேற்று முன்தினம் கடற்படையினரினால் கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களும் மன்னார் கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இராமேஸ்வரம் மற்றும் தனுஸ்கோடி ஆகிய இடங்களைச்சேர்ந்த 8 இந்திய மீனவர்கள இரண்டு படகுகளுடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 8 இந்திய மீனவர்களும் தலைமன்னார் கடற்படையினரிடம்ஒப்படைக்கப்பட்டனர்.

தலைமன்னார் கடற் படையினர்விசாரணைகளின பின்னர், குறித்த 8 இந்திய மீனவர்களையும் நேற்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் மன்னார கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்தநிலையில்குறித்த மீனவர்கள்மன்னார் கடற்தொழில்நீரியல்வளத்துறை திணைக்களத்திற்கு அழைத்துவரப்பட்டதுடன், இந்திய துணைத்தூதரக அதிகாரி வருகை தந்து பார்வையிட்டுள்ளார்.

குறித்தமீனவர்கள் நேற்று மாலை மன்னார் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது நீதவான் எதிர்வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.(2-281)

# கம்பவாரிதிக்கு புருஷோத்தமனின் பதில்



## பாகம் 03

பேரன்புமிகு கம்பவாரிதி அவர்களுக்கு,

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளால் தோற்றுவிக்கப்பட்டது என்பதே உண்மை. எனினும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு புலிகளால் உருவாக்கப்படவில்லை என்கிறார் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன். அதே நேரம் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன் அவர்களோ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுதலைப்புலிகளால் தான் உருவாக்கப்பட்டது என்பதை உறுதிபடக் கூறுகிறார்.

ஒரே கட்சியில் இரண்டு வேறுபட்ட சாட்சியங்கள்.. என்ன செய்யமுடியும். நம்மைப் பொறுத்தவரை தமிழ்மக்களுக்கு ஒரு சரியான, நேர்மையான அரசியல் தலைமை தற்போது கிடைக்கவில்லை என்பதை மட்டும் உறுதிபடக்கூறுவேன். இதனைத் தாங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்றும் நம்புகின்றேன்.

இத்தகையதொரு நிலைமை ஏற்பட்டது ஏன்? என்ற ஆய்வு இருக்குமாக இருந்தால் தமிழர் தரப்பில் புத்திஜீவிகள் அடங்கிய ஒரு பலமான அமைப்பு இல்லாமல் போனமைதான் என்றுணர முடியும்.

தென்பகுதியைப் பொறுத்தவரை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி என்ற இரண்டு பிரதான கட்சிகள் இருந்தமையால் அவை ஒன்றை ஒன்று விமர்சித்ததன் காரணமாக அந்தக் கட்சிகள் தம் மக்களுக்கான பணி தொடர்பில் கடுமையாகப்பாடுபட்டன. அதே நேரம் இரண்டு பிரதான கட்சிகளையும் ஒழுங்குபடுத்துவதில் ஜே.வி.பி. போன்ற மூன்றாவது கட்சிகளின் வகிபங்கும் கனதியாக இருந்தன.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை இலங்கைக்கு குறிப்பாக சிங்கள மக்களுக்கு ஆபத்தானது என்பதை விடுதலைப்புலிகளின் தோல்விக்குப் பின்னர்- மகிந்த ராஜபக்ஷவின் எதேச்சதிகாரப் போக்கு சிங்களத் தலைவர்களுக்கு உணர்த்தியபோது, சிங்களத் தலைவர்கள் நாட்டைக் காப்பாற்றுவதற்காகக் களத்தில் குதித்தனர்.

சர்வதேச நாடுகளுடன் முரண்பட்டுப்போன மகிந்த ராஜபக்ஷவின் பலவீனத்தை அதற்காகப் பயன்படுத்தினர். சர்வதேச நாடுகளை தமதாக்கிக் கொண்டு அந்த நாடுகளின் ஒத்துழைப்போடு மகிந்த ராஜபக்ஷவை வீடேக வைத்தனர்.

இதன் பின்னணி முழுவதிலும் சிங்கள புத்திஜீவிகளின் பங்கும் பணியும் தாராளமாக இருந்தன என்பதை தாங்கள் நிச்சயம் அறிந்திருப்பீர்கள். இங்குதான் சிங்களப் புத்திஜீவிகளிடம் தமிழினம் நிறையக் கற்க வேண்டியுள்ளது.

விடுதலைப்புலிகளைத் தோற்கடிப்பதிலும் அதன் பின்பான சிங்களக் குடியேற்றங்களின் போதும் மகிந்த ராஜபக்ஷவுக்கு வியூகம் அமைத்துக் கொடுத்த சிங்களப் புத்திஜீவிகள் சர்வதேச போர்க்குற்ற விசாரணையில் இருந்து தப்பித்துக் கொள்வதிலும் போருக்குப் பின்பு சர்வாதிகார ஆட்சி நிலை பெறக்கூடாது என்பதிலும் விழிப்பாக இருந்தனர்.

அவர்களின் இந்த விழிப்பு நிலைதான் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்று சேர்ந்து இந்த நாட்டின் ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேனவை முன்கொண்டு வந்தனர். இங்குதான் கொழும்புத் தமிழ்த் தலைமை தென்பகுதி புத்திஜீவிகளின் சக்கர வியூகத்திற்குள்ளும் சந்திரிகா, ரணில் விக்கிரமசிங்க போன்ற சிங்கள அரசியல் தலைவர்களின் ஆசாடபூதித்தனங்களுக்குள்ளும் வீழ்ந்து போயினர்.

சர்வதேச விசாரணை என்பதை இல்லாமல் செய்வதற்கு சந்திரிகா-ரணில்- மைத்திரி என்ற முக்கூட்டு அரசியல் தலைவர்கள் அமைத்த வலைக்குள் சம்பந்தப் பெருமான் அகப்பட்டுக் கொண்டார். பக்தி வலையில் படுவோன்காண் என்பது போல, சம்பந்தர் தென்பகுதி அரசியலின் ஆசாடபூதித்தனங்களுக்குள் அகப்பட்டுக் கொண்டார். அதற்கான வியூகம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் மிக நுட்பமாக அமைக்கப்பட்டிருந்தது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கையில் நடந்த போர்க்குற்றம் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் ஒரு பிரதிநிதி தான் விரும்பியவர்களுடன் சென்றார் எனும் போது தமிழினம் கொதித்தெழுந்திருக்க வேண்டாமோ?

வன்னிப் பெருநிலப்பரப்பில் ஐயகோ! எங்களைக் காப்பாற்றுங்கள் என்று கதறிய தமிழ்மக்களைக் கொன்றொழித்த கொடுமைத்தனத்தை முதலில் மறந்துபோனது சம்பந்தரும் அவரோடு சேர்ந்தவரும் என்பதை அறம் உரைக்கவல்ல கம்பவாரிதி இ.ஜெயராஜ் மறந்திருப்பாராயின் அது நாம் செய்த பாவமேயன்றி வேறு எதுவுமன்று என்றே கூறவேண்டும்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் கொன்றொழிக்கப்பட்ட எங்கள் உறவுகளின் அவலக்குரல்கள் நடுச்சாமத்திலும் உறங்கும்போதும் கேட்டுத் திணுக்குற்று எழுகின்ற தமிழ்த் தலைவன் ஒருவன் இருந்திருப்பானாயின் ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் எங்கள் விடயம் சர்வசாதாரணமாக விலைபட்டுப் போயிருக்காதன்றோ.

விடுதலைப்புலிகள் மீது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தருக்கும் அவரோடு சேர்ந்தவருக்கும் இருந்த கோபம் வன்னி அவலத்தை எந்த விலையிலும் விற்றுவிடலாம் என்ற மனநிலையை அவர்களிடம் தோற்றுவித்தது இதுவே உண்மையும் சத்தியமுமாகும்.

உண்மையான தமிழ்த் தலைவன் இல்லாததன் விளைவுதான் ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் எங்கள் இனத்திற்கு ஏற்பட்ட ஏமாற்றம்.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் எங்கள் தொடர்பில் விவாதம் நடக்கும் போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், தமிழ் அரசியல் தலைவர்களும் தமிழ்ப் புத்திஜீவிகளும் அடங்கிய ஒரு உயர் மட்ட தூதுக்குழுவையல்லவா ஜெனிவாவுக்கு அனுப்பி வைத்திருக்கவேண்டும்.

வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த பேரழிவு தனிப்பட்ட சம்பந்தருக்கோ தனிப்பட்ட சுமந்திரனுக்கோ ஆனதல்ல. அது ஒட்டு மொத்த தமிழ் இனத்திற்குமான இழப்பு.

ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவையில் நடப்பது என்ன? என்பதை அறிவதற்கும் அதன் வெளிப்படைத் தன்மைக்குமாக தமிழ் தரப்புகள் அடங்கிய தூதுக்குழுவை அனுப்புவது பற்றிச் சிந்தியாத சிந்தனைக்கு இராஜதந்திரம் என்று மகுடம் சூட்டுவது எந்த வகையிலும் ஏற்புடையதன்று.

ஆக, ஐ.நா மனிதவுரிமைகள் பேரவையில் இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடக்க வேண்டும். அதற்கு உலக நாடுகள் ஆதரவு வழங்கவேண்டும் என்று அல்லும் பகலும் தவமிருந்த தமிழர்கள் கண்ட பலன் என்னவோ? எங்கள் பிரதிநிதிகளே சர்வதேச விசாரணைக்கு மண் போட்டனர் என்ற செய்தி வன்னியில் நடந்த கொடுஞ்செயலிலும் கொடுமையானது.

என்ன செய்வது எங்கள் புத்திஜீவிகள் மௌனமாக இருந்ததால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தேர்தல் நினைப்பில் சம்பந்தருக்கு பயந்து ஒதுங்கி நின்றதால் சம்பந்தரே சாட்சாத் ஈஸ்வரனாகி தென்ப குதிக்கு அருளாட்சிபுரிந்து தமிழினத்தை தவிக்க விட்டார் என்ற இந்த உண்மையை தாங்கள் அறியாமல் இருந்திருக்க மாட்டீர்கள்.

(நாளை தொடரும்)

**புருஷோத்தமன்**


# உலக சுற்றுலா சஞ்சிகையில் இலங்கைக்கு முக்கியத்துவம்

உலகின் புகழ் பெற்ற சுற்றுலா இதழான லோன்லி பிளானட் சஞ்சிகை (Lonely Planet Magazine's Dream Trips 2016) வெளியிட்டுள்ள முதல் பத்து சுற்றுலாத் தளங்களில் இலங்கைக்கு முக்கியதத்துவம்வழங்கப்பட்டுள்ளது.

சுற்றுலா தொடர்பான ஆலோசனை புத்தகங்களை, "லோன்லி பிளானட்" நிறுவனம் வெளியிட்டு வருகிறது. உலகளவில் சுற்றுலா பயணிகள் பார்க்க வேண்டிய சுற்றுலா தளங்கள் குறித்த விபரங்கள். அவற்றுக்கான வழிகாட்டிகள். சுற்றுலா அனுபவங்கள் ஆகியவற்றினை ஒன்றிணைத்து சஞ்சிகை வடிவில் வெளியிடுகின்றமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் லோன்லி பிளானட் சஞ்சிகை இவ்வாண்டுக்கான சிறந்த சுற்றுலாத் தளங்கள் குறித்து மக்களுக்கு அறிவுறுத்தும் வகையில் பல இடங்களை உள்ளடக்கியதொரு பட்டியலை தயார் செய்துள்ளது.

அவற்றுள் அனைத்து மக்களுக்கும் பிடித்த முதல் பத்து இடங்களுக்குள் இலங்கையின் பெயரும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. "உங்களது பயணத்துக்கான பட்டியலில் சேர்ப்பதற்கு மிகவும் அசாதாரண அழகுடன் நிறைந்ததொரு இடங்களுள் இலங்கையும் ஒன்று" என அச் சஞ்சிகையில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இலங்கையின் அழகை காட்டவென சுமார் 14 பக்கங்களையும் சஞ்சிகை ஏற்பாட்டாளர்கள் ஒதுக்கியுள்ளனர். காலி, தென் கடலோரம், யால தேசிய பூங்கா. மலையக அழகு, ரயில் பாதைகளின் அழகு என அனைத்தும் அவறறில் உள்ளடக்கபபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)




# பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

கல்வி அமைச்சின் அரச பாடசாலைகளில் காணப்படும் மேற்கத்தேய சங்கீத ஆசிரியர் பதவிகளுக்கான மேற்கத்தேய சங்கீதப் பட்டதாரிகளை இலங்கை ஆசிரியர் சேவையின் 3-I(அ) தரத்திற்கு ஆசிரியர் பதவிகளுக்கான சங்கீதப் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

18 வருடங்களுக்குக் குறையாத மற்றும் விண்ணப்பதாரி 35 வருடங்களுக்கு மேற்படாதவராய் இருத்தல் வேண்டும்.

இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைய 2016.01.14 ஆம் திகதியன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஏதாவதொரு பல்கலைக்கழகத்தில் பிரயோகப் பயிற்சியுடன் மேற்கத்தேய சங்கீதம் தொடர்பான பட்டத்தைப் பெற்றிருக்க வேண்டும்.

கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 2 வருடங்களுக்குள் இரு தடவைகளுக்கு மேற்படாத எண்ணிக்கையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழிப் பாடமாகச் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

க.பொ.த உயர்தர பரீட்சையில் புதிய பாட விதானத்தின் கீழ் 03 பாடங்கள் பொதுச் சாதாரண பரீட்சையினைத் தவிர ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல்.

பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளிநாட்டு பரீட்சைக் கிளை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், த.பெ. 1503, கொழும்பு என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் எதிர் வரும் 14ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக கிடைக்கத்தக்கதாக அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)

# நாட்டில் புகையிலைச் செய்கை முற்றாகத் தடை செய்யப்படும்

நாட்டில் புகையிலைச் செய்கை முற்று முழுதாக தடை செய்யப்படும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்ல அபேகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2020ஆம் ஆண்டளவில் நாட்டில் புகையிலைச் செய்கை முற்று முழுதாக இரத்து செய்யப்படும்.

அமைச்சரவையில் இது குறித்து பேசி இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் என தெரிவித்துள்ளார்.

சிகரெட் பக்கற்றுகளில் எச்சரிக்கை புகைப்படங்களை பிரசுரிப்பதில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முக்கிய பங்காற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## ஆடுதீண்டாப்பாளை

Botanical Name: Aristolochia bracteolata

Family Name: Aristolochiaceae

English: Worm Killer

இது மென்மையானது. பசுமையான பல கிளைகளைக் கொண்டதும் பல்லாண்டு காலம் வாழக்கூடிய செடி வகையாகும். இலைகள் தனியிலை, எதிரிலை அடுக்கம் கொண்டவை. 1.2-5 செ.மீற்றர் நீளமும் நீள்வட்டமும் சாம்பல் நிறம் கொண்டவை. ஒழுங்கான இருபாலான பூக்களைக் கொண்டவை. ஊதா நிறப் பூக்கள். பழங்கள் சோனைகளாக 12 நரம்பமைப்புக்களை கொண்டிருக்கும். பெரிய விதைகள் 6 செ. மீற்றர் நீளம் கொண்டவை. பூக்கள் தை, புரட்டாதி மாதத்தில் பூக்கும்.

### பரம்பலும் இன விருத்தியும்

வறண்ட பிரதேசத்தில் இதன் பரம்பல் அதிகம். விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம்.

இதன் இலை மிகக் கசப்பாகையால் அதை ஆடு தொடாது . ஆகையால் இதற்கு இப்பெயர் ஏற்பட்டது.

### மருத்துவப் பயன்கள்

குடல்புழு, பூச்சி நஞ்சுகள், கரும்படை, கரப்பான் போன்ற தோல் நோய்கள் நீங்கும்

இதன் இலைகளை சேகரித்து தேவையானளவு வெந்நீரில் 2 மணி நேரம் ஊற வைக்க வேண்டும். உதாரணமாக 10 கிராம் இலைகளை 100 மில்லி லீற்றர் வெந்நீரில் ஊறவைத்து 15-30 மில்லி அளவு அருந்திவர கிரந்தி, கரப்பான் நீங்கும். வயிற்றில் உள்ள புழுக்கள் சாகும்.


விதைகளைப் பொடித்து 4 கிராம் எடுத்து சிற்றாமணக்கு எண்ணெயில் கலந்து கொடுக்க வயிற்றுவலி, மாதவிடாய் தடைப்படல் என்பன நீங்கும். குடற்புழுக்களையும் வெளிப்படுத்தும்.

இது பாம்புக்கடிக்கு பயன்படுத்தப்படும் ஒரு மூலிகையாகும். இதன் வேர்களை சேகரித்து நன்றாகக் கழுவி அம்மியில் வைத்து பட்டுப்போல் அரைத்து 5 கிராமளவு வெந்நீரில் கொடுத்தல்.

வேர்த்தூளை 5 கிராமளவு தனியேயாவது வெந்நீரில் கலந்து கொடுக்க பிரசவ வேதனையைத் தூண்டும்

இதை முழுச்செடியாக எடுத்து இடித்து சாறெடுத்து நல்லெண்ணெய்சேர்த்து பக்குவமாய் காய்ச்சி வடித்து கரும்படை, கரப்பான் இவைகளுக்கு பூசி வரலாம்.

ஆடுதீண்டாப்பாளை இலையையும் மரத்தின் இளந்த எிரையும் கைப்பிடியளவு எடுத்து அம்மியில் வைத்து மை போல அரைத்து 5 கிராமளவு அரை டம்ளர் தயிரில் போட்டுக் கலக்கி தொடர்ந்து 3 நாட்களுக்கு காலையில் மட்டும் கொடுக்கசீதபேதி குணமாகும்.



ஆடுதீண்டாப்பாளைக் கைப்பிடியளவு எடுத்து (இலை, தண்டு, வேர்) அம்மியில் வைத்து அரை தேக்கரண்டியளவு மிளகு சேர்த்து மை போல் அரைத்து அதை இரண்டு பங்காக்கி காலை யில் ஒரு பங்கும் மாலையில் ஒரு பங்குமாக 3 நாட்கள் கொடுத்து வந்தால் கர்ப்பப் பையில் உள்ள நுண்ணிய கிருமிகள் அழிந்து கருப்பை பலமடையும்.

வட்டப்புழுவிற்கு (Ring worm) ஆடுதீண்டாப்பாளை வேர் 10 கிராமளவு எடுத்து 4 மடங்கு நீர்விட்டு கால் பங்காக வற்றக்காய்ச்சிய குடிநீருடன் ஒரு மேசைக்கரண்டி ஆமணக்கெண்ணெய் சேர்த்துக் கொடுக்க நீங்கும்.

ஆடுதீண்டாப்பாளை வேர்களை கசக்கி சாறு எடுத்து ஆமணக்கெண்ணெய்யுடன் சேர்த்து கரப்பானிற்கு பூசலாம்.

இச்செடியின் உடன்சாறு 200 மில்லி எடுத்து தேங்காய் எண்ணெய் 300 மில்லி அளவு எடுத்து இரண்டையும் கலந்து அடுப்பேற்றி பதத்தில் காய்ச்சி இறக்கி 20 கிராம் விளைவு கர்ப்பூரம் பொடித்து போட்டு ஆறியதும் புட்டியில் இட்டு வைத்துக்கொள்ளவும். நீர்வடியும் கரப்பான் சிரங்கிற்கு பூசிவர புண்கள் முற்றாக ஆறும்.

இவ் இலையை நன்றாய் அரைத்து கொட்டைப் பாக்களவு வெள்ளாட்டுப்பாலில் கலக்கி வடிகட்டி கொடுக்க சகல விஷம், புண், சிரங்கு, கரப்பான், குஷ்டம் என்பன தீரும்.

இதன் வேர்ப்பொடி 5 கிராமளவு எடுத்து கொதி நீரில் போட்டு அரை மணி நேரம் சென்றபின் வடிகட்டி கொடுக்க குளிர் சுரம் நீங்கும்.

இதை முழுச்செடியாக எடுத்து கருங்குருவை நெல்லும் சேர்த்து அவித்து இடித்து தினம் வேளைக்கு 35 கிராம் வீதம் 45 நாட்கள் கொடுத்து வர சிரங்கு, சொறி, குஷ்டம், பூரான் கடி என்பன நீங்கும்.

இதன் இலையே அரைத்து குழந்தைகளின் வயிற்றில் பற்றிட மலங்கழியும்.


இலையை அரைத்து அழிபுண்ணுக்குப்போட பூச்சிகளைக் கொல்லும்.

டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

# ஆயுதம் ஏந்திய போராட்டக்காரர்களின் ஆக்கிரமிப்புக்குள் அமெரிக்க கட்டடம்

அமெரிக்காவின் ஓரேகான் மாகாணத்தில் உள்ள மால்ஹீயூர் வனவிலங்கு பூங்கா கட்டடத்தை துப்பாக்கி ஏந்திய போராட்டக்காரர்கள் ஆக்கிரமித்துள்ளனர். அவர்கள் அங்குள்ள வீதியை அடைத்து பொலிஸார் உள்ளே நுழையாதபடி தடுத்து நிறுத்தியுள்ளனர்.

அமெரிக்காவின் ஓரேகான் மாகாணத்தில் உள்ள ஓர் அரசு கட்டடத்தை கடந்த 2 நாட்களுக்கு முன்பு தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்த ஆயுதம் ஏந்திய போராட்டக்காரர்கள், தங்கள் கோரிக்கை ஏற்கப்படும் வரை அங்கிருந்து வெளியேற முடியாது என கூறி வருகின்றனர்.



பர்ன்ஸ் நகருக்கு அருகே 'மால்ஹீயூர் தேசிய வனவிலங்கு புகலிட' கட்டடம் உள்ளது. உள்ளூரில் உள்ள 2 கால்நடை வளர்ப்புப் பண்ணைகளுக்கு ஆதரவாக கடந்த சனிக்கிழமை பிரசாரத்தில் ஈடுபட்டவர்கள் இந்த கட்டடத்துக்குள் புகுந்தனர். ஆயுதங்களை வைத்துள்ள இவர்கள் அங்கிருந்து வெளியேற மறுத்து வருகின்றனர். இதுகுறித்து போராட்டக் குழுவின் செய்தித் தொடர்பாளர் தெரிவிக்கையில்,

"அரசால் கையகப்படுத்தப்பட்ட நிலம் மற்றும் வளங்களை மீட்டு உரியவர்களிடம் ஒப்படைப்பதற்காகவே இந்தப் போராட்டம். எங்கள கோரிக்கை நிறைவேறும் வரை இங்கிருந்து வெளியேறமாட்டோம். நாங்கள் முதலில் ஆயுதங்களைப் பயன்படுத்தமாட்டோம்.

ஆனால் எங்களுக்கு எதிராக பாதுகாப்புப் படையினர் ஆயுதங்களைப் பயன்படுத்தினால் தற்காத்துக் கொள்வதற்காக நாங்களும் ஆயுதங்களைப் பயன்படுத்துவோம்" என்றார்.

எனினும் தங்களுடைய கோரிக்கை குறித்து தெளிவாக எதையும் அவர்கள் குறிப்பிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அமெரிக்கா அறிவுறுத்து

பஞ்சாப் மாநிலம், பதன்கோட்டில உள்ள விமானப்படைத்தளத்தின் மீது தாக்குதல் நடத்தி வந்த பாகிஸ்தான் தீவிரவாதிகளில் இதுவரை 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதல் தொடர்பாக இந்தியா அளித்துள்ள தகவல்களை ஆராய்ந்துவருவதாக பாகிஸ்தான் வெளியுறவுத்துறை நேற்று முன்தினம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த தாக்குதலுக்கு கண்டனம் தெரிவித்துள்ள அமெரிக்கா, பதன்கோட் தாக்குதலுக்கு காரணமான தீவிரவாதிகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்என பாகிஸ்தானுக்கு அறிவுறுத்தியுள்ளது. இதுதொடர்பாக, அமெரிக்க வெளியுறவுத்துறையின் செய்தித் தொடர்பாளர் ஜான் கிர்பி கூறியதாவது,

இந்த தாக்குதல் தொடர்பாக பாகிஸ்தான் அரசு மிக வீரியமாக பேசியுள்ளது. இவ்விவகாரத்தை கையாள வேண்டிய முறையில் அவர்கள் கையாள வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். (இ-7)

# சவுதி-ஈரான்;அமைதி நிலவ அமெரிக்கா தீவிர முயற்சி

சவுதி அரேபியாவில் ஷியா பிரிவு மதத் தலைவர் நிமர் அல் நிமர்(56) உட்பட 47 பேருக்கு ஒரே நாளில் மரண தண்டனை நிறைவேற்றியது உலகமெங்கும் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஷியா பிரிவு மதத் தலைவர் கொல்லப்பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்து ஈரானில் கடும் போராட்டம் வெடித்தது.

போராட்டத்தின் போது, தலைநகர் டெஹ்ரானில் உள்ள சவுதி அரேபிய தூதரம் தாக்கப்பட்டது. தூதரகத்துக்கு தீ வைக்கப்பட்டதால் ஆத்திரம் அடைந்த சவுதி அரேபியா, ஈரானுடனான தூதரக உறவை துண்டித்துக்கொள்வதாக அறிவித்துள்ளது. மேலும், ஈரானுடனான விமான போக்குவரத்து, வணிக தொடர்புகளுக்கு சவுதி அரேபியா தடைவிதித்துள்ளது. ஈரானில் உள்ள சவுதி நாட்டு தூதர்கள் உடனடியாக தாய்நாட்டுக்கு திரும்ப வேண்டும் எனவும், இனி தங்கள் நாட்டு மக்கள் ஈரானுக்கு சுற்றுலா செல்லக்கூடாது எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இருநாடுகளுக்கும் இடையிலான பகை ஒவ்வொரு மணிநேரமும் அதிகரித்து வரும் நிலையில் சவுதி அரேபியா - ஈரான் நாடுகளுக்கிடையே அமைதி நிலவ அமெரிக்கா தீவிர முயற்சி மேற்கொண்டு வருகிறது.

இதுதொடர்பாக, சவுதி அரேபியா மற்றும் ஈரான் நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை தொலைபேசி மூலமாக தனித் தனியாக தொடர்புகொண்ட அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜோன் கெர்ரி, இரு நாடுகளுக்கிடையிலான பதற்றத்தை தணிக்க உதவுமாறும், மத்திய கிழக்கு பிராந்தியத்தில் அமைதி நிலவுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக் கொண்டார். (இ-7)

# உறவு முறிவு

தனது நாட்டின் தூதரகம் மீது தாக்குதல் நடத்தியதால் ஈரானுடன் கொண்டிருந்த தூதரக உறவை சவுதி அரேபியா முறித்துக் கொண்டது.

சவுதி அரேபியாவின் புதிய மன்னர் சல்மான் பதவியேற்றது முதல் தீவிரவாதத்துக்கு எதிராக உத்வேகத்துடன் செயற்பட்டு வருகிறார். சவுதி அரேபியாவின் தலைமையிலான கூட்டுப் படைகள் ஏமன் நாட்டில் ஷியா பிரிவு தீவிரவாதிகள் மீது தாக்குதலிலும் ஈடுபட்டு வருகின்றன.

இந்த நிலையில், தங்கள் நாட்டில் தீவிரவாத செயல்களில் ஈடுபட்டதாக கூறி தேச துரோக குற்றச்சாட்டு சுமத்தி சிறுபான்மை ஷியா பிரிவு மதத் தலைவர் நிமர் அல் நிமர் (வயது-56) உட்பட 47 பேருக்கு ஒரே நாளில் சவுதி அரேபியா அண்மையில் மரண தண்டனையை நிறைவேற்றியது.

ஷியா பிரிவினரை பெரும்பான்மையாக கொண்ட ஈரான், ஈராக் நாடுகள் சவுதி அரேபியாவின் இந்த நடவடிக்கையால் கடும் அதிர்ச்சி அடைந்து உள்ளன. அல் நிமருக்கு, மரண தண்டனை அளிக்கப்பட்டதற்கு ஈரான் மதத்தலைவர் அயத்துல்லா அலி காமெனி கடும் எதிர்ப்பு தெரிவித்தார்.

இந்தநிலையில், சவுதி அரேபியாவுக்கு எதிராக ஈரானில் பெரிய அளவில் போராட்டம் வெடித்தது. தலைநகர் டெஹ்ரானில் உள்ள சவுதி அரேபிய தூதரகத்துக்குள் நூற்றுக்கணக்கானோர் புகுந்து தீ வைத்தனர். வெடிகுண்டுகளையும் வீசி தாக்குதல் நடத்தினர். இதற்கு சவுதி அரேபியா கடும் கண்டனம் தெரிவித்தது. அதிரடி பதில் நடவடிக்கையாக ஈரான் தலைநகர் டெஹ்ரானில் செயற்பட்டு வந்த தனது தூதரகத்தை நேற்று இழுத்து மூடியது.

இது குறித்து, சவுதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் அனெல் அல்ஜுபைர் கூறுகையில், "ஈரான் உடனான நட்புறவை துண்டித்துக் கொண்டு விட்டோம். எனவே இங்கே இருக்கும் ஈரான் தூதரக அதிகாரிகள் அடுத்த 48 மணி நேரத்தில் நாட்டை விட்டு வெளியேறவேண்டும். இதேபோல் ஈரானில் உள்ள சவுதி அரேபிய தூதரக அதிகாரிகள் அனைவரும் உடனடியாக நாடு திரும்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டு இருக்கிறார்கள்" என்று தெரிவித்தார். இவ்வாறு அவர் கூறிய அடுத்த சில மணி நேரங்களில், டெஹ்ரான் நகரில் ஷியா பிரிவினரின் தாக்குதலின்போது மீட்கப்பட்ட சவுதி அரேபிய தூதரக அதிகாரிகள் தங்களுடைய நாடு திரும்புவதற்காக விமானம் மூலம் டுபாய் வந்து சேர்ந்தனர்.

அல்ஜுபைர் மேலும் கூறுகையில,

"சவுதி அரேபியாவுக்குள் ஆயுதங்களையும், வெடிகுண்டுகளையும் கடத்த உதவுவதுடன், தீவிரவாதிகளின் முகாம்களை அமைப்பதிலும் ஈரான் ஈடுபட்டு வருகிறது. எங்களது பாதுகாப்பு பலத்தை குறைவாக மதிப்பிட அனுமதிக்க முடியாது. ஈரானில் ஏற்கனவே 1979 ஆம் ஆண்டு அமெரிக்க தூதரகம் தாக்குதலுக்கு உள்ளானது. எனவே இப்போது நடந்துள்ள தாக்குதல் சர்வதேச விதிமுறைகளை மீறுவதாகும்" என்று தெரிவித்தார். ஷியா மத பிரிவு தலைவர் அல் நிமருக்கு மரண தண்டனை நிறை வேற்றப்பட்ட பிரச்சினையில் இரு நாடுகளுக்கும் இடையே பதற்றமான சூழல் உருவாகி இருக்கும் நிலையில், தூதரக உறவை சவுதி அரேபியா முறித்துக் கொண்டதற்கு ஈரான் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுபற்றி ஈரான் செய்தி தொடர்பாளர் ஹுசேன் ஜெபேரி அன்சாரி கூறுகையில், "சர்வதேச உடன்படிக்கைகளின்படி சவுதி அரேபிய தூதரகத்துக்கு பாதுகாப்பு வழங்குவதில் ஈரான் உறுதியாக உள்ளது. ஆனால இச்சம்பவத்தை காரணம் காட்டி, சவுதி அரேபியா எங்களுடன் தூதரக உறவை முறித்துக் கொண்டு இப்பகுதியில் மேலும் பதற்றத்தை ஏற்படுத்த முயன்று வருகிறது" என்று குற்றம் சாட்டினார். (இ-7)

# டில்லியில் நாசவேலைக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் சதி

பஞ்சாப் மாநிலம் பதன் கோட் விமானப்படை தளத்தை பாகிஸ்தான் தீவிரவாதிகள் தாக்கிய சம்பவம் நாட்டையே அதிர்ச்சிக்குள்ளாக்கியது. 3 நாட்கள் நடந்த துப்பாக்கி சண்டையில் 6 தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு படையினர் தரப்பில் 7 பேர் உயிரிழுந்தனர்.

துப்பாக்கி சண்டை ஓய்ந்து விட்டதாக இருந்த நிலையில் மேலும 2 தீவிரவாதிகள் விமான தளத்தில் பதுங்கியது பாதுகாப்பு படையினருக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

இதற்கிடையே தீவிரவாதிகள் தலைநகர் டில்லிக்கும் ஊடுருவி இருக்கலாம் என்று உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

பதன்கோட் தாக்குதலில் ஈடுபட்ட பாகிஸ்தானைச் சேர்ந்த ஜெய்ஷ்-இ-முகமது இயக்க தீவிரவாதிகளே டில்லியில் நாசவேலை



சதித்திட்டத்துடன் ஊடுருவ வாய்ப்பு உள்ளதாக எச்சரிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஐ.எஸ். தீவிரவாதிகளும் டில்லிக்கு குறி வைத்து இருப்பதாக திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

எதிர்வரும் 26 ஆம் திகதி டில்லியில் நடைபெறும் குடியரசு தின விழாவில் சிறப்பு விருந்தினராக பிரான்ஸ் ஜனாதிபதி பிரான் கோயிஸ் ஹோலன்டே கலந்து கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி பொதுமக்கள் மீது கொடூரத் தாக்குதல்!

## ஐ.நா.நிபுணர்கள் குழு கண்டுபிடிப்பு



(நியூயோர்க்)

**சிரியாவில் இடம்பெற்று வரும் உள்நாட்டுப் போரில் அரச படைகள் இரசாயன ஆயுதங்களைப் பயன்படுத்தி பொது மக்கள் மீது கொடூரமான முறையில் தாக்குதல்களை மேற்கொண்டு வருவதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்கள் குழுஅறிகையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**



இந்த அதிர்ச்சித் தகவலை உள்ளடக்கி ஐ.நா. சபை நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சிரியாவில் ஜனாதிபதிக்கு ஆதரவான படைக்கும் போராளிகள் படைக்கும் இடையே தற்போது உச்சக்கட்ட போர் நடந்துவரும் வேளையில் ஜனாதிபதி படையினர் இரசாயனக்குண்டுகளை வீசி ஆயிரக்கணக்கான பொதுமக்களை கொல்வதாக போராளிகள் குற்றம் சாட்டி வந்தனர்.

இதையடுத்து, சிரியாவில் ஜனாதிபதி பஷர் அல் ஆசாத்தின் ஆட்சிக்கு எதிராக நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரை கண்காணிக்க ஐ.நா. விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. சிரியாவின் போர் நிலைமைகளை தொடர்ந்து 5 மாதங்களாக கண்காணித்துவந்த இந்த குழு, தனது அறிக்கையை தாக்கல் செய்தது.

சிரியாவில் அரசு தரப்பில் நடத்தப்பட்ட 4 தாக்குதல்களில் மிதமான அளவிலான விஷத் தன்மை கொண்ட இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதற்கான நம்பத்தகுந்த ஆதாரங்கள் உள்ளன. இந்த ஆதாரங்களின் படி, எத்தகைய இரசாயனங்கள் பயன்படுத்தப்பட்டன? இவை எப்படி பிரயோகிக்கப்பட்டது? என்பது தொடர்பாக அறிய முடியவில்லை என அந்த அறிக்கையில், குறிப்பிடப்பட்டிருந்தது.

இது தொடர்பாக, தீவிர விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்க சர்வதேச இரசாயன ஆயுதங்கள் தடுப்பு பிரிவின் தலைவர் அஹமட் உஸூம்கு தலைமையிலான குழுவை ஐ.நா. பாதுகாப்பு சபை கேட்டு கொண்டது. அதன்படி, சிரியாவில் போரால் பாதிக்கப்பட்ட பகுதிகள் மற்றும் மக்களிடையே ஆய்வு நடத்திய இந்த குழுவினர் கடந்த டிசெம்பர் மாதம் 29ஆம் திகதி ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கீ மூனுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்.

சிரியாவில் உள்நாட்டுப் போர் உச்சக் கட்டத்தில் இருந்த வேளையில் 11 முறை மிக ஆபத்தான இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அந்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு தாக்குதலில் கொடிய நச்சுப்பொருளான 'சரைன்' அல்லது அதற்கு இணையான இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன, பாதிக்கப்பட்ட மக்களிடம் இருந்து பெறப்பட்ட இரத்தமாதிரிகளை (blood samples) பரிசோதித்ததில் இது தெரிய வந்துள்ளது.

இதைப்போன்ற கொடூரமான தாக்குதல்கள் எப்போது, எந்த சூழ்நிலையில் நடத்தப்பட்டன? என்பது தொடர்பாக விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டியுள்ளது என அந்த கடிதத்தில் அஹமட் உஸூம்கு குறிப்பிட் டுள்ளார். அந்த கடிதத்தின் நகலை 15 நாடுகளை உள்ளடக்கிய ஐ.நா. பாதுகாப்பு சபை நேற்று வெளியிட்டுள்ளது. (இ-7)




## குடிசைப் பகுதியில் பயங்கர தீ விபத்து

### 40 வீடுகள் எரிந்து நாசம்

(மும்பை)

மும்பை மாகிம் புகையிரத நிலையத்தையொட்டி மேற்கு பகுதியில் உள்ள ரகேஜா வைத்தியசாலை அருகில் நாயா நகர் குடிசைப்பகுதி உள்ளது. இங்கு சுமார் 50 ஆயிரம் குடிசை வீடுகள் உள்ளன. இதில், நேற்று முன்தினம் முற்பகல் 10.30 மணியளவில் சயான்-மாகிம் லிங்க் ரோட்டிற்கு கீழ் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் திடீரென தீப்பிடித்தது.

இதையடுத்து அந்த வீட்டில் இருந்தவர்கள் அலறி அடித்துக் கொண்டு வெளியே ஓடிவந்தனர். இந்தநிலையில் அந்த வீட்டில் இருந்த கியாஸ் சிலிண்டர் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இந்த தீ விபத்தில் சுமார் 40 குடிசை வீடுகள் எரிந்து நாசமாகின. மேலும் அந்த வீடுகளில் இருந்த பல இலட்சம் மதிப்பிலான பொருட்களும் எரிந்து நாசமாகியதாக கூறப்படுகிறது. இதேபோல் விபத்து ஏற்பட்ட உடன் வீடுகளில் இருந்த மககள் வெளியே ஓடி வந்ததால் அதிரஷ்டவசமாக யாருக்கும் காயமோ, எந்த வித உயிரிழப்போ ஏற்படவில்லை எனத் தெரிய வருகின்றது. (இ-7)

## தீ விபத்தில் 14 பேர் பலி



சீனாவில் பேருந்து ஒன்று தீப்பிடித்து எரிந்ததில் அதில் இருந்த பயணிகள் 14 பேர் பலியாகியுள்ளனர்.

நின்க்சியா மாகாணத்தின் தலைநகரான யின்சுவானில் நேற்று முன்தினம் காலை 7 மணிக்கு இந்த தீ விபத்து ஏற்பட்டுள்ளது. உடனடியாக சம்பவ இடத்திற்கு விரைந்த தீயணைப்பு படையினர் பத்து நிமிடங்களில் தீயை அணைத்தனர். இதில் 14 பேர் பலியாகியுள்ளதாகவும், 32 பேர் காயமடைந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். விபத்துக்கான காரணம் குறித்த தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. சீனாவில் மன நிலை சீர்குலைவு மற்றும் சமூகத்தின் மீதான ஆத்திரம் காரணமாக அண்மைக்காலமாக பேருந்து எரிப்பு சம்பவங்கள் அரங்கேறி வருவது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# அவன்கார்ட் தலைவரிடம் 4 மணி நேரம் விசாரணை



(கொழும்பு)

அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிஸங்க சேனாதிபதி, பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி விசாரணைக் குழுவிற்கு சென்று வாக்குமூலம் ஒன்றை அளித்துள்ளார்.

நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் தொடரபில் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சேனாதிபதியிடம் விசாரணை நடத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் 10.00 மணியளவில் ஆணைக்குழுவிற்கு சென்ற நிஸங்க சேனாதிபதி 4 மணி நேரம் வாக்குமூலம் அளித்துள்ளார்.

ரக்னா லங்கா நிறுவனத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் இவ்வாறு வாக்குமூலம் அளித்துள்ளார்.

இதற்கு முன்னதாக நான்கு தடவைகள் ஆணைக்குழுவிற்கு பிரசன்னமாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும், நேற்று முன்தினமே ஐந்தாவது தடவையாக விடுக்கப்பட்ட அழைப்பின் போதே வருகை தந்த நிஸங்க சேனாதிபதி வாக்குமூலம் அளித்துள்ளார்.

எதிர்வரும் நாட்களில் மீளவும் நிஸங்க சேனாதிபதியை அழைப்பதா? இல்லையா? என்பது பற்றி எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என ஆணைக்குழுவின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-7)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை- 05.01.2016

| நாணயம் | நாடு | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| டொலர் | அமெரிக்கா | 142.08 | 146.30 |
| பவுண்ட் | பிரிட்டன் | 208.26 | 215.98 |
| ஈரோ | ஐரோப்பிய ஒன்றியம் | 152.77 | 159.12 |
| பிராங் | சுவிட்சர்லாந்து | 140.72 | 146.81 |
| டொலர் | கனடா | 101.41 | 105.79 |
| டொலர் | அவுஸ்திரேலியா | 101.36 | 106.31 |
| டொலர் | சிங்கப்பூர் | 99.31 | 103.30 |
| ரூபா | இந்தியா | 2.1677 | ------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 382.4237 |
| குவைத் | டினார் | 474.9903 |
| ஓமான் | ரியால் | 374.5021 |
| கட்டார் | ரியால் | 39.6005 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.4340 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.2538 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 150 | 150 | 160 | 200 | 120 | 180 |
| உருளைக்கிழங்கு | 80 | 60 | 55 | 80 | 70 | 80 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 380 | 600 | 450 | 600 |
| தக்காளி | 100 | 60 | 50 | 100 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 30 | 50 | 40 | 40 |
| கோவா | 140 | 140 | 100 | 160 | 100 | 170 |
| கரட் | 180 | 120 | 200 | 200 | 300 | 300 |
| பூசணி | 60 | 40 | 35 | 60 | 80 | 50 |
| புடோல் | 80 | 100 | 80 | 100 | 80 | 100 |
| வாழைக்காய் | 80 | 60 | 150 | 50 | 60 | 70 |
| சின்ன வெங்காயம் | 160 | 150 | 150 | 120 | 200 | 140 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 65 | 100 | 100 | 80 |
| பாகற்காய் | 180 | 200 | 150 | 200 | 200 | 250 |
| வெண்டிக்காய் | 150 | 160 | 80 | 150 | 120 | 150 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | — | 80 | 100 | 80 |
| பயற்றங்காய் | 150 | 100 | 80 | 200 | 120 | 150 |
| லீக்ஸ் | 150 | 160 | 100 | 160 | 160 | 150 |
| பீற்றூட் | 200 | — | — | — | 240 | — |
| கறிமிளகாய் | 400 | — | — | 300 | 400 | 300 |
| முருங்கைக்காய் | 500 | — | — | — | — | — |
| போஞ்சி | 300 | — | — | 200 | 200 | 300 |
| கத்தரிதம்புள்ள | 120 | 100 | — | — | 100 | — |
| கீரை - 1 பிடி | 30 | 50 | 40 | 40 | 50 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 50 | 110 | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 30-50 | 25-35 | 50 | 30-40 | 50 |
| இராசவள்ளி | 200 | 160 | 110 | 140 | 160 | 150 |
| வெங்காயப்பூ | 300 | 200 | — | 240 | — | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | — | 80 | 120 | 150 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 25 | 30 | 30 | 40 |
| வல்லாரை | 10 | 20 | 20 | 10 | 25 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 40 | 70 | 100 | — |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## கறுப்புச் சட்டை அணிந்து எம்.ஜி.ஆர் போராட்டம் 72

குடும்பங்களைக் காக்கும் பொறுப்பு

2. சிங்களத்தில் உள்ள சிறையில் பலியுண்ட தமிழர் தளபதிகளான தங்கதுரை, குட்டிமணி ஆகியோரின் குடும்பங்கள் தமிழகத்தில் உள்ளன. அந்தக் குடும்பங்களைக் காப்பாற்றவும் அவர்களது குழந்தைகளைப் படிக்க வைத்து ஆளாக்கவுமான முழுப் பொறுப்பை அ.தி.மு.கழகம் ஏற்றுக்கொள்கிறது.

3. இலங்கையில் மனித உரிமைகளுக்காக போராடும் அனைத்து தமிழர்களின் மீது சிங்கள வெறியர்களும், வெறி பிடித்த சிங்கள இராணுவத்தினரும் நடத்திய இன வெறிப் படுகொலைக்குக் காரணமான ஜெயவர்த்தனாவின் இலங்கை அரசுக்கு, இச் செயற்குழு தனது கண்டனத்தை தெரிவிக்கின்றது. தமிழர்களின் இரத்தத்தை உறிஞ்சும் - உடமைகளைச் சூறையாடும் சிங்கள வெறியர்களுக்கு உறுதுணையாக இருந்த ஜெயவர்த்தன அரசின் காட்டு மிராண்டித்தனமான செயலை, இச் செயற்குழு வன்மையாகக் கண்டனம் செய்கிறது.

கறுப்புச்சட்டை

4. இலங்கைத் தமிழர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்புக்கோரி அ.தி.மு.கவினர் கறுப்புச் சட்டை அணிவது என்று இந்தச் செயற்குழு தீர்மானிக்கிறது.

5. அண்மையில் நடைபெற்ற இலங்கைத் தமிழர்களின் இனவெறி கொலைகளுக்குத் தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்து, உடனடியாக வெளிவிவகாரத்துறை அமைச்சரை இலங்கைக்கு அனுப்பியும், இலங்கை ஜனாதிபதியுடன் நேரடித் தொடர்பு கொண்டும் தமிழ் அகதிகளைப் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்ல கப்பல்களை அனுப்பியும் அவதியுறும் தமிழ் அகதிகளுக்குத் தேவையான உணவு, உடைகள், மருந்துப் பொருட்களை விமானம் மூலமும் கப்பல் மூலமும் அனுப்பிய மத்திய அரசுக்கு இந்தச் செயற்குழு நன்றி தெரிவிக்கின்றது.

தமிழகத்தில் அனைத்துக் கட்சிகளும் நடத்திய முழு அடைப்பு கண்டன நாளில், இந்திய வரலாற்றிலேயே முதன் முறையாக மத்திய அரசும், இணைந்து செயற்பட்டு, புகைவண்டிகளையும் விமானங்களையும் ஓடாது செய்து, மத்திய அரசுத்துறை நிறுவனங்களையும் முழு அடைப்புச் செய்ய வைத்தும், தமிழகத்தின் அனைத்துக் கட்சி குழுவினரின் கோரிக்கைகளை ஏற்று தக்க நடவடிக்கைகளை எடுக்க உறுதி அளித்தும் தமிழ் மக்களின் உணர்ச்சிகளுக்கு மதிப்பளித்த மத்திய அரசின் இன்றைய போக்கினை இச் செயற்குழு வரவேற்கிறது.

கோரிக்கை

6. இந்தப் புதிய உணர்ச்சி வேகம் மங்கி மழுங்கி விடாது இலங்கைத் தமிழர்களின் மனித உரிமைகள் நிலையாகப் பாதுகாக்கப்படவும், பல்லாண்டுகளாகத் தீர்க்கப்படாது தொடரும் இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு காணவும், எதிர்காலத்தில் இது போன்ற இனப் படுகொலைகள் நடைபெறாதிருக்க இறுதியான தீர்வு ஏற்படவும் மத்திய அரசு எல்லா விதமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று இச் செயற்குழு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

மேற்கண்டவாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அ.தி.மு.க. செயற்குழு தீர்மானத்தின் படி, ஒகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி முதல் முதலமைச்சர் எம்.ஜி.ஆரும், அமைச் சர்களும், அ.தி.மு.கவினரும் கறுப்புச் சட்டை அணிந்தனர்.

சமரசப் பேச்சு நடைபெறுவதால் கறுப்புச் சட்டை அணிய வேண்டாம் என்று இந்திரா காந்தி கேட்டுக் கொண்டதால் நவம்பர் மாதம் 24 ஆம் திகதியுடன் கறுப்பு சட்டை அணிவதை நிறுத்தினர்.

வீடு

குட்டிமணியின் மனைவி ராஜரூபராணி தன்னுடைய 2 குழந்தைகளுடன் தமிழ்நாட்டுக்கு வந்தார். அவருக்கு நந்தனம் வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் வீடு வழங்கவும், மாதம் ஆயிரம் ரூபா உதவிப்பணம் வழங்கவும் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். உத்தர விட்டார். குட்டிமணியின் சகோதரரும், சகோதரியும் வசிக்க மற்றொரு வீடு ஒதுக்கவும் எம்ஜிஆர். சுட்டளையிட்டார்.

இதேபோல தங்கதுரை மனைவி நவமணிக்கும் வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் வீடு வழங்க எம்.ஜி.ஆர் உத்தரவிட்டார். இதன்படி அவர்களுக்கு வீடுகள் வழங்கப்பட்டன.



எம்.ஜி.ஆருடன், ராசாராம்,ம.பொ.சிவஞானம் ஆகியோர்.

வெலிக்கடை சிறையில் தங்கதுரை, குட்டிமணி, ஜெகன் உள்ளிட்ட போராளிகள் கொல்லப்பட்ட பிறகும் சிங்களவர்கள் தொடர்ந்து கலவரங்களில் ஈடுபட்டனர். இதற்கு பதிலடி கொடுக்க ஈழ மக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியினர் (ஈ.பி.ஆர்.எல்.எப்) மட்டக்களப்பு சிறைச்சாலையை உடைத்து உள்ளே புகுந்தனர். சிறையில் இருந்த 60 பேரை விடுவித்தனர்.

இலங்கை வெலிக்கடை சிறையில் தமிழ்ப் போராளிகள் படுகொலைக்குப் பிறகும், சிங்களவர்களும், இலங்கை இராணுவமும் அமைதியாக இருக்கவில்லை. கலவரங்கள் தொடர் கதைகளாயின. தமிழர்களை எப்படியெல்லாம் கொலை செய்யலாம் என்று யோசித்து, யோசித்து விதவிதமாக கொலை செய்தனர். (தொடரும்)

# பொருளாதார மேற்பார்வை ஸ்திரமற்றதாக உள்ளது!

## இலங்கை நிலை குறித்து சர்வதேச நாணய நிதியம்

(கொழும்பு)

**இலங்கையின் பொருளாதார மேற்பார்வை ஸ்திரமற்ற நிலையில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.**

இந்தநிலையில் பொருளாதார ஸ்திரத்தன்மையானது எதிர்வரும் மாதங்களில் மேற்கொள்ளப்படும் பொருளாதார கொள்கைகளிலேயே தங்கியுள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

தனியார்துறையின் கடன்கள் 2015இல் அதிகரித்துள்ளன. இதனை தவிர, வெளிநாட்டு நாணய ஒதுக்கம், பொது நிதிகள், பொதுமக்களின் படுகடன் அதிகரிப்பு என்பன தொடர்பில் அவதானம் நிலவுவதாக சர்வதேச நாணய நிதியம் குறிப்பிட்டுள்ளது.

எனவே இந்த நிலைமைகளை போக்க இலங்கை அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று நிதியம் கோரியுள்ளது.

பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்த, வரிக்கொள்கையில் மீளமைப்பு உட்பட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இலங்கையின் வரவு செலவுத்திட்ட துண்டுவிழும் தொகையின் நிலைமை வரவேற்கத்தக்க நிலையில் இல்லை. அத்துடன் அரசாங்கத்தின் வரி வருவாயில் 2011 ஆம் ஆண்டின் பின்னர் குறைவு ஏற்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு அரசாங்கத்தின் வருமானம் மொத்த தேசிய உற்பத்தியில் 13.6 வீதமாக இருந்தது. எனினும் அது 2014ஆம் ஆண்டு 11.7 வீதமாக குறைந்துள்ளது.

இதில் வரிவருமானம் 2013 இல்11.6 வீதமாக இருந்தபோதும் 2014 ஆம் ஆண்டு 10.7 வீதமாக குறைந்துள்ளது என்று சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டியுள்ளது.

எனவே மறைமுக வரி வருமானத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்றும் நிதியம் வலியுறுத்தியுள்ளது. (இ-7)

# மரண தண்டனையை இரத்துச் செய்யுமாறு ஜனாதிபதிக்கு கடிதம்



இலங்கையில் அமுல்படுத்த திட்டமிட்டுள்ள மரண தண்டனையை நீக்குமாறு பல யோசனைகளை முன்வைத்து கடிதம் ஒன்றினை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் இலங்கை மனித உரிமை ஆணைக்குழு நேற்று முன்தினம் சமர்ப்பித்துள்ளது.

மனித உரிமையின் அடிப்படையில் மரண தண்டனை கொடூரமானதாகும், மனிதாபிமானமற்றதாகும். ஆகவே மனித சமுதாயத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் இலங்கை செயற்பட வேண்டும் என அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தின் பிரதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் சம்பந்தன் மற்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-7)

# ஜனாதிபதியின் கருத்துக்கு பொதுபல சேனா பாராட்டு

(கொழும்பு)

வில்பத்து காடழிப்பு தொடர்பில் ஜனாதிபதியின் அறிவிப்பு பாராட்டத்தக்கது என பொதுபல சேனா அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு, 2013 இல் வில்பத்து வன அழிப்பு தொடர்பில் பொதுபல சேனா ஆரம்பித்த போராட்டத்தின் ஒரு வெற்றியாகும் எனவும் அவ்வமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இடம்பெற்றுள்ள ஊழல், மோசடிகள் தொடர்பில் கண்டறியப்பட வேண்டும் எனவும் தேசிய பாதுகாப்புக்கு இதனால் எதிர்காலத்தில் ஏற்படும் அச்சுறுத்தல்களை இல்லாமல் செய்யப்பட வேண்டும் எனவும், வேறு பிரதேசங்களில் இடம்பெறும் சூழல் பாதிப்புகளையும் இல்லாமல் செய்து மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர வேண்டும் எனவும் பொதுபல சேனா கோரிக்கை விடுத்துள்ளது. இதற்காக சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட வேண்டும் எனவும் அவ்வமைப்பு எடுத்துக் காட்டியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முன்தினம் பத்தரமுல்ல "அபேகம" வளாகத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

மூன்று வருடத்துக்குள் இந்நாட்டிலுள்ள காட்டுப் பிரதேசத்தை 29 வீதத்திலிருந்து 32 வீதமாக அதிகரிக்க வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும், கடந்த அரசாங்கத்தில் அமைச்சின் குழுவொன்றின் மூலம் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்ற 3500 ஏக்கர் நிலத்தை வழங்கியுள்ளதாகவும், இதற்கு வில்பத்து வனப் பிரதேசமும் உள்வாங்கப்பட்டுள்ளதனால், அங்கு பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி இங்கு குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன், தானும் இந்த நடவடிக்கைக்கு எதிரானவன் எனவும், வில்பத்து வனப் பிரதேசம் அழிவுக்குடபடாத வகையில் வேறு பிரதேசங்களில் அவர்கள் குடியேற்றப்படல் வேண்டும் எனவும் ஜனாதிபதி மேலும இங்கு குறிப்பிட்டிருந்ததாகவும் பொதுபல சேனா வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

# வெற்றியின் விதைகள்

வாய்ப்புகளே வெற்றியின் விதைகள்.வாய்ப்புகள் எப்போதும் தொடர்ந்து வந்து கொண்டே இருக்காது. எப்போதாவது தான் அது வரும். அப்போது நாம் கவனமாக விழிப்பாக இருந்து அதைக் கைப்பற்றிக்கொள்ள வேண்டும்.

ஒரு வாய்ப்பானது இரண்டு முறை உங்கள் வீட்டுக் கதவைத் தட்டாது என்கிறார் அறிஞர் கம்போர்ட்.

ஓர் உண்மைச் சம்பவத்தைச் சொல்கிறேன். தந்தி கொடுப்பது அதிக பிரபல்யமாக இருந்த நேரம் அது. தந்தி அலுவலகத்தில் தந்தி பயிற்சி பெற்றவர்களையே வேலைக்கு எடுப்பார்கள்.அதற்கு மோர்ஸ் கோடு அதாவது கட கட் கட் கட என்ற ஒலியின் மூலம் தகவலை அனுப்புகின்ற முறையைக் கற்றிருக்க வேண்டும்.

ஒருதந்தி அலுவலகத்தில் இதற்கான நேர்முகத் தேர்வு நடைபெற்றது. காலை பத்து மணிக்குத் தேர்வு தொடங்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.பதினைந்துபேர் அந்த நுழைவுத் தேர்வுக்காகக் காத்திருந்தார்கள்.நீண்ட நேரமாகியும் யாரும் அழைக்கப்படவில்லை.இவர்கள் பொறுமை இழந்து தங்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள்.

அப்போது அவர்களில் ஒருவர் மட்டும் வேகமாக எழுந்தார்.தேர்வு நடக்கும் அறைக்குள் நுழைந்தார்.கொஞ்ச நேரத்தில் வேலையில் சேருவதற்கான கடிதத்தோடு வெளியே வந்தார்.

போட்டிக்கு வந்திருந்த எல்லோரும் குழம்பிப் போனார்கள்.எங்களையெல்லாம் ஏன் அழைக்கவில்லை என்று தேர்வை நடத்திய அதிகாரியிடம் சண்டை போட்டார்கள்.அவர் சொன்னார். நாங்கள் உங்கள் எல்லோருடைய பெயர்களையும் வரிசையாக அழைத்துக் கொண்டுதான் இருந்தோம். மீண்டும் மீண்டும் அழைத்தோம்.அதாவது வாய்மொழியாக இல்லாமல்.தந்தி கொடுப்பதற்குரிய மோர்ஸ்கோடு மூலம் அழைத்தோம்.நீங்கள் யாரும் அதைக் கவனிக்கவி ல்லை. ஒருவர் மட்டும் தன் பெயர் அழைக்கப்படுவதைக் கவனித்து உள்ளே வந்தார்.அவருக்கு இந்த வேலையைக் கொடுத்து விட்டோம் என்றார்.

இன்னொரு நிகழ்ச்சியைச் சொல்கிறேன்.ஒரு அரசர், கொஞ்சம் வித்தியாசமாகச் சிந்திக்கக் கூடியவர்.அவர் தனது நாட்டு மக்களின் மனநிலையை அறிய ஒரு சோதனை நடத்தினார்.

ஒரு மலைப்பாதை. மக்கள் அதிகமாக நடக்கும் பாதை அது.அந்தப் பாதையின் நடுவில் ஒரு பாறாங்கல்லைப் போட ஏற்பாடு செய்தார்.

பாதையில் நடந்த மக்கள் அந்தப் பாறாங்கல்லைப் பார்த்து எரிச்சல் அடைந்தார்கள். சிலர் அதைவிட்டு விலகி ஒரு ஓரமாக நடந்து போகத் தொடங்கினார்கள்.வேறு சிலர் வாகனங்களோடு அந்த இடத்திலேயே காத்துக் கிடந்தார்கள்.மேலும் சிலர் ,போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் அந்தக் கல்லை அகற்றாத அரசாங்கத்தைத் திட்டித் தீர்த்தார்கள்.ஆனால்,பாறையை நகர்த்திப் போட அவர்களில் யாரும் முயலவில்லை.

அப்போது அந்த வழியே ஓர் இளைஞன் வந்தான்.பலம் கொண்ட மட்டும் அந்தப் பாறையை நகர்த்த முயற்சி செய்தான். மற்றவர்களை அதை வேடிக்கை பார்த்தார்களே தவிர,அவனுக்கு உதவ அவர்களில் ஒருவர் கூட முன்வரவில்லை. சிலர் அவனை பரிகாசம் செய்தார்கள்.இளைஞன் எதைப் பற்றியும் கவலைப்படாமல் பாறையை நகர்த்துவதிலேயே குறியாக இருந்தான்.ஒரு வழியாக பாறை நகர்ந்தது.அதனை மலைச்சரிவில் உருட்டி விட்டான்.அந்தப் பாறையின் அடியில் பல பொற்காசுகளும்,மன்னன் கையெமுத்திட்ட ஒரு கடிதமும் இருந்தன.

இந்தப் பாறையை நகர்த்தியதற்குப் பாராட்டு.உங்களுக்கு இப்பொற்காசுகளைப் பரிசாக அளிக்கிறேன்.உங்களைப் போன்றவர்களே இந் நாட்டுக்குத் தேவை என்று அந்தக் கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது.


இப்படித்தான் வழியெல்லாம் வாய்ப்பு எனும் புதையல்கள் நமக்காகக் காத்திருக்கின்றன. நாம் தான் எச்சரிக்கையாயிருந்து,அவற்றை எடுக்க வேண்டும்.

வாய்ப்புக்கள் வரும்போது அதைப் பயன்படுத்திக் கொள்வது என்பது ஒருவகை. நாமே வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்வது என்பது இன்னொரு வகை.

வெற்றியாளர்கள், சந்தர்ப்பங்களை அதாவது வாய்ப்புகளை உருவாக்கும் ஆற்றல் படைத்தவர்கள் என்கிறார் அறிஞர் லூயி பாஸ்டியன்.

*கலைமாமணி முனைவர் இளசை சுந்தரம்*

# புதுவருட பலன்கள் 2016



**வாழ்க்கையின் இலட்சியமே தொண்டு செய்வதுதான் என்று சொல்லும் சிம்ம ராசி நேயர்களே!**


புத்தாண்டில் புதிய திருப்பங்கள் வரப்போகின்றன. மங்களகாரகன் செவ்வாய்க்குரிய 9 எண் ஆதிக்கத்தில் இந்த ஆண்டு பிறப்பதால் நீங்கள் கொடுத்து வைத்தவர்கள்தான். செவ்வாய் உங்கள் ராசிக்கு 4, 9 இற்கு அதிபதியானவர். யோக கிரகமான செவ்வாய்க்குரிய எண்ணில் இந்த ஆண்டு பிறப்பதால் யோக வாய்ப்புகளை வரிசையாக நீங்கள் சந்திக்கப் போகிறீர்கள். ஆனால் தேகநலனில் மட்டும் உங்களுக்கு அக்கறை தேவைதான்.

ஏனென்றால் அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் அதிகமாகவே உங்கள் ஜாதகத்தில் இருக்கின்றது. வீண் பழி, விரயங்களை கொடுப்பவர் அர்த்தாஷ்டமச் சனியாகும். வருடத் தொடக்கத்தில் உங்கள் ராசிக்கு அதிபதியான சூரியன் தனாதிபதி புதனுடன் இணைந்து இருக்கிறார்.

எனவே திரும்பிய பக்கமெல்லாம் விரும்பும் அளவு செல்வம் கிடைக்கும். பொதுநலத்தில் உள்ளவர்களுக்கு புகழ் கூடும். பொறுப்புகள் கைக்கு வரும்.

புத்தாண்டு பிறந்ததோ புனிதமான வெள்ளிக்கிழமையாகும். சுக்ரன் உங்கள் ராசிக்கு 3, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சகாய ஸ்தானம் மற்றும் தொழில் ஸ்தானத்திற்கும் அதிபதியானவர் சுக்ரன்.

எனவே தனக்குரிய நாளில் பிறக்கும் இந்த புத்தாண்டில் தடைகள் அண்ட விடாமல் வழிசெய்வார். தனவரவு திருப்தி கரமாக இருக்கும். வேலையில் இருப் பவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு வந்து விரும்பியபடியே




தொழில் செய்வர்.

போகிறீர்கள். அஷ்டமாதிபதியான குரு பகவான் வக்ரம் பெறும் பொழுது நல்ல மாற்றங்களைக் கொடுப்பார். நாடு போற்றும் வாழ்க்கை அமையும். இல்லத்தில் உள்ளவர்களால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். ஏராளமான வாய்ப்புகள் வந்து அலைமோதும்.

குருவோடு சந்திரனும் இணைந்து தொடக்க நாளில் குருச்சந்திர யோகத்தை கொடுக்கின்றார். புதனோடு சூரியன் இணைந்து புத ஆதித்ய யோகத்தை வழங்குகின்றார்.

**ராகு-கேது பெயர்ச்சிக்காலம்!**

இதுவரை உங்கள் ராசிக்கு 2ஆம் இடத்தில் சஞ்ரிசரித்து வந்த ராகு இனி ஜென்மத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இதுவரை உங்களுக்கு 8ஆம் இடத்தில் சஞ்சரித்துக் கொண்டிருந்த கேது பகவான் இனி சப்தம ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகிறார். ராகுவும், கேதுவும் சுமார் ஒன்றரை வருட காலம் சிம்மத்திலும், கும்பத்திலும் உலா வரப்போகிறார்கள். உங்கள் கனவுகளையும், கற்பனைகளையும் நடத்தி வைக்கக் காத்திருக்கிறார்கள்.

உங்கள் ராசிக்கு மூன்றாமிடமான சகோதர ஸ்தானத்தை ராகு பார்க்கின்றார். களத்திர ஸ்தானம் மற்றும் லாப ஸ்தானத்திலும் அதன் பார்வை பதிகின்றது. அதோடு நவக்கிரகங்களில் சுபகிரகமாக விளங்கும் குருவும் சிம்மத்தில் சஞ்சரிப்பதால் தலைக்கு வந்தது தலைப்பாகையோடு போயிற்று என்ற பழமொழிக்கேற்ப குரு பலத்தால்

யால் ஏற்பட்ட பிரச்சினை விலகும். சொத்துக்களில் இருந்த பிரச்சினைகள் அகலும். பிரயாணங்களால் நன்மை ஏற்படும்.

**சனியின் சஞ்சார நிலை!**

27.3.2016 முதல் 10.8.2016 வரை விருச்சிகத்தில் சனி வக்ரம் பெறுகிறார். 11.8.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி உலா வருகின்றார்.

**சஞ்சரிக்கும் சனியோ நான்கில்**
**சம்பந்தப்பட்டிருந்தால்,**
**அஞ்சிடும் நோய்கள் சேரும்!**
**அதிகமாய் செலவும் கூடும்!**
**வெஞ்சினம் பகைவர் கொள்வர்!**
**வீடுகள் மாற்றமாகும்!**
**நெஞ்சினில் சனியை நீங்கள்**

காலத்திற்கு உத்தரவாதம் தரும் ஆண்டாக அமையப் போகின்றது. ஜென்ம குருவின் ஆதிக்கத்தால் செல்வநிலை உயரும். இல்லத்தில் சுபகாரியப் பேச்சுகள் நல்ல முடிவிற்கு வரும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். கல்யாணக் கனவுகள் நனவாகும். கணவன்-மனைவிக்குள் நெருக்கம் அதிகரிக்கும். புண்ணிய காரியங்களுக்கு பொருளுதவி செய்வீர்கள். புதிய தொழில் தொடங்கும்

## ராசிநாதனோ பாக்கியத்தில்! யோசித்ததெல்லாம் இனி வெற்றி!

பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது.

குடும்பத்தில் இருந்த குழப்பங்கள் அகலும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினைகள் தீரும். உடல் ஆரோக்கியத்தில் மட்டும் ஒருசில தொல்லைகளைக் கொடுக்கலாம். ராகு திசை நடப்பவர்கள், சகோதரர்களால் சகாயம் காண்பர். கேது திசை நடப்பவர்கள் உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

பொருளாதார நிலையில் ஏற்ற, இறக்கம் இருந்து கொண்டே இருக்கும். அரசியலவாதிகளால் அனுகூலம் ஏற்படும். புதிய பொறுப்புகள் திடீரென ஒரு சிலருக்கு வந்து சேரும்.

சப்தம ஸ்தானத்தில் கேது சஞ்சரிக்கின்றார். குரு பார்க்கும் கேதுவாக இருப்பதால் கொடுக்கும் பலன்கள் நற்பலன்களாகவே இருக்கும். தெய்வீகச் சிந்தனை மேலோங்கும். திருப்பணிகள் செய்வதில் மும்முரம் காட்டுவீர்கள்.

குடமுழுக்கு விழா செய்வதையும் முன்னின்று நடத்தி வைப்பீர்கள். வாழ்க்கைத்துணை வழியே இருந்த பிரச்சினை படிப்படியாக மாறும். வேலை மாற்றம், இடமாற்றம், வீடு மாற்றங்களை விரும்பி ஏற்றுக் கொள்வீர்கள். கேது வழிபாடு கீர்த்தியை வழங்கும்.

**சிம்மத்தில் குருவின் சஞ்சாரம்!**

வருடத் தொடக்கத்தில் அதிசாரத்தில் இருக்கும் குரு கன்னி ராசியில் சஞ்சரிக்கின்றார். 7.2.2016 முதல் 1.8.2016 வரை மீண்டும் உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கப் போகின்றார். இதில் 17.5.2016 வரை சிம்மத்திற்குள்ளேயே வக்ரம் பெற்றுச்சஞ்சரிக்கின்றார். 18.5.2016 முதல் வக்ர நிவர்த்தியாகி 1.8.2016 வரை உங்கள் ராசியிலேயே சஞ்சரிக்கின்றார்.

ஜென்ம குருவாக இருப்பதால் 'ஜென்ம ராமர் வனத்திலே' என்று பழைய வசனத்தை எல்லோரும் சொல்வார்கள். எனவே உங்களைப் பொறுத்தவரை அஷ்டமாதிபதியாக விளங்குவதோடு மட்டுமல்லாமல் பஞ்சமாதிபதியாகவும் அல்லவா குரு விளங்குகின்றார். எனவே பாக்கியாதிபதி ஜென்மத்தில் சஞ்சரிக்கும் பொழுது அனைத்துப் பாக்கியங்களும், நினைக்க இயலாத இராஜயோகமும் வந்து சேரும். நிம்மதி கிடைக்கும்.

அதன் பார்வை 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிவாவதால் மிஞ்சும் பலன் கிடைக்கப் போகிறது. குழந்தைகளின் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். கல்யாணக் கனவுகள் நனவாகும். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். வாழ்க்கைத் துணை

**நினைத்தாலே வெற்றி கிட்டும்!**

என்று ஜோதிட சாஸ்திரம் சொல்கின்றது.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது அர்த்தாஷ்டமச் சனியின் ஆதிக்கம் இருப்பதால் ஆரோக்கியத் தொல்லைகள் அதிகரிக்கலாம். வீணான செலவுகளால் விரயங்கள் வந்து சேரும். தேனாகப் பேசிய உறவினர்கள் இனி தானாக விலகிச் செல்வர். வீடு மாற்றங்களும், நாடு மாற்றங்களும், உத்தியோக மாற்றங்களும் விருப்பமின்றி கூட வந்து சேரலாம். வாகனத் தொல்லை உண்டு.

ஆனால் உங்கள் திசாபுத்தி பலம் பெற்றிருந்தால் எதற்கும் கவலைப்படத் தேவையில்லை. அதோடு சனி வழிபாட்டையும் மேற் கொண்டால் இனிய வாழ்க்கை அமையும்.

**சனி, செவ்வாய் சேர்க்கைக் காலம்!**

27.2.2016 முதல் 9.9.2016 வரை விருச்சிக ராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக் காலத்தில் எதிலும் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. சொத்துப் பிரச்சினைகளும், சொந்த பந்தங்களால் பிரச்சினைகளும் ஏற்படலாம்.

உடன்பிறப்புகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும். வியாபாரப் போட்டிகள் அதிகரிக்கும். வீடு மாற்றங்கள் உருவாகலாம். மருத்துவச் செலவுகளும், ஆரோக்கியத் தொல்லைகளும் உருவாகும். குறிப்பாகப் பயணங்களில் கவனம் தேவைப்படும் நேரமிது.

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்

**செல்வ வளம் தரும் சிறப்பு வழிபாடு!**

உங்கள் ராசிநாதன் சூரியன் என்பதால் பிரகாசமான எதிர்காலம் அமைய ஞாயிறு தோறும் சிவன் வழிபாட்டை மேற்கொள்ளுங்கள். பிரச்சினைகளிலிருந்து விடுபடவும் பெருமைகளைக் குவிக்கவும் தேவியை வழிபட்டு இனிய வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுங்கள்.

**சிம்ம ராசியில் பிறந்த பெண்களுக்கு!**

இந்த ஆண்டு ஒளிமயமான எதிர்

முயற்சியில் உங்கள் பெயர் சேர்க்கப்படும். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புகழ் கூடும். பொறுப்புகள் அதிகரிக்கும்.

நினைத்தபடியே செயற்பாடுகளில் வெற்றி காண்பர். தொழில் வளர்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் உதிரியாவர். ஜென்ம ராகு, சப்தம கேது வருவதால்




முறையாக சர்ப்ப சாந்திப் பரிகாரங்களைச் செய்து கொள்வது நல்லது. அப்போதுதான் சர்ப்ப கிரகங்கள் சந்தோசங்களை நிலைக்க வைக்கும். வியாழக்கிழமையன்று திசைமாறிய தென்முகக் கடவுளை வழிபட்டால் வெற்றி வாய்ப்புகள் வீடு தேடி வரும்.

**ஆடி பதினெட்டில் தேடி வரும் யோகம்!**

ஆடி பதினெட்டு முதல் அதாவது 2.8.2016 முதல் குரு பகவான் இரண்டாமிடத்தில் முறையாகச் சஞ்சரிக்கின்றார். அப்பொழுது அதன் பார்வை 6, 8, 10 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே அந்த இடங்களெல்லாம் புனிதமடைகின்றன.

அந்த அடிப்படையில் இரண்டாமிடத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது திரண்ட செல்வத்தை குரு பகவான் உங்களுக்குக் கொடுப்பார். அதன் தேனான பார்வை பதியும் 6, 8, 10 ஆகிய இடங்கள் புனிதமடைவதால் எதிரிகள் விலகுவர். இதுவரை இருந்த கடனசுமை குறையும். உதிரி வருமானங்கள் பெருகும். உத்தயோக மாற்றங்கள் உறுதியாகும்.

வசதி வாய்ப்புகளை பெருக்கிக் கொள்வீர்கள். வாகன யோகம் உண்டு. அசதிகள் மாறும். ஆர்வமும் உற்சாகமும் உடலில் வந்திணையும். கூட்டுத் தொழில் ஒரு சிலருக்கு வாய்க்கலாம். ஏற்ற தொழில்தானா? என்பதை ஆராய்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள்,

நாளை கன்னி ராசி

# எந்தவொரு பிரஜையும் யோசனை முன்வைக்கலாம்

## உத்தேச அரசியல் அமைப்பு குறித்து என்கிறார் விஜயதாஸ

(கொழும்பு)

**உத்தேச அரசியல் அமைப்பு திருத்தம் தொடர்பில் நாட்டின் எந்தவொரு பிரஜையும் யோசனை முன்வைக்க முடியும் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**




சிங்கள ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அந்த வகையில் உத்தேச அரசியல் அமைப்பு உருவாக்குவது தொடர்பில் பௌத்த மாநாயக்க தேரர்கள் மற்றும் மதங்களின் தலைவர்களிடம் ஆலோசனைகளை எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

குறித்த விடயம் தொடர்பில் பொது மக்களின் யோசனைகளை பெற்றுக் கொள்ளும் பொருட்டு தனியான குழு ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் புதிய அரசியல் அமைப்பின் ஊடாக பௌத்த மதத்திற்கு இதுவரை காணப்பட்ட உரிமைகள் மறுக்கப்படும் என எதிர்க்கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டு அடிப்படையற்ற பொய் என நீதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் அரசியல் அமைப்பு இதுவரையிலும் உருவாக்கப்படவில்லை என தெரிவித்த அவர் அதற்கு இன்னமும் கால அவகாசம தேவைப்படுவதாகவும் கூறியுள்ளார்.

எனினும் எதிர்க்கட்சிகள் நினைக்கும் கருத்துக்களைக் கூறி மக்களை பீதியில் ஆழ்த்துவதாக அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

இதேவேளை அரசியல் அமைப்பு உருவாக்குவதற்கு முன்னரும் அதன் பின்னரும் கருத்துக்கள் கோரப்படும் என நீதி அமைச்சர் கூறியுள்ளார்.

முன்னதாக மக்களின் கருத்துக்கு அமைய சோல்பரி அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டதாக குறிப்பிட்ட நீதி அமைச்சர், அதன் பின்னர் நாட்டில் மக்களின் கருத்தின் அடிப்படையில் உருவாக்கப்படும் அரசியல் அமைப்பு இதுவாகவே அமையும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தனியொரு தரப்பின் தேவைகளுக்கு அமைய அரசியல் அமைப்பு உருவாக்கப்படாது என்பதனால் எந்தவொரு தரப்பும் பாதிக்கப்படமாட்டார்கள் என நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்துள்ளார்.(இ-7)

## நெலும்தெனிய நீதவானின் இடமாற்றம் ஏன் இன்னும் ரத்து செய்யப்படவில்லை?

(கொழும்பு)

பிரகீத் எக்னெலிகொட கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவத்தின் புலனாய்வுத் துறை அதிகாரிகள் மீது இரகசியப் பொலிஸார் தாக்கல் செய்துள்ள வழக்கை விசாரணை செய்து வரும் ஹோமாகம நீதவான் வை.ஆர்.பீ. நெலும்தெனிய, மொரட்டுவ நீதி மன்றத்துக்கு இடமாற்றம் செய்யப் பட்டுள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பு பிரதான நீதவான் கிஹான் பலபிட்டிய மற்றும் மேலதிக நீதவான் நிஷாந்த பீரிஸ் ஆகியோருக்கு வழங்கப்பட்ட இடமாற்றம் பிரபல நபர்களின் வழக்கு விசாரணை நடைபெறுவதனால் ரத்து செய்யப்பட்டது. இதனை சுயாதீன நீதிச் சேவை ஆணைக்குழு மேற்கொண்டது.

இதேபோன்று, ஒரு முக்கிய வழக்கையே ஹோமாகம நீதவான் நீதிபதி மேற்கொண்டு வருகின்றார். இவரது இடமாற்றத்தை மாத்திரம் ஏன் ரத்து செய்யவில்லையென்ற கேள்விகள் எழுப்பப்படுகின்றன. சாதாரண இடமாற்றம் பெற்றுச் செல்ல இருந்தவர்களையே பிரபல வழக்கு விசாரணை எனத் தெரிவித்து அவர்களது இடமாற்றத்தை ரத்து செய்தனர்.

அதேபோன்று, முக்கிய வழக்கை விசாரணை செய்பவரே ஹோமாகம நீதவான் நெலுந்தெனியவும் ஆவார். இவரும் சாதாரண இடமாற்றத்தின் கீழ் இடமாற்றம் பெற்றுள்ளார். இவரின் இடமாற்றத்தை மாத்திரம் ஏன் சுயாதீன நீதிச் சேவை ஆணைக்குழு ரத்து செய்யவில்லை? என்ற கேள்விகள் எழுந்துள்ளன. (இ-7)


## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 595

Search for people, places and things Nagendram Home

**நதீபன்**

அழகைப் பற்றி கனவு
காணாதீர்கள், அது உங்கள்
கடமையை பாழாக்கி விடும்.
கடமையை பற்றி கனவு
காணுங்கள் அது உங்கள்
வாழ்க்கையை அழகாக்கும்.
-அப்துல் கலாம்

**ஜசி**



**நிஷா நிஷாந்தன்**




அப்பா:-ஏன் செல்லம் அழறா?
மகன்:-அம்மா அடிச்சிட்டாங்க...
அப்பா:-அம்மாதானே அடிச்சாங்க அழாதே
மகன்:-உனக்கு பழகிப்போச்சு...
எனக்கு வலிக்குதப்பா...

**உஷா உஷானி**




**நிஷா ஆனந்த்**

செல் ஃபோன் சேவையை
துண்டித்து விட்டால் பாதி பேர்
மனநலம் பாதிக்கப் படுவார்கள்
பாதி பேர்
குணமாகிவிடுவார்கள்.

**பரமகம்சன்**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மகிந்தவை உயிர்ப்பிக்கும் சீனா

ஜனாதிபதித் தேர்தலில் தோற்கடிக்கப்பட்டு சரியாக ஒரு ஆண்டு கழித்து, மகிந்த ராஜபக்ஷ சீனாவுக்கான பயணம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கிறார்.

எதிர்வரும் 11 ஆம் திகதி தொடக்கம், நான்கு நாட்கள் அவர் சீனாவிற்கு பயணம் மேற்கொள்ளவிருப்பதாக,மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர் ரொகான் வெலிவிட்ட உறுதிப்படுத்தியிருக்கிறார்.

இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா வழங்கிய உதவிகளுக்கு நன்றி கூறவே அவர் பீஜிங் செல்வதாகக் காரணமும் கூறியிருக்கிறார் மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, ஏழு தடவைகள் சீனாவுக்கான பயணத்தை மேற்கொண்டிருந்தார்.

ஆட்சியிலிருந்தபோது அவரது சீனப் பயணங்கள் முக்கியத்துவம் வாய்ந்ததாகவே இருந்து வந்திருக்கின்றன.

இப்போதும் கூட அவரது சீனப் பயணம் அரசியல் மட்டங்களில் புருவத்தை உயர வைத்திருக்கிறது.

ஆட்சியிலிருந்து அகற்றப்பட்ட பின்னர் முதல் முறையாக வெளிநாட்டுக்குச் செல்லப் போகிறார் மகிந்த ராஜபக்ஷ.

இதுவரையில் அவர் வெளிநாடு ஒன்றுக்குச் செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கவில்லை.

ஆனால், தான் உள்ளிட்ட 24 பேருக்கு தற்போதைய அரசாங்கத்தினால் வெளிநாடு செல்லத் தடை விதிக்கப் பட்டுள்ளதாக, அண்மையில் செய்தியாளர்களிடம் பேசிய போது அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவ்வாறு தடை விதிக்கப் பட்டுள்ளதாக செய்தி வெளியான சமகாலத்தில்தான், மகிந்த ராஜபக்ஷவின் சீனப் பயணம் பற்றிய செய்திகளும் வெளிவந்திருக்கின்றன.

ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர், முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ சீனாவுக்கான பயணம் ஒன்றை சில வாரங்களுக்கு முன்னர் மேற்கொண்டிருந்தார்.

இதனையடுத்தே, மகிந்த ராஜபக்ஷ இப்போது சீனப் பயணத்தை மேற்கொள்ளவிருக்கிறார்.

மகிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்தபோது சீனாவுக்குப் பயணம் மேற்கொண்ட தருணங்களில், பீஜிங்கில் கொடுக்கப்பட்டளவு முக்கியத்துவம், இப்போதும் கொடுக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

இந்தளவுக்கும் மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிலோ அதிகாரத்திலோ இல்லை. ஏன் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் கூட இல்லை. ஒரு பாராளுமன்ற உறுப்பினராக மட்டுமே அவர் இப்போது பதவியில் இருக்கிறார்.

இருந்தாலும், பீஜிங் செல்லும் மகிந்த ராஜபக்ஷவை, சீனாவின் உயர்மட்ட அரசியல் தலைவர்கள் சந்திப்பதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. உயர்மட்டச் சந்திப்புகள் இடம்பெறும் என்றே தகவல்கள் கூறுகின்றன.

இத்தகைய உயர்மட்டச் சந்திப்புகள் ஒன்றும், மகிந்த ராஜபக்ஷவின் பேச்சாளர் கூறுவது போன்று வெறுமனே நன்றி கூறுவதற்காக என்பதை எவராலும் நம்ப முடியாது.

மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் காணப்பட்ட நெருக்கம் சாதாரணமான ஒன்றல்ல. அதன் காரணமாக இலங்கையின் அபிவிருத்திக்கு சீனா பில்லியன் டொலர் கணக்கில் நிதியையும் கொட்டியிருக்கிறது.

சீனா அவ்வாறு நிதியைக் கொட்டியது, மகிந்த ராஜபக்ஷவின் மீதான நட்பினாலோ, பாசத்தினாலோ அல்லது அவருடனான நெருக்கத்தினாலோ அல்ல.

இலங்கையில் சீனா முன்னெடுத்த திட்டங்கள் எந்தளவுக்கு இலங்கைக்கு பயனளித்ததோ அதேயளவுக்கு சீனாவுக்கும் கைகொடுத்தது.

இருநாடுகளுக்கும் பயனளிக்கக் கூடிய திட்டங்களைத்தான தாம் முன்னெடுத்ததாக சீனா அவ்வப்போது மறைக்காமல் கூறி வந்திருக்கிறது.

எவ்வாறாயினும், இலங்கையில் சீனா முதலீடு செய்த திட்டங்கள் அனைத்தும், இலங்கைக்கு சாதகமானது என்றோ, இலங்கையின் அபிவிருத்திக்கு பங்களித்தது என்றோ கூற முடியாது.

உதாரணத்துக்கு அம்பாந்தோட்டை துறைமுகம், மத்தள விமான நிலையம் உள்ளிட்ட பல திட்டங்கள் இலங்கைக்கு கடன்சுமையை ஏற்படுத்தியவைதான்.

இவற்றினால், இலங்கை நன்மையடையவில்லை. ஆனால், சீனா தான் கொடுத்த கடனை வட்டியுடன் சேர்த்து வசூலித்து வருகிறது.

வட்டி வீதத்தைக் குறைக்குமாறு புதிய அரசாங்கம் சீனாவிடம பலமுறை வேண்டுகோள்களை விடுத்த போதிலும், அதற்கு பீஜிங் இணங்கவேயில்லை.

இந்தத் திட்டங்கள், மகிந்த ராஜபக்ஷவின் காலத்திலும் வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கவில்லை. இப்போதும் அப்படித்தான்.

கொழும்பு துறைமுகத்தின் வருமானத்தை வைத்து, அம்பாந்தோட்டை துறைமுகத்தின் கடனை அடைத்து வருவதாக அண்மையில், அமைச்சர் அர்ஜுன ரணதுங்க கூறியிருந்தார்.

ஆனாலும், சீனா கட்டிக்கொடுத்த துறைமுகம், விமான நிலையம் என்ற பெயரும் மகிந்த ராஜபக்ஷவின் பெயரும் மட்டும் இலங்கையில் நிலைத்திருக்கிறது.



இதற்கு நன்றி கூறுவதற்காகவே மகிந்த ராஜபக்ஷ சீனா செல்கிறார்.

சீனப் பயணத்துக்குப் பின்னர் மகிந்த ராஜபக்ஷ தீவிர அரசியல் களத்தில் இறங்குவார் என்று ஏற்கனவே சில தகவலகள் வெளியாகியிருந்தன.

மகிந்த ராஜபக்ஷ ஏற்கனவே தீவிர அரசியல் களத்தில்தான் இருக்கிறார் என்பதில் சந்தேகமில்லை.

அவர், பிரதமர் பதவியைப் பிடிப்பதற்காக பாராளுமன்றத் தேர்தலில் களமிறங்கிய போதே, தீவிர அரசியலுக்குள் நுழைந்து விட்டார்.

ஆனாலும், அவரால் அதிகபட்சமாக பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத்தான் பிடிக்க முடிந்தது.

அது, அவரது அதிகாரப் பசியைத் தீர்ப்பதற்கோ அல்லது சீனாவின் நலன்களைப் பாதுகாப்பதற்கோ போதுமானது அல்ல என்பது தெளிவான விடயம்.

மகிந்த ராஜபக்ஷ போன்ற தனது நெருக்கமான விசுவாசிகள், அதிகார மற்றவர்களாக முடங்கிக் கிடப்பதை சீனா ஒருபோதும் விரும்பாது.

அதனால் அவரை எப்படியாவது தீவிர அரசியல் களத்தில் இயங்கும் ஒருவராக மாற்ற சீனா முயற்சிக்கலாம்.

அதற்கான முதற்படியே மகிந்த ராஜபக்ஷவின் சீனப் பயணம் என்றுகூட அரசியல் வட்டாரங்களில் அரசல் புரசலான பேச்சுக்கள் உள்ளன.

மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில் சீனாவினால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் பலவற்றை, தற்போதைய அரசாங்கம் இடைநிறுத்தி வைத்திருக்கிறது.

இடைநிறுத்தி வைக்கப் பட்டுள்ள சீனாவின் திட்டங்களை மீளத் தொடங்குவதற்கு, அனுமதி அளிக்கப்படவுள்ளதாக அரசாங்கம் ஏற்கனவே கூறியிருந்தாலும், அவை சீனாவுக்குத் திருப்தியளிப்பதாக இருக்காது.

ஏனென்றால், கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில் சீனாவுக்கு வழங்குவதாக உறுதியளிக்கப்பட்ட நிலப்பகுதி, உரிமையாக வழங்கப்படாது என்பதில் தற்போதைய அரசாங்கம் உறுதியாக இருக்கிறது.

கொழும்பு துறைமுக நகரில் 20 ஹெக்டேயர் நிலப்பகுதியை உரிமையாகப் பெறுவது தான் சீனாவின் மூலோபாய நலன்களுக்கு முக்கியமானது.

அதனை விட்டுக்கொடுத்து தான், 1.4 பில்லியன் டொலர் திட்டத்தை தொடர வேண்டிய நிலையில் சீனா இருக்கிறது.

புதிய அரசாங்கம், பதவியேற்ற பின்னர், இலங்கையுடன் உறவுகளைத் தொடர்வதிலோ, வணிக மற்றும் முதலீடுகளைத் தொடர்வதிலோ பெரியளவிலான சிக்கல்கள் இல்லாவிட்டாலும், பாதுகாப்பு மூலோபாய நலன்களை உறுதிப்படுத்துவதில் சீனாவுக்குப் பின்னடைவே ஏற்பட்டிருக்கிறது.

இந்தியப் பெருங்கடலில், சீனாவின் பாதுகாப்பு நலன்களை உறுதிப்படுத்தும் நண்பனாக இருந்த மகிந்த ராஜபக்ஷ, தோற்கடிக்கப்பட்டு மூலையில் முடங்கிக் கிடப்பதை அந்த நாடு ஒருபோதும் விரும்பாது.

மீண்டும் மகிந்த ராஜபக்ஷவை அதிகாரத்துக்குக் கொண்டு வராமல், சீனாவுக்குச் சாதகமான நிலை ஒன்றை, இலங்கையில் மீளவும் ஏற்படுத்த முடியாது.

எனவே, மகிந்த ராஜபக்ஷவை எப்போதும் உயிர்ப்புடன் வைத்திருக்கவே சீனா விரும்பும்.

கடந்த ஒக்டோபர் மாத முற்பகுதியில் சீன அரசாங்கத்தின் சிறப்புத் தூதுவராக கொழும்புக்குப் பயணம் மேற்கொண்டிருந்த சீனாவின் உதவி வெளிவிவகார அமைச்சர் லியூ சென்மின், மகிந்த ராஜபக்ஷவையும் சந்தித்திருந்தார்.

மகிந்த ராஜபக்ஷ அதிகாரத்தை இழந்த பின்னர், சீன உயர்மட்ட அதிகாரி ஒருவர் அவரை சந்தித்துப் பேசியது அதுவே முதல் சந்தர்ப்பமாக இருந்தது. அப்போதே இந்தச் சந்திப்புத் தொடர்பான கேள்விகள் எழுப்பப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும், மகிந்த ராஜபக்ஷ ஆட்சியிழந்த பின்னரும, அவரைக் கைவிட சீனா தயாராக இல்லை என்பதை அந்தச் சந்திப்பு எடுத்துக் கூறியிருந்தது.

இப்போது மகிந்த ராஜபக்ஷ சீனாவுக்கு மேற்கொள்ளும் பயணம், அவருக்கும் சீனாவுக்கும் இடையிலுள்ள நெருக்கத்தை இன்னும் அதிகம் வெளிப்படுத்தும் எனலாம்.

இது, சீன - இலங்கை உறவுகள் என்பது, நாடுகளுக்கிடையிலான உறவின் தன்மைகளின் மீது கட்டியெழுப்பப்பட்டதா? அல்லது தனிநபர்களின் மீது கட்டியெழுப்பப்பட்டதா? என்ற கேள்விக்கான பதிலையும் அளிப்பதாக இருக்கும்.

**ஹரிகரன்**

# யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீடம் நடத்தும் மாபெரும் சமையற் போட்டி

## உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற உணவு வகைகளை தவிர்ப்போம்



யாழ்.மருத்துவபீட சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத்துறையானது உடல்ஆரோக்கிய மேம்பாட்டுக்கான சத்துள்ள உணவு வகைகளைக் கண்டறியும் ஆராய்ச்சியை ஆரம்பித்துள்ளது. நாம் நிறை அதிகரிப்பை ஏற்படுத்தக் கூடிய, உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கின்ற உணவு வகைகளினால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளோம். எனவே சுவையாக போசணைமிக்க புதிய உணவு வகைகளைக்கண்டறியவேண்டியுள்ளது. இதற்கு சமுதாய மற்றும் குடும்ப மருத்துவத் துறையானது பொதுமக்களின் ஆதரவை நாடி நிற்கின்றது. இதுவரை காலமும் சந்தையில் பழக்கத்தில் இல்லாத சுவையான, போசணைமிக்க புதிய உணவு வகைகளைக் கண்டறியும் நோக்கத்தில் வரும் ஒரு மாத காலத்திற்குள் அவ்வாறான உணவு ஒன்றை நீங்கள் கண்டுபிடிக்கும் பட்சத்தில் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். நாங்கள் நடத்தவுள்ள மாபெரும் சமையல் போட்டியில் கலந்துகொள்ளுங்கள். நீங்களும் வெற்றியாளராகலாம்.

### போட்டி விதிமுறைகள்

இந்த சமையற்போட்டியில் பின்வரும் வகைகளில் உணவுகள் தயாரிக்கப்படவுள்ளன.

1.புதிய வகையான பிரதான உணவு (சைவம் / அசைவம்)

2.புதிய வகையான சைவ சிற்றுண்டி உணவுகள்

3.புதிய வகையான அசைவ சிற்றுண்டி உணவுகள்.

4.புதிய வகையிலான பானங்கள்

5.புதிய வகையிலான ஜஸ்கிறீம்

6.புதிய வகையான கேக்

ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் வெற்றியாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்படும். மொத்தமாக 105000/- பெறுமதியான பரிசில்கள் காத்திருக்கின்றன. ஒவ்வொரு பிரிவிலும் முதல் 5 இடங்களைப் பெறும் சமையல் குறிபபுக்கள் புத்தகமாக அச்சிட்டு வெளியிடப்படும்.

### வெற்றியாளரைத் தெரிவு செய்தல்

புள்ளி வழங்குதலில் மத்தியஸ்தர்கள் பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்வர் உணவின் சுவை, உணவின் தோற்றம், போசணைப் பெறுமானம (குறைந்தளவு மாப்பொருள், அதிகளவு புரதம் அதிகளவு நார்ப்பொருள் அதிகளவு விற்றமின்கள்)

மலிவு விலை

தயாரிக்கும் பொருட்களின் இலகுவில் கிடைக்கும் தன்மைக்கு

### இலகுவான செய்முறை

1.புதிய வகையான சைவ/அசைவ பிரதான உணவு மற்றும் சிற்றுண்டிகளுக்கான போட்டி விதிமுறைகளாவன,

தாராளமாக சேர்க்கக் கூடியவை

1.பருப்பு வகைகள்

2.அவரை இனங்கள்- பயறு, கௌபி, உளுந்து

3.சகல வகையான மரக்கறிகள்- மரவள்ளிக்கிழங்கு தவிர்ந்த கிழங்குவகைகள்

4.இலை வகைகள் யாவும

5.பழங்கள் (பலாப்பழம், மாம்பழம், பேரீச்சம்பழம் நீங்கலாக ஏனையவை)

6.சோயா மீற் , சோயா அவரை, தயிர்,பன்னீர், முட்டை, கோழி இறைச்சி, மீன், இறால், சுறா, கருவாடு, கடுகு,மிளகு, சீரகம், வெந்தயம், ஏலக்காய், கராம்பு, கறிவேப்பிலை, உள்ளி, வெங்காயம் மிளகாய் மிளகாய்த்தூள, புளி, எலுமிச்சைப் பழச்சாறு

தேவைக்கு ஏற்றவாறு பயன்படுத்தக் கூடியவை

அரிசிமா, ஆட்டமா, குரக்கன்மா, கோதுமைமா, சீனி, ரவ்வை, சவ்வரிசி, நூடில்ஸ், கச்சான், கஜு,ரின் பால், செயற்கைச்சுவையூட்டிகள்

மிகச் சிறியளவில் சேர்க்க வேண்டியவை

நல்லெண்ணெய், சூரிய காந்தி எண்ணெய், தவிட்டு எண்ணெய், Canola oil, Olive oil, தேங்காய்ப்பூ

### முற்றாகத் தவிர்க்க வேண்டியவை

சர்க்கரை, பனங்கட்டி, நண்டு, கணவாய், பட்டர், மாஜரீன், நெய், சீஸ்,

2. பானங்கள்

பான வகைகளுக்கான போட்டி விதிமுறைகள்

இதற்காக நீங்கள் எந்த விதமான பழவகைகளையும் பயன்படுத்தலாம். ஆனால குறைந்த விலை மற்றும் எளிதாக பெறக்கூடிய உடல் எடை அதிகரிப்பினை ஏற்படுத்தாத கலோரி குறைவான பழ வகைகளை பயன்படுத்தும் பானங்களுக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

மேலும் அனுமதிக்கப்பட்ட நிறமூட்டிகளையும் சுவையூட்டிகளையும் பயன் படுத்த முடியும்.

சீனி சேர்ப்பதை தவிர்ப்பது நல்லது. அதற்குப் பதிலாக சீனி அற்ற இனிப்பு சுவையூட்டிகளை சேர்க்க முடியும். மற்றும் ஒரு பகிர்வுக்குரிய செலவு குறைவாக உள்ள பானத்துக்கு அதிக புள்ளிகள் வழங்கப்படும்.

மேலும் புள்ளியிடலில் சுவை, கலோரி பெறுமானம் சாதாரண பானங்களை விட குறைவாக இருத்தல் கவர்ச்சிதன்மை இலகு செய் முறை, செலவு என்பனவும் கருத்தில் கொள்ளப்படும்.

3.ஐஸ்கிறிம் வகைகளுக்கான போட்டி விதிமுறைகள்

இதற்காக நீங்கள் எந்த விதமான பால் வகைகளையும பயன்படுத்தலாம். ஆனால கொழுப்பு குறைக்கப்பட்ட பால் வகைகளை பயன்படுத்துதல் வரவேற்கத்தக்கது. அத்துடன் பாதாம் கஜு/, கச்சான் போன்ற தானிய வகைகளையும் பழ வகைகளையும் சேர்த்து பரிமாறுவதற்கும் அனுமதி உண்டு. இவ்வாறான சத்துள்ள தானிய வகைகள், பழங்கள் சேர்க்கும் போட்டியாளருக்கு கூடிய புள்ளிகள் வழங்கப்படும்.

மேலும் அனுமதிக்கப்பட்ட நிறமூட்டிகளையும் சுவையூட்டிகளையும் பயன்படுத்த முடியும்.

அதிகளவான சீனி சேர்ப்பதை தவிர்ப்பது நல்லது. அதற்குப் பதிலாக சீனி அற்ற இனிப்பு சுவையூட்டிகளை சேர்க்க முடியும். மற்றும் ஒரு பகிர்வுக்குரிய செலவு குறைவாக உள்ள ஐஸ்கிறீமிற்கு அதிக புள்ளிகள் வழங்கப்படும்.

மேலும் புள்ளியிடலில் சுவை, கலோரி பெறுமானம் சாதாரண பானங்களை விட குறைவாக இருத்தல் கவர்ச்சித்தன்மை இலகு செய் முறை, செலவு என்பனவும் கருத்தில் கொள்ளப்படும்.

4.கேக் (சைவ மற்றும் அசைவ கேக்) தாராளமாக சேர்க்கக்கூடியவை

பழங்கள் (மாம்பழம் பேரீச்சம் பழம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில்)

மரக்கறிகள், முட்டை, எலுமிச்சை மற்றும் தோடம் பழச்சாறு, மட்டுப்படுத்தப்பட்ட அளவில் பயன்படுத்தக் கூடியவை

சீனி, டின்பால், மா, மாஜரீன், கஜு, கச்சான்

1.உணவின் சுவை மற்றும் தரம் நன்றாக இருக்குமிடத்து

2.சீனி மாஜரின் போன்றவற்றை மிக குறைந்த அளவில் பயன்படுத்தும் போதும் கோதுமை மாவிற்குப் பதிலாக வேறு (ஆட்டாமா, குரக்கன்மா) ஆகியவற்றை பயன்படுத்தும் போது மாஜரினுக்கு பதிலாக வேறுபொருட்களை சேர்க்கும் அதிகபுள்ளிகளைப் பெற்றுக்கொள்ள முடியும்.

3.கலோரி பெறுமானம் குறைவாக இருத்தல்வேண்டும்

போட்டியில் பங்குபெற உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பவற்றைக்குறிப்பிட்டு அத்துடன் நீங்கள் தயாரிக்கம் உணவு மேற்கூறப்பட்டுள்ள எந்த பிரிவைச் சேர்ந்தது. அதற்கு நீங்கள் சூட்டியுள்ள பெயர், தேவையான பொருட்களின் பட்டியல் உணவு தயாரிப்பதற்கான செயன்முறை என்பவற்றையும் குறிப்பிட்டு உங்கள் கையொப்பம் என்பவற்றை உள்ளடக்கிய விண்ணப்பப்படிவம் ஒன்றைத் தயாரித்து ஜனவரி மாத இறுதிக்குள் எமக்கு அனுப்பி வையுங்கள் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களை அனுப்பலாம். தெரிவு செய்யப்பட்ட உணவு வகைகளுக்கான செயன்முறைப் போட்டி ஜனவரி மாத இறுதியில் நடத்தப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி

"சமையற்போட்டி"

சமுதாய, குடும்ப மருத்துவத் துறை, மருத்துவ. பீடம், யாழ்.பல்கலைக்கழகம்

இது தொடர்பான சந்தேகங்கள் இருப்பின் 021- 2218178 என்ற எமது தொலைபேசி இலகத்துடன் தொடர்பு கொள்ளுங்கள். நீங்கள் அனுப் பும் விண்ணப்பப்படிவங்கள் பரிசீலிக்கப்பட்டு போட்டி தொடர்பான மேலதிக விபரங்கள் தங்களுக்கு அறியத்தரப்படும்.

# செய்தித் துளிகள்

## தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவு நிகழ்வு கொழும்பில்

இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் அகில இலங்கை இந்து மாமன்ற அணியும் கொழும்பு மகளிர் இந்து மாமன்றமும் இணைந்து நடத்தும் சிவத்தமிழ் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவு நிகழ்வு நாளை வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அகில இலங்கை இந்துமாமன்ற மகளிர் அணித் தலைவி அருள்மொழி ஆசி வித்துவான் வசந்தா வைத்தியநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அமெரிக்கா ஹவாய், சைவ ஆதீன குரு சுப்பிரமுனி சுவாமிகளின் சீடர் ஆன்மீகச் சுடர் தொண்டு நாதன் சுவாமிகள் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (இ-5)

## புதிய வரி அதிகரிப்பினால் வாகனப் பதிவுகள் வீழ்ச்சி

கூட்டரசாங்க வரவு செலவுத் திட்டத்தில் வாகனங்கள் மீது விதிக்கப்பட்ட வரியின் காரணமாக கடந்த டிசெம்பர் மாதத்தில் மோட்டார் சைக்கிள்கள், ஆட்டோக்கள் மற்றும் பேருந்து என்பனவற்றின் பதிவுகள் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக மோட்டார் வாகன பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்றபதிவுகளுடன் ஒப்பிடுகையல் இந்த தொகை 4756 இனால் குறைந்துள்ளதாகவும் திணைக்கள அதிகாரியொருவர் அறிவித்துள்ளார். (இ-7)

## ஆன்மீகத்தை விட அரசியலுக்கே ஆலயங்களில் அதிக முன்னுரிமை

ஆன்மீக செயற்பாடுகளை விட அரசியல் வாதிகளின் கூட்டங்களே அதிகமாக தோட்டப்புறங்களிலுள்ள ஆலயங்களில் நடைபெறுகின்றன என மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் எம்.ரமேஸ் தெரிவித்தார்.

ஆலயங்களில் அரசியல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதால் சமூகத்தில் இன்று இன ஒற்றுமை இல்லாமல் செய்யப்படுகின்றது.

எனவே இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்தி ஆலயங்களை நாம் முறையாக வழி நடத்த வேண்டும் எனவும் பொகவந்தலாவை தோட்டத்தில் உள்ள ஆலயத்திற்கு விநாயகர் சிலை வழங்கி வைத்து உரையாற்றிய போது மேற்கண்டவாறு மத்திய மாகாண தமிழ்க் கல்வி அமைச்சர் எம். ரமேஸ் தெரிவித்தார். (இ

## மேம்பாலங்களை அமைக்க அனுமதி

கொழும்பு கோட்டை மற்றும்சில புறநகர் பகுதிகளை இணைக்கும் மேம்பாலங்கள் சிலவற்றை நிர்மாணிக்க அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாக தெரியவருகிறது.

பெருநகரம் மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சு இணைந்து இதற்கான பணிகளை இந்த வருடம் ஆரம்பிக்கவுள்ளன. அதேவேளை கொழும்பு கோட்டை மற்றும் அத்துருகிரிய இடையிலான முதலாவது அதிவேக நெடுஞ்சாலை நிர்மாணிக்கப்படவுள்ளது.

21 கிலோ மீற்றர் நீளமான இந்த வீதி கொழும்பு கோட்டை, ஒரு கொடவத்தை, தொட்டகொட, ராஜகிரிய, பத்தரமுல்லை, மாலபே, அத்துருகிரிய ஆகிய பிரதேசங்கள் ஊடாக அமைக்கப்படவுள்ளது.

இதனை தவிர அத்துருகிரிய மற்றும் கட்டுநாயக்கவை இணைக்கும் அதிவேக நெடுஞ்சாலையும் நிர்மாணிக்கப்படவுள்ளது. இந்த அபிவிருத்தி பணிகளுக்கான செலவு 130 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-7)

## நாடளாவிய ரீதியில் மீன் விலை அதிகரிப்பு

நாடு பூராகவும் மீன்களின் விலைகள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

சந்தைக்கு கிடைக்கும் மீன்களின் எண்ணிக்கை 50 வீதத்தால் குறைவடைந்துள்ளதாக பேலியகொட மத்திய மீன் சந்தைக் கட்டடத் தொகுதியின் முகாமையாளர் பந்துல சியம்பலாப்பிட்டிய தெரிவித்துள்ளார்.

சீரற்ற வானிலை காரணமாக மீனவர்கள் கடலுக்கு செல்லாமையே மீன்களின் விலை அதிகரிப்பதற்கு பிரதான காரணமாய் அமைந்துள்ளது. எவ்வாறாயினும் இறால்களின் விலை பெருமளவு குறைவடைந்துள்ளதாகவும் முகாமையாளர் சுட்டிக்காட்டினார். (இ-7)



# சிறுவர் அரங்கம்

1326

## தவம் செய்ய போறேன்...

முனிவர் ஒருவர் அமைதியுடன் பாறையின் மீது அமர்ந்து தவம் செய்து கொண்டிருந்தார். அந் நேரத்தில் நாய் ஒன்று அவர் அருகே வந்து நின்றது. முனிவரோ மெது வாக தன் கண்களைத் திறந்து அந்த நாயைப் பார்த்தார்.

முனிவரை வணங்கியது நாய்.

""ஐயா! நான் தங்களைப் போன்று தவம் செய்து கடவுளைக் காண வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதற்கு தாங்கள் எனக்கு அறிவுரை கூற வேண்டும்,"" என்றது.

""நாயே! இந்த உலகில் மனிதர்கள் தான் தவம் செய்ய வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. உன் போன்ற உயிரினங்கள் கூட தவம் செய்யலாம். ஆனால், தவத்தின் போது மனக்கட்டுப்பாடு அவசியம். அந்த மனக் கட்டுப்பாடு இல்லை என்றால் தவம் செய்திட முடியாது."" என்றார்.

""ஐயா! உங்களுக்கு மிகவும் நன்றி! மிக எளிய முறையில் எனக்கு நீங்கள் அறிவுரைகளை வழங்குகிறீர்கள். இதனை நான் பின்பற்றி ஓரிடத்தில் அமர்ந்து தவம் செய்யப் போகிறேன். எனக்கு விடை கொடுங்கள்,"" என்றது நாய்.

முனிவரும் அந்த நாய்க்கு விடைகொடுத்து அனுப்பினார்.

நாயோ ஓர் அடர்ந்த மரத்தடிக்கு வந்தது. மரத்தடி மிகவும் குளிர்ச்சியாகவும், நிழல் படர்ந்தும் காணப்படவே, இது நாம் தவம் செய்வதற்கு ஏற்ற இடம் என முடிவு செய்து, அந்த மரத்தடியில் அமர்ந்து கொண்டது.

மெல்ல தனது கண்களை மூடி அமைதியுடன் அமர்ந்திருந்தது நாய்.

அந்நேரத்தில் அந்தக் குளிர்ச்சியான சூழ்நிலை நாய்க்கு தூக்கத்தை வரவழைத்தது.

"ஆஹா! மரத்தின் குளிர்ச்சியில் நனறாகத் தூக்கம் வருகிறது. நாம் சிறிது நேரம் தூங்கி விட்டு, பிறகு தவத்தினை செய்திடலாமே" என மனதுள் எண்ணியது நாய்.

அதன்படியே மெல்ல தன் கண்களை மூடி தூங்கத் தொடங்கியது. சிறிது நேரம் தூங்கியவுடன் எழுந்து கொள்ளலாம் என்று நினைத்த நாயானது அன்றைய தினம் முழுக்க



தூங்கியதால், அத னால் அன்று தவம் செய்திட முடியவில்லை.

தன் நிலையை நினைத்து மிகவும் மனம் வருந்தியது. நாம் தவம் செய்திட வேண்டும் என்று நினைத்தோம். ஆனால், நம் மனதினைக் கட்டுப்படுத்திட முடியாமல் தூங்கிவிட்டோம்! இனிமேலாவது நாம் நம் மனதினைக் கட்டுப்படுத்தி தவம் செய்ய வேண்டும்!" என்று முடிவு செய்தது நாய்.

மறுநாள்-

அந்த நாயானது மரத்தடியில் அமர்ந்து கண்களை மூடி தவம் செய்திட முயற்சித்தது.

அந்நேரத்தில் அந்த நாயின் எதிரே இன்னொரு நாயானது எலும்புத் துண்டை கவ்வியபடி வந்தது. அந்த எலும்புத் துண்டின் வாசனையானது தவம் செய்து கொண்டிருந்த நாயின் மூக்கை துளைத்தது.

உடனே அது மெல்ல தன் கண்களைத் திறந்து பார்த்தது. அந்த நாயின் வாயில் இருக்கிற எலும்புத் துண்டினைப் பார்த்ததும் அதனைக் கடித்து சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது.

தவமிருந்த நாய் தான் அமர்ந்திருந்த மரத்தை விட்டு எழுந்து, வேகமாக எலும்புத் துண்டினை வாயில் கவ்விய நாயை நோக்கி ஓடி வந்தது.

அந்த நாயோ எலும்புத் துண்டினைப் இறுக்கமாக கவ்வியபடி ஓட்டமெடுத்தது.

தவம் இருக்க முயற்சித்த நாயோ ஆசையில் விடாமல் அந்த நாயை துரத்தத் தொடங்கியது.

எலும்புத்துண்டை வாயில் கவ்விக் கொண்ட நாயானது ஓர் கிராமத்தினுள் நுழைந்தது.

தவம் இருக்க முயற்சித்த அந்த நாயும் கிராமத்தினுள் நுழைந்தது. அந்நேரத்தில் ஒரு தெருவின் மூலையில் விருந்து வீட்டின் எச்சில் இலைகள் கொட்டப்பட்டிருந்தன. அந்த எச்சில் இலையில் மீதமிருந்த உணவு பதார்த்தங்களைப் பார்த்ததும் தவமிருக்க முயற்சித்த நாய்க்கு அவைகளை சாப்பிட வேண்டும் போல் ஆவல் ஏற்பட்டது.

உடனே அது மெல்ல எச்சில் இலை குவியலின் அருகே சென்றது.

அந்நேரத்தில் அக்கிராமத்தில் வசிக்கும் ஏராளமான தெரு நாய்கள் பெரும் கூட்டமாக அங்கே ஓடோடி வந்தன.

எல்லா நாய்களும் ஒன்று சேர்ந்து கிராமத்திற்குள் புதிதாக நுழைந்திருக்கும் நாயின் மீது பாய்ந்தன.

இதனை எதிர்பாராத அந்த நாயானது எச்சில் இலைகளில் உருண்டு புரண்டு எழுந்தது.

நாயின் உடலெல்லாம் எச்சில் உணவுகள் ஒட்டிக் கொண்டன.

மற்ற நாய்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து அதனைக் கடிக்கச் செல்லவே, தவம் இருக்க முயற்சித்த நாயானது உயிர் பிழைத்தால் போதுமென்று ஓட்டமெடுத்தது.

அந்தக் கிராம எல்லையினை விட்டு மூச்சிரைத்தபடி மீண்டும் அந்த மரத்தடியில் வந்து அமர்ந்தது.

(தொடரும்)

01.2016 06

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

1066 - இங்கிலாந்தின் மன்னனாக ஹாரல்ட் கோட் வின்சன் முடிசூடிக் கொண்டான்.

1690 - முதலாம் லெப்பல்ட் மன்னனின் மகன் ஜோசப் ரோமின் மன்னன் ஆனான்.

1838 - சாமுவேல் மோர்ஸ் மின்னியல் தொலைத் தந்தியை முதன் முறையாக வெற்றிகரமாக சோதித்தார்.

1887 - எதியோப்பியாவின் ஹரார் நகர மன்னன் இரண்டாம் அப்-தல்லா எதியோப்பியாவின் இரண்டாம் மெனெலிக் மீது போர் தொடுத் தான்.

1899 - இந்தியாவின் வைசிராயாக கேர்சோன் பிரபு நியமிக்கப்பட்டார்.

1900 - போவர்கள் தென்னாபிரிக்காவின் லேடிஸ்மித் நகரைத் தாக்கினர். 1,000 பொதுமக்கள் கொல்லப்பட்டனர்.

1907 - மரியா மாண்ட்டிசோரி தனது முதலாவது பாடசாலையை தொழிலாளர்களின் குழந்தை களுக்காக ரோமில் ஆரம்பித்தார்.

1912 - நியூ மெக்சிக்கோ 47வது மாநிலமாக ஐக்கிய அமெரிக்காவுடன் இணைந்தது.

1928 - தேம்ஸ் ஆறு லண்டனில் பெருக்கெடுத்ததில் 14 பேர் கொல்லப்பட்டனர்.

1929 - அன்னை தெரேசா இந்தியாவின் வறிய மற்றும் நோயுற்றவர்களுக்கு சேவை செய்வதற்காக கல்கத்தாவைச் சென்றடைந்தார்.

1936 - கலாஷேத்திரா சென்னை அடையாறில் ஆரம்பிக்கப்பட்டது.

1940 - போலாந்தின் பொஸ்னான் நகரில் நாசி ஜேர்மனியினரால் பலர் கொல்லப்பட்டனர்.

1950 - ஐக்கிய இராச்சியம் மக்கள் சீன குடியரசை அங்கீகரித்தது.

1959 - பிடெல் காஸ்ட்ரோ கவானாவை அடைந்தார்.

2007 - கொழும்பிலிருந்து 36கி.மீ. தொலைவில் நிட்டம்புவ என்ற இடத்தில் இடம்பெற்ற பேருந்துக் குண்டுவடிப்பில் 6 பொதுமக்கள் கொல்லப்பட்டும் 50 பேர் வரை காயமும் அடைந்தனர்.

2007 - இந்தியாவில் அஸ்ஸாம் மாநிலத்தில் பிற மாநிலத்தவரைக் குறிவைத்து உல்ஃபா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 55 பேர் கொல்லப்பட்டனர்.

2007 - காலி மாவட்டம் மீட்டியகொட சீனிகம பகுதியில் இடம்பெற்ற பேருந்துக் குண்டுவெடிப்பில் 15 பொதுமக்கள் வரையில் கொல்லப்பட்டும் 40 பேர் வரை படுகாயமும் அடைந்தனர்.

### பிறப்புகள்

1883 - கலீல் ஜிப்ரான், எழுத்தாளர் (இ. 1931)

1899 - சேர் சிற்றம்பலம் கார்டினர், இலங்கைத் தொழிலதிபர் (இ. 1960)

1910 - ஜி. என். பாலசுப்பிரமணியம், கருநாடக இசைக் கலைஞர் (இ. 1965)

1924 - கிம் டாய் ஜுங், தென்கொரியக் குடியரசுத் தலைவர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 2009)

1944 - ரோல்ஃப் சிங்கேர்னாகல், நோபல் பரிசு பெற்றவர்

1959 - கபில் தேவ், இந்தியத் துடுப்பாட்டக்காரர்.

1967 - ஏ.ஆர்.ரஹ்மான் இந்திய திரைப்பட இசை யமைப்பாளர்

1982 - கில்பர்ட் அரீனஸ், அமெரிக்கக் கூடைப்பந்து வீரர

### இறப்புகள

1852 - லூயி பிரெயில், பார்வையற்றவர்களுக்கான எழுத்தினை உருவாக்கியவர் (பி. 1809)

1884 - கிரிகோர் ஜோஹன் மெண்டல் ஆஸ்திரியப் பாதிரி, மரபியல் அறிவியலின் தந்தை (பி. 1822)

1918 - கேன்ட்டர், ஜெர்மன் கணிதவியலாளர் (1845

1919 - தியொடோர் ரோசவெல்ட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்க அதிபர் (பி. 1858)

1990 - பாவெல் செரென்கோவ், நோபல் பரிசு பெற்ற இரசியர் (பி. 1904)

1997 - பிரமீள், ஈழத் தமிழ் எழுத்தாளர்,

2010 - திருவேங்கடம் வேலுப்பிள்ளை - விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் தந்தை

நீ வாழ்க்கையை காதலிக்கின்றாயா? அப்படியானால் பொழுதை வீணாக்காதே. ஏனென்றால் வாழ்க்கையின் மூலப்பொருளே நேரம்தான்.

வலம்புரி

T.P : 021 567 1530

website : www.valampurii.lk

# உயர்தரப் பரீட்சைக்கு பின்பான பயணம்...!

உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. வடபுலத்தின் பெறுபேறுகள் திருப்தியாக அமைந்துள்ளன என்பது பொதுக்கருத்து. உரிய பகுப்பாய்வுகள் செய்யும் போதே பெறுபேற்றின் தன்மையை மதிப்பிட முடியும். எனினும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கின்ற மாணவர்கள் தவிர்ந்த ஏனைய மாணவர்களின் எதிர்காலம் குறித்துக் கவனம் செலுத்துவது மிகமிக அவசியமாகும்.

பொதுவில் இலங்கையின் கல்வி முறைமையானது அரச உத்தியோகத்தை எதிர்பார்த்தது என்ற குற்றச்சாட்டுக்கள் தாராளமாக உள்ளன.

சமகாலக் கல்வி முறை; சுயதொழில் முயற்சிகள், கம்பனிக் கட்டமைப்புகள், உற்பத்தி தொழில் முயற்சிகள் உள்ளிட்ட துறைகளுக்கு ஆளணியைத் தரவில்லை என்று குற்றம் சாட்டப்படுகிறது.

இந்நிலையில் க.பொ.த உயர்தரத்தில் தோற்றி பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத, ஆனால் பரீட்சையில் சித்தியடைந்த – சித்தியடையாத ஏகப்பட்ட மாணவர்களுக்கு உரிய வழிகாட்டல்கள் வழங்கப்படாத பட்சத்தில், அவர்களின் எதிர்காலம் கேள்விக்குரியதாக இருக்கும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மை.

பொதுவில் க.பொ.த உயர்தரத்தில் சித்தி; பல்கலைக்கழக அனுமதி; பட்டத்தை நிறைவு செய்தல்; வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தில் அங்கத்துவம் பெறுதல்; போராட்டங்களை நடத்தி அரச உத்தியோகங்கள் பெறுதல் என்ற செயல் ஒழுங்கில் எங்கள் இளைஞர்களின் ஆற்றல்கள் – ஆளுமைகள் – செயற்திறன்கள் பாழாகிப் போகின்றன.

அரச சேவை என்பதை கடந்து புதிய தொழில் துறைகளில் துணிவோடு இறங்கி சாதனை படைக்க நினைக்கின்ற தற்துணிவையும் ஆற்றலையும் உருவாக்குகின்ற கட்டமைப்புகள் எங்கள் மண்ணில் தேவைப்படுகின்றன.

எங்கள் வடபுலத்தை எடுத்து நோக்குகின்ற போது எத்தனையோ தொழில்துறைகளில் வேலைவாய்ப்புகள் இருந்த போதிலும் தொழில்துறைசார் அறிவுடையவர்கள் எங்களிடம் இல்லை என்ற குற்றச்சாட்டை சாதாரணமாக எவரும் கருதி விடலாகாது.

ஏ9 பாதைதிறக்கப்பட்டதைத் தொடர்ந்து எங்கள் மண்ணில் ஏற்பட்ட வேலைவாய்ப்புக்களுக்காக தென்பகுதியில் இருந்து மனித வளத்தை வரவழைக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. இத்தகைய நிலைமைகள் தொடர்பில் யார் கவலை கொண்டாலும் அது அர்த்தமற்றது.

ஏனெனில் எங்களிடம் இருக்கக்கூடிய உழைக்கும் வர்க்கத்திற்கு நாங்கள் உரிய தொழில்சார் அறிவை வழங்கத் தவறிவிட்டோம்.

எனவே இத்தகைய தவறுகளைத் தொடர்ந்தும் விடாமல் எங்கள் மாணவர்கள், இளைஞர்களின் வாண்மையை விருத்தி செய்வதற்கான கட்டமைப்புகளை உருவாக்குவது அவசியம்.

இதுதவிர, தொழில்சார் பயிற்சிகளை வழங்கக்கூடிய அமைப்புகள் வடபுலத்தில் இயங்குகின்ற போதிலும் அதன்மூலம் பயன்பெறுவதில் இளைஞர்களிடம் ஆர்வமும் அக்கறையும் இல்லாத சூழ்நிலை காணப்படுவதையும் அவதானிக்க முடிகின்றது.

எனவே க.பொ.த உயர்தர பரீட்சைக்கு பின்பான– எங்கள் பிள்ளைகளுக்கான வழிகாட்டல்கள், தொடர் கல்விக்கான சந்தர்ப்பங்கள் குறித்து கவனம் செலுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

தொழிற்படை என்ற வகுதிக்குள் அடங்கக்கூடிய மனிதவளம் கவனிப்பின்றி விடப்படுமாக இருந்தால், அது எங்கள் பண்பாட்டு கலாசாரங்களில் கடும் எதிர்த்தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது உணரப்பட வேண்டும்.

# சுன்னாகத்துக்கு குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டமைக்கு கடும் கண்டனம்

கழிவு ஒயில் கலப்பினால் பெரிதும் பாதிக்கப்பட்ட சுன்னாகம் பிரதேசத்திற்கான குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டமையைச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வன்மையாகக் கண்டிக்கின்றது என அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது.

சுன்னாகம் மின் உற்பத்தி நிலையத்தில் இருந்து நிலத்துக்குள் செலுத்தப்பட்டதாகக் கருதப்படும் கழிவு ஒயில் நிலத்தடி நீரில் கலந்ததால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு இதுவரை மேற்கொள்ளப்பட்டு வந்த குடிநீர் விநியோகமானது சுன்னாகப் பிரதேசத்தில் நிறுத்தப்பட்டுள்ளமையால் பொதுமக்கள் மிகவும் அசௌகரியப்படுவதுடன், குடிநீருக்காகப் போத்தல்களுடன் அலைய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கும் உள்ளாகியுள்ளனர்.

இதுவரை காலமும், பாதிககப்பட்ட நான்கு பிரதேச சபைகளுக்கு உட்பட்ட பிரதேசங்களுக்கான குடிநீர் விநியோகத்தை அக்குறிப்பிட்ட பிரதேச சபைகளும், அரச சார்பற்ற நிறுவனங்களும் மேற்கொண்டுவந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனால், அரச சார்பற்ற நிறுவனங்களின் குடிநீர் விநியோகச் செயற்பாடானது கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே நிறுததப்பட்டு விட்டதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். இதனால் பல இன்னல்களையும் எதிர்கொண்ட பாதிக்கப்பட்ட மக்கள் கடந்த சில நாட்களாக பிரதேச சபைகளால் வழங்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகமும் பல இடங்களில் நிறுத்தப்பட்டுள்ளமையால் பாரிய அச்சுறுத்தலை எதிர்கொள்கின்றனர்.

கடந்த டிசெம்பர் மாதம் 29 ஆம் திகதியளவில் வடமாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதனால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்குத் தேவையான குடிநீரை விநியோகிக்கும்படி பிரதேச சபைகளுககு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்திருந்தபோதிலும் இந்நீர் விநியோகம் நிறுத்தப்பட்டமையானது மக்களுக்குப் பேரதிர்ச்சியைக் கொடுக்கின்றது.

இது தொடர்பாக உரிய அதிகாரிகள் பொது மக்களுக்குப் பல்வேறு பொய்யான தகவல்களையே வழங்கிவருவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் மிகவும் மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றனர். எனவே, உரிய அரசியல்வாதிகளினதும், அதிகாரிகளினதும் பொறுப்பற்ற செயற்பாட்டைச் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு வனமையாகக் கண்டிப்பதுடன், சுத்தமான குடிநீர் விநியோகதைத் தொடர்ந்து மேற்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றது என அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

## அமெ.ஜனாதிபதியானால் ஐ.எஸ்.தீவிரவாதிகளின் தலையை வெட்டுவேன்

'அமெரிக்க ஜனாதிபதியானால் ஐ.எஸ். தீவிரவாதிகளின் தலையை வெட்டு வேன்' என அதிபா பதவிக்கு போட்டியிடும் வேட்பாளர் டிரம்ப் விளம்பரம் செய்துள்ளார். அமெரிக்காவில் இந்த ஆண்டு இறுதியில் ஜனாதிபதி தேர்தல் நடை பெறுகிறது. அதில் போட்டியிட ஆளும் ஜனநாயக கட்சி மற்றும் எதிர்க்கட்சியான குடியரசு கட்சி சார்பில் பலர் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

பொது மக்களிடம் கிடைக்கும் ஆதரவை பொறுத்தே வேட்பாளர்கள் தேர்வு நடைபெறும். எனவே, அமெரிக்காவில்பொது மக்களிடம் ஆத ரவு திரட்டுவதில் வேட்பாளர் தேர்வில இடம் பெற்றுள்ளவர்கள் தீவிரமாக உள்ளனர்.

வேட்பாளர் பதவிக்கு குடியரசு கட்சி சார்பில் கோடீஸ்வரரும், தொழில் அதிபருமான டொனால்ட் டிரம்ப் போட்டியிடுகறார். அமெரிக்காவுக்குள் முஸ்லிம்கள் நுழைய தடைவிதிக்க வேண்டும் என பேசி பெரும் சர்ச்சையையும் பரபரப்பையும் ஏற்படுத்தி யவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மாணவர்கள்மீது தாக்குதல் நடத்திய பொலிஸ் அதிகாரி மீண்டும் சேவையில்

எச்.என்.டி.ஏ பட்டதாரி மாணவர்களின் மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டின் பேரில் பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த பொலிஸ் அதிகாரி மீண்டும் சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளார்.

கடந்த ஒக்டோபர் மாதம் தமக்கான வேலை வாய்ப்பை கோரி அரசாங்கத்திற்கு எதிராக இந்த மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த வேளை பொலிஸாரின் கடுமையான தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தனர்.

இந்த தாக்குதல் சம்பவமானது, ஊடகங்கள் மத்தியில் பெரும் பரபரப்பாக பேசப்பட்டது.

மேலும், இந்த பொலிஸ் அதிகாரி மீதான குற்றப் பத்திரிகைக்கமைய ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதன் பின்னர் இந்த பொலிஸ் அதிகாரி மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், தாக்குதல் தொடர்பாக கிருலப்பனை பொலிஸ் நிலையத்தின் அதிகாரியான உபுல் இந்திரஜித் கினிகே பதவி நீக்கம் செய்யப்பட்டிருந்த நிலையில், அவர் மீண்டும் வெள்ளவத்தை பொலிஸ் நிலையத்திற்கு சேவை நிமித்தம் அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# எல்லை நிர்ணயம் தொடர்பான முறைப்பாடுகளை ஆராயும் நடவடிக்கை இம்மாத இறுதியில் நிறைவு

தேர்தல் தொகுதிகளின் எல்லை நிர்ணயம் தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகளை ஆராயும் நடவடிக்கை எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் நியமிக்கப்பட்ட ஐவரடங்கிய குழு மூலமாக குறித்த முறைப்பாடுகள் மற்றும் மேன்முறையீடுகள் தொடர்ச்சியாக ஆராயப்பட்டு வருவதாக அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி தெரிவித்துள்ளார்.

குறித்த ஐவரடங்கிய குழுவிற்கு மேலதிகமாக பல நிறுவனங்களின் கூட்டாக தொழில்நுட்ப குழு ஒன்றும் மாவட்ட மட்டத்தில் 25 குழுக்களும் குறித்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளன.

எவ்வாறாயினும் குறித்த நடவடிக்கைகள் குறைபாடுகள் இன்றி நடைபெற வேணடும் எனவும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் எதிர்வரும் வாரத்திற்குள் அமைச்சரின் தலைமையில் விசேட கலந்துரையாடல் இடம் பெறவுள்ளதாகவும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற சபைகளின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

முறைப்பாடுகளை ஆராய்வதற்கான காலத்தினை அதிகரிப்பது தொடர்பில் இதன் போது ஆராயப்படவுள்ளது.

தேர்தல் தொகுதிகளில் எல்லை நிர்ணயம் தொடர்பில் மக்களின் கருத்துகளை கூறுவதற்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தின் போது 500 இற்கு மேற்பட்ட மகஜர்கள் கையளிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-7)

# குற்றங்களைக் கட்டுப்படுத்த வடமராட்சியில் நடவடிக்கை

## விசேட அதிரடிப் படையினர் வரவழைப்பு

(கரணவாய்)

வடமராட்சிப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு விசேட பொலிஸ் அதிரடிப்படையினர் கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக வடமராட்சிப் பகுதிகளில்பாரிய கொள்ளைச் சம்பவங்கள், சட்டவிரோத மண்ணகழ்வு என்பன அதிகரித்து காணப்படுகின்றன.

இதனால் அங்குள்ள மக்கள் அச்சத்துடனே பகல் இரவுப் பொழுதுகளை கழித்து வந்தனர்.

இதேவேளை வடமராட்சிப் பகுதியில் பகல்,இரவு வேளைகளில் பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்த வேண்டுமென அங்குள்ள மக்கள் பொலிஸ் நிலையங்களுக்கு வேண்டுகோள்களை விடுத்திருந்தனர்.

வடமராட்சிப்பகுதிகளில் உள்ள பொலிஸ் நிலையங்களில் போதியளவு பொலிஸார் இல்லாத காரணத்தினால் சட்டவிரோதநடவடிக்கைகள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் என்பன அண்மைக்காலத்தில் அதிகரித்துக் காணப்பட்டது.

இதேவேளை நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் பற்றாக்குறை எனவும் இதனை நிவர்த்தி செய்ய வேண்டுமென மக்களால் விடுக்கப்பட்ட கோரிக்கை அமைய செய்தி ஒன்று கடந்த 2ஆம் திகதி வலம்புரிப் பத்திரிகையில் வெளி வந்திருந்தது.

இவ்வாறான நிலையில் விசேட அதிரடிப் படையினர் தற்போது களமிறக்கப்பட்டுள்ளனர் எனவும் இவ்விசேட அதிரடிப் படையினர் பகல், இரவு என இரு வேளையிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனவும் இவ்வாறான ரோந்து நடவடிக்கை கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது. (இ-5-60)

# பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணரின் சிந்தனைச் செல்வம்

## கஷ்டப்படுபவர்களுக்கு உதவுங்கள்



✦ மனிதர்கள் பெண்ணாசையும், பணத்தாசையும் கொண்டவர்களாக இருக்கிறார்கள். இந்த எண்ணமே தீராத நோயாக அவர்களைப் பீடித்திருக்கிறது. இதிலிருந்து விடுபட நல்லவர்களோடு பழகுவது தான் சரியான தீர்வு.

✦ சிலருடைய உள்ளம் கல்சுவர் போல உறுதியாக இருக்கும். அதில் ஆணி அடித்தால் அது வளைந்து போகும். அதுபோல, எவ்வளவு முயன்றாலும் அவர்களுக்குள் ஆன்மீக விடயம் எதுவும் உள்ளே பேர்காது.

✦ மக்களுள் பெரும்பாலோர் புகழுக்காகவோ, புண்ணியத்தைத் தேடுதல் பொருட்டோ பரோபகாரம் செய்கின்றனர். அத்தகைய சேவைகள் யாவும் சுய நலத்தை அடிப்படையாகக் கொண்டவை.

✦ பணம் அளவுக்கு அதிகமாக வைத்திருப்பவர்கள் தங்களுடைய செல்வத்தை சுயநலத்தால் தனக்காகவே வைத்துக் கொண்டிருக்கக் கூடாது. கஷ்டப்படுகிற ஜனங்களுக்கு உதவி புரிய வேண்டும்.

✦ மீன்கொத்திப்பறவை போன்று உலகத்தில் வாழ்ந்திருங்கள். அது நீருக்குள் மூழ்குகின்ற போது, சிறகுகளில் கொஞ்சம் நீர் ஒட்டிக் கொண்டிருக்கும் . வெளியில் வந்து சிறகுகளைக் குலுக்கியதும் அந்த நீரும் அகன்றுவிடும். அதுபோல உலகியலில் ஈடுபட்டாலும் பற்றற்று இருக்கக் கற்றுக்கொள்ளுங்கள்.

# இலங்கை அணியை வீழ்த்தி தொடரை வென்றது நியூசிலாந்து

இலங்கை அணிக்கெதிரான 5 ஆவது ஒருநாள் போட்டியில் நியூசிலாந்து அணி 36 ஓட்டங்களால் வெற்றிபெற்று 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3-1 என கைப்பற்றியது.

இரு அணிகளுக்குமிடையிலான டெஸ்ட் தொடரைக் கைப்பற்றிய முனைப்புடன் ஒருநாள் தொடரில் களமிறங்கிய நியூசிலாந்து அணி அதனையும் 3-1 என கைப்பற்றியுள்ளது.

நியூசிலாந்துக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி அவ்வணியுடன் 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடியது.

இத் தொடரின் முதலிரண்டு போட்டிகளிலும் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றதுடன் 3 ஆவது போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்றது.

இதேவேளை, இரு அணிகளுக்குமிடையிலான 4 ஆவது போட்டி மழையால் கைவிடப்பட்ட நிலையில், முக்கியமானதும் இறுதியுமான 5 ஆவது போட்டி நேற்று இடம்பெற்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 50 ஓவர்கள் நிறைவில் 5விக்கெட்டுகளை இழந்து 294 ஓட்டங்களைப் பெற்றது.

நியூசிலாந்து அணி சார்பாக துடுப்பாட்டத்தில் குப்தில் 102 ஓட்டங்களையும் வில்லியம்ஸன் மற்றும் டெய்லர் ஆகியோர் தலா 61 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக குலசேகர 3 விக்கெட்டுகளையும் பிரதீப் மற்றும் டில்ஷான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் 295 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரகள் ஒத் துழைப்பு வழங்க மறுக்க இலங்கை அணி 33 ஓட்டங்களுக்கு 3 விக் கெட்டுகளை இழந்து தடுமாறியது.


இறுதியில் இலங்கை அணி 47.1 ஓவர்களில் அனைத்து விக் கெட்டுகளையும் இழந்து 258 ஓட்டங்களைப் பெற்று 36 ஓட்டங்களால் தோல்வியடைந்து தொடரை நியூசிலாந்திடம் 3-1 என பறி கொடுத்தது.

இலங்கை அணி சார்பாக துடுப்பாட்டத்தில் மத்தியூஸ் 95 ஓட்டங்களையும் சந்திமால் 50 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.


பந்து வீச்சில் நியூசிலாந்து அணி சார்பாக சிறப்பாக பந்து வீசிய ஹென்றி 5 விக்கெட்டுகளையும் போல்ட் 3 விக்கெட்டுகளை யும் கைப்பற்றினர்.

இதையடுத்து 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை நியூசிலாந்து அணி 3-1 என கைப்பற்றியது. இப் போட்டியின் ஆட்ட நாயகனாக ஹென்றி தெரிவு செய்யப்பட்டுள்ளார். (க)





# பெண் நிருபரிடம் தவறாக பேசிய கெயிலுக்கு அபராதம்




மேற்கிந்திய தீவுகள் துடுப்பாட்ட அணியின் அதிரடி வீரர் கிறிஸ் கெயில் பேட்டியின் போது பெண் செய்தியாளரை மது அருந்த அழைத்த சம்பவம் கடும் விமர்சனத்துக்கு ஆளாகியுள்ளது.

அவுஸ்திரேலியாவில் தற்போது பிக் பாஸ் 20 ஓவர் போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

நேற்றுமுன்தினம் மெல்பேர்ன் மற்றும் டாஸ்மேனியா அணிகள் மோதிய ஆட்டம் நடைபெற்றது.

போட்டியின் போது மெல்பேர்ன அணிக்காக விளையாடி வரும் கிறிஸ்கெயிலிடம் சனல் 10 தொலைக்காட்சியின் பெண் செய்தியாளர் பேட்டி எடுத்துள்ளார்.

அப்போது அவருக்கு பதிலளித்த கெயில், உன் கண்களை பார்ப்பதற்காகவே இந்த பேட்டியில் கலந்து கொண்டேன் என பெண் செய்தியாளரிடம் கூறினார்.

மேலும், நாங்கள் இப்போட்டியில் எப்படியும் வென்று விடுவோம். அதற்கு பிறகு நாம் இருவரும் சேர்ந்து மது அருந்தலாம்.

நீ வெட்கப்பட வேண்டாம் என்று கூறியுள்ளார். இதனால் தர்மசங்கட த்துக்கு உள்ளான பெண் நிருபர் எப்படியோ பேட்டியை முடித்துகொண்டு கிளம்பினார்

இந்நிலையில் கெயிலின இச் செயலுக்கு பலத்த எதிர்ப்புகள் கிளம்பியுள்ளன. பல்வேறு வீரர்களும் ரசிகர்களும் கெயிலின் செயலுக்கு சமூக வலைத்தளங்களில் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கெயிலின் செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து பிக்-பாஸ் போட்டியின் முதன்மை செயல் அலுவலர் ஆண்டனி எவரார்ட் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது, கெயிலன்நடவடிக்கை ஏற்றுக்கொள்ள முடியாதது. இதுகுறித்து அவர் விளையாடும் அணி நிர்வாகத் திடம் விளக்கம் கேட்கப்படும்.

மேலும், பிக்-பாஸ் கிரிக்கெட் போட்டியை குழந்தைகள், பெண்கள் மற்றும் குடும்பமாக கண்டு களிக்கின்றனர். எனவே, இதுபோன்ற செயல் களுக்கு இங்கு இடமில்லை என்று கூறியுள்ளார். (க)

# சிட்னி டெஸ்ட் 3ஆவது நாள் ஆட்டம் வருணபகவான் வருகையால் ரத்து

அவுஸ்திரேலியா -மேற்கிந்திய தீவுகள் அணிகள் மோதும் 3 ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி சிட்னியில் ஞாயிற்றுக்கிழமை தொடங்கியது. முதல் நாள் ஆட்டத்தில் மேற்கிந்திய தீவுகள் 6 விக்கெட் இழப்புக்கு 207 ஓட்டங்கள் எடுத்து இருந்தது.

2 ஆவது நாள் ஆட்டத்தின் போது அந்த அணி 7 விக்கெட் இழப்புக்கு 248 ஓட்டங்கள் எடுத்து இருந்தபோது மழையால் பாதிக்கப்பட்டது. அத்துடன் 2 ஆவது நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது. நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் தொடங்குவதாக இருந்தது. ஆனால் தொடர்ந்து பெய்த கனமழையினால் நேற்று ஒரு பந்துகூட வீசப்படாமல் நேற்றைய 3 ஆவது நாள் ஆட்டம் ரத்து செய்யப்பட்டது. ஏற்கனவே நடந்து முடிந்த 2 டெஸ்டிலும் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரை 2-0 என கைப்பற்றி முன்னிலையில் இருப்பது குறிப்பிடத்தக்கது. (க)

# சமரபாகு நியூட்டன் விளையாட்டுக்கழகம் நடத்தும் மின்னொளியிலான உதைபந்து யங்கம்பன்ஸ் அணி வெற்றி





சமரபாகு நியூட்டன் வி.கழகம் நடத்தும் மின்னொளியிலான 7 நபர் கொண்ட சுப்பர் 8 அணிகள் மோதும் மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் நேற்று முன்தினம் நடந்த போட்டியில் பொமேர்ஸ் அணியை எதிர்கொண்ட கம்பர்மலை யங்கம்பன்ஸ் அணி வெற்றி பெற்றது.

இதில் அணி சார்பாக பிரகாஷ் அற்புதமான 3 கோல் போட்டார். அடுத்து வந்து தர்சனும் 1 கோலினைப்போட்டார். ஆட்டத்தை தன்வசம் வைத்திருந்த யங்கம்பன்ஸ் அணி நேர முடிவில் 2:4 என்ற வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடியது. (க)

# ரவிராஜ் படுகொலை...

இந்தப் படுகொலைக்கான திட்டம் கொழும்பு கங்காராம வீதியில் உள்ள கடற்படைப் புலனாய்வு முகாமில் தான் தீட்டப்பட்டது.

மட்டக்களப்பில் விசேட நடவடிக்கைகளுக்கான உந்துருளிப் படைப்பிரிவில் இருந்த போது பழனிச்சாமி சுரேசுடன் எனக்குத் தொடர்பு இருந்தது. இந்தத் தொடர்பு 2006 ஆம் ஆண்டில் கொழும்பு சென்ற பின்னரும் நீடித்தது. பழனிச்சாமி சுரேஸ் மூலமாகவே பிரசாத் குமார, சரண், வஜிர, காமினி செனிவிரத்ன, பபியன் ரோய்ஸ்ரன் ஆகியோர் எனக்கு அறிமுகமாகினர்.

பழனிச்சாமி சுரேஸ் தான் கொழும்பு கங்காராம வீதியில் உள்ள கடற்படைப் புலனாய்வு முகாமுக்கு என்னை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்தி வைத்தவர். இதன்போது 2006ஆம் ஆண்டு நவம்பர் 8ஆம் திகதி ரவிராஜைக் கொலை செய்ய தாம் மேற்கொண்ட முயற்சி தோல்வியில் முடிந்து விட்டதாக அவர் என்னிடம் கூறினார்.

இதன்பின்னர் பழனிச்சாமி சுரேஸ் என்னைக் கேட்டுக் கொண்டதன்படி 2006ஆம் ஆண்டு நவம்பர் 10ஆம் திகதி சந்தேக நபர்களை ஏற்றிச் செல்வதற்கு உந்துருளியில் பொரளை சேமக்காலை சந்திக்கு சென்ற போது, பிரசாத், செனிவிரத்ன, வஜிர மற்றும் மூவர் இரண்டு முச்சக்கரவண்டிகளில் வந்து இறங்கினர். இன்னொரு முச்சக்கர வண்டியில் பழனிச்சாமி சுரேஸ், சரண் மற்றும் பபியன் ரோய்ஸ்ரன் ஆகியோர் வந்திறங்கினர். இதன்போது மார்த்தா வீதியில் தயாராக நிற்குமாறும், சுட்டுவிட்டு தப்பி வருபவரை அந்த இடத்தில் இருந்து ஏற்றிச் செல்லுமாறும் நான் கேட்கப்பட்டிருந்தேன்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜின் வாகனம் வரும்வரை செனிவிரத்ன ஒரு கறுப்பு பையுடன் காத்திருந்தார். அப்போது, ரவிராஜின் வாகனத்துக்கு எதிர்ப்பக்கத்தில் இருந்து சென்ற செனிவிரத்ன அவரையும், சாரதி லக்ஸ்மனையும் சுட்டு விட்டு தப்பினார். அவரை நான் கங்காராம வீதியில் உள்ள கடற்படைப் புலனாய்வு முகாமுக்கு ஏற்றிச் சென்றேன்.

விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவரை கொல்வதற்காகவே செல்வதாகவும், துப்பாக்கி ஏந்தியவரை உந்துருளியில் ஏற்றிச் செல்லுமாறு எனக்கு உத்தரவிடப்பட்டது. நாரஹேன்பிட்டியில் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்படும் வரை யாரைக் கொலவதற்காகச் செல்கிறோம் என்று எனக்குத் தெரியாது என்றும் அவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்தார்.

சாட்சியத்தின் பின்னர் இந்த வழக்கு விசாரணையை நீதிவான் எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இந்தப் படுகொலை தொடர்பாக கடற்படை புலனாய்வு அதிகாரிகள் நால்வரும், கருணா குழுவைச் சேர்ந்த இருவர் உள்ளிட்ட ஏழு பேருக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11).

# கூட்டமைப்பை...

நான் அவரை தொடர்பு கொண்டு அளவளாவிய போது மிக தெளிவாக அவர் எனக்கு எடுத்துரைத்தார்.

இதனை கூறுவதற்கும் பேசுவதற்கும் முற்றிலும் அருகதை உடையவன் நான். ஏனென்றால் முதன் முதலில் தமிழ் தேசிய கூட்டமைப்பு அர்த்தமுடையதாய் உருவாக்கப்பட வேண்டும் என்பதற்காக உழைத்தவன். பங்காளிகளாக கையொப்பமிட்ட நால்வரில் ஒருவன் என்பதை இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நன்கு அறிவர்.

அன்று சக கட்சி செயலாளர்களாக அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் பொது செயலாளராக அவர்களுடன் இணைந்து கையொப்பமிட்ட நால்வரில் இரண்டாமவர் நான்.

எனவே எந்த நோக்கோடு தமிழ் தேசிய கூட்டமைப்பு அர்த்தமுடையதாய் உருவாக்கப்பட்டதோ அதுதான் தமிழ் மக்களின் பலமுள்ள அரசியற் சக்தியாக அனைவரையும், பங்காளிகட்சிகள் அனைத்தையும் அரவணைத்து தமிழர் தம் அரசியற் சக்தியாக இலக்கை அடையும் வரையேனும் வீரியமுடன் செயறபடவேண்டியது காலத்தின் கட்டாய தேவையாகும்.

முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரனையோ தமிழரசுகட்சி தலைவரையோ அதன் தற்கால பிரமுகர்களையோ விமர்சித்தவருமல்ல. தனிப்பட்ட ரீதியில் அநாகரீகமாக வசையுரைத்தவருமல்ல. மாறாக ஓரிரு தமிழரசுகட்சி இளவல்கள் தான் அவரை விமர்சித்திருக்கின்றார்கள் என்பதுதான் உண்மை.

எது எப்படி இருந்தபோதும் தமிழ் மக்கள் பேரவை, ஒரு அரசியற் கட்சியாக அமையும் நோக்கமோ அல்லது தமிழ்தேசிய கூட்டமைப்பை பிளவுபடுத்தும் நோக்கமோ அற்றது.

அது ஒரு பரந்துபட்ட கருத்துக்களை ஆராயும் அனைவரும் கருத்துக்கூறகூடிய வல்லமையுள்ள களமாகவே உருவாக்கப்பட்டது. ஆனால் தமது சுயநலன்களுக்காக சிலர் அதனை ஊதி பெருப்பித்து தேவையற்ற பிளவிற்கு வழிகோலுதல் தமிழரையும் தமிழ் தலைமையையும் மலினப்படுத்துவதாகவே அமையும் .

தமிழ் தலைமைகள் ஒரே குரலில் ஒன்றுபட்டு பேசுங்கள் ஒன்று படுங்கள் என்று இலங்கை வந்த இந்திய வெளியுறவு செயலாளரை நாங்கள் அவரை இந்திய உயர்ஸ்தானிகர் இல்லத்தில் சந்தித்தபோது தெரிவித்தமையை இந்தவிடத்தில் நினைவுகூர விரும்புகின்றேன் .

இன்று கூட்டமைப்பில் அதன் பங்காளிக்கட்சிகள் கூட்டுப்பொறுப்புடன் பங்காற்ற அனுமதிக்கப்படுகின்றார்களா? ஒரு கட்சியை சேர்ந்த மூவர் தான் தமிழ் தேசிய கூட்டமைப்பா? அனைவரும் கருத்து பரிமாறக் கூடிய களம் தேவை எனும் போது இவ்வாறு கேள்விகள் எழுவது நியாயமே.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் அவர்களுக்கு தெரியும் கூட்டமைப்பு உருவான காலத்திலும் அன்று முதல் பல்வேறு சந்திப்புகளிலும் நான் அவரோடு நெருங்கி பழகியவன். அவருடைய சாணக்கியத்தை பாராட்டி வருபவன் என்பது அவருக்கே தெரியும்.

அந்தவகையில் அவர் மிக பொறுப்புடன் தன்னை அண்டியவர்களையும் அறிவுரை கூறி அனைவரையும் அரவணைத்து கூட்டமைப்பின் ஒருமைப்பாட்டை காத்திடுமாறு அன்புரிமையோடு கேட்டுக்கொள்கின்றேன் எனவும் கலாநிதி குமரகுருபரன் தெரிவித்துள்ளார். (செ-12)

# ஊழல் அற்ற நல்...

கிய கண்காட்சியை எதிர்வரும் காலங்களில் பாகிஸ்தானில் நடாத்துவது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழில் தொடர்பான ஒத்துழைப்பினை மேம்படுத்துவது தொடர்பாகவும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

பெண் யானையொன்றை தனது நாட்டுக்கு வழங்குமாறு பாகிஸ்தான் அரசு இலங்கையிடம் கோரிக்கை விடுத்திருந்ததுடன் எதிர்காலத்தில் இதுதொடர்பாக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான சம்மதத்தினை ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தின் போது தெரிவித்தார்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் ஆகிய நாடுகள் பிரித்தானியாவின் ஆட்சியிலிருந்து சுதந்திரம்பெற்ற நாடுகள் என்பதுடன் இம்மூன்று நாடுகளும் ஒன்றிணைந்து பொதுவானதொரு நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் அதனை நினைவு கூருவதற்கும் இச்சந்தர்ப்பத்தின் போது ஜனாதிபதி பாகிஸ்தான் பிரதமரிடம் யோசனை தெரிவித்தார்.

இம்முறை பாகிஸ்தானில் இடம்பெறும் சார்க் மாநாட்டின் வெற்றிக்கு தனது நல்வாழ்த்துக்களை தெரிவித்த ஜனாதிபதி இம்மாநாட்டில் தான் கலந்துகொள்ள எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (செ-12)

# மாவின் விலை...

கோதுமை மாவின் புதிய விலை 89 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தேசிய நிர்மாணவரி இரண்டு சதவீதத்தில் இருந்து நான்கு சதவீதமாக, வரவு செலவு திட்டத்தில் அதிகரிக்கப்பட்டமையே கோதுமை மா விலை அதிகரிப்புக்கான காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளும் அதிகரிக்க நேரிடும் என வெதுப்பக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்தலைவர்என்.கே ஜயவர்தன இதனை தெரிவித்துள்ளார்.

கோதுமை மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதன் காரணமாக, தமது உற்பத்தி செலவினங்கள் அதிகரித்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

பெரும்பாலும் பாண் றாத்தல் ஒன்றின் விலை 2 முதல் நான்கு ரூபாயால் அதிகரிக்க நேரிடும் என்று வெதுப்பக உரிமையாளர் சங்க தலைவர் என்.கே ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், தமது சங்கம் எதிர்வரும நாட்களில் கூடி, வெதுப்பக உற்பத்தி பொருட்களின் விலைகளை எந்தவகையில் அதிகரிப்பது என்பது குறித்து நிலையான தீர்வு ஒன்றை எட்டவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-12)

# முன்னாள் பெண்...

பிள்ளைகள் உள்ளனர். இதில் மூத்த பிள்ளைக்கு 17 வயதும், அடுத்த பிள்ளைக்கு 8 வயதும், கடைசி பிள்ளைக்கு 2 வயதும் ஆகின்றது. இப்பெண் 2009 ஆண்டிற்கு முன்னர் விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பெண் போராளியாக செயற்பட்டு வந்துள்ளார்.

இறுதி கட்ட யுத்தத்தின் போது ஒரு கண் பார்வையை முழுவதுமாக இழந்ததோடு மறு கண்ணின் பார்வையை இழக்கும் நிலையில் கடந்த ஆண்டு தொடக்கம் அவதியுடன் வாழ்ந்து வந்துள்ளார். குடும்பத்தின் வறுமை காரணமாக அவரால் பார்வைக்கான சிகிச்சையை மேற்கொள்ள முடியவில்லை.

யுத்தத்தின் பின்னர் இரண்டு வருடங்கள் தடுப்பில் இருந்து வந்த செல்வக்குமாரியை கணவனும் கைவிட்டு பிரிந்து சென்றுள்ளார். இந்நிலையில், செல்வக்குமாரிக்கென சொந்தமான வீடோ அல்லது காணியோ எதுவும் அற்ற கஷ்டமான சூழலில் தன்து தங்கை வீட்டில் பிள்ளைகளுடன் சிலகாலம் அடைக்கலம் புகுந்து வாழ்ந்து வந்த அவர்,

பின்னர் தங்கை வீட்டிலிருந்து வெளியேறி கொக்கிளாயில் உள்ள தனது தம்பி வீட்டிற்கு கடந்த டிசெம்பர் மாதம் பன்னிரண்டாம் திகதி பிள்ளைகள் மூவருடனும் சென்று தங்கியுள்ளார். அன்றைய தினம் இரவு அங்கு நுளம்பின் பெருக்கம் அதிகம் காணப்பட, நுளம்பிற்கு புகை போடுவதற்காக மரக்கட்டைகளுக்கு கண் பார்வை தெளிவற்ற நிலையில் மண்ணெண்ணெய் ஊற்றி எரிக்க முயன்றுள்ளார்.

இதன் போது மண்ணெண்ணெய் தனது சட்டையிலும் ஊற்றப்பட்டதை அறியாத செல்வக்குமாரி விறகுக்கு தீ மூட்டியுள்ளார். தீ அவரது சட்டையிலும் பரவ, தீக்காயங்களுக்குள்ளான செல்வக்குமாரி மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கடந்த இரண்டாம் திகதி மாற்றப்பட்டு அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அன்றைய தினம் பிற்பகல் 2.45 மணியளவில் சிகிச்சை பலனின்றி முன்னாள் பெண் போராளி உயிரிழந்துள்ளார். மரணம் தொடர்பில் விசாரணை மேற்கொண்டு சடலத்தை உறவினரிடம் ஒப்படைக்க யாழ். போதனா வைத்தியசாலை தரப்பினர் நடவடிக்கை மேற்கொண்ட போதிலும் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு பொலிசார் வருகை தராத காரணத்தால்,

பெண்ணின் சடலம் மூன்று நாட்களாக முல்லைத்தீவு பொலிசாரின் வருகைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் காக்க வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் நேற்றைய தினம் கேப்பாப்பிலவு பொலிஸார் யாழ்.போதனா வைத்திய சாலைக்கு வந்ததை தொடர்ந்து திடீர் மரண விசாரணை அதிகாரியால் விசாரணை மேற்கொள்ளப்பட்டு சடலத்தை உறவினர்களிடம் கையளிப்பதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

உறவினர் தரப்பில் உயிரிழந்த பெண்ணின் பதினேழு வயதுடைய மூத்த பெண் பிள்ளை மட்டுமே யாழ்.போதனா வைத்திய சாலைக்கு திடீர் மரண விசாரணைக்காக வந்திருந்தார். தான் முல்லைத்தீவிலிருந்து பஸ் காசுடன் மட்டுமே யாழ்ப்பாணம் வந்ததாகவும், அம்மாவை அடக்கம் செய்வதற்கு எம்மிடம் காசு இல்லை அரச செலவில் அடக்கம் செய்யுமாறும் அப்பெண் விசாரணை அதிகாரியிடம் அழுதழுது கேட்டுள்ளார்.

பெண்ணின் குடும்ப நிலையை அறிந்த யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரிகள் சிலர் தனது சொந்த செலவில் பெண்ணை அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து சடலத்தை முல்லைத்தீவுக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

அம்மா இறந்ததன் பின்னர் நேற்று சாப்பிடக்கூட எம்மிடம் ஒருவழியும் இல்லை என அந்த பிள்ளை திடீர் மரண விசாரணை அதிகாரியிடம் கூறிய வார்த்தை அங்கிருந்த பலரது மனத்தை நெகிழச்செய்தது. (செ-4)

# நல்லிணக்கத்தை...

கொழும்பில் நடக்கும் பொருளாதார மன்ற மாநாட்டில் பங்கேற்க பிரித்தானியா வின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயர் வந்துள்ளார்.

இவர் இலங்கையின் நல்லிணக்க முயற்சிகளில் ஏற்பாட்டாளராக பங்கேற்கவுள்ளதாக பரவலான தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்தநிலையில், நேற்று முன்தினம் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தனுக்கும், ரொனி பிளேயருக்கும் இடையிலான பேச்சுக்கள் இடம்பெற்றிருந்தன.

எனினும், ரொனி பிளேயர் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளில் ஈடுபடமாட்டார் என்று வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் மகேஷினி கொலன்னே நேற்றுத் தெரிவித்துள்ளார்.

தேசிய நல்லிணக்க செயற்பாடுகள் அனைத்தும் அரசாங்கத்தின் கீழேயே இடம் பெறுகின்றன. அதன் அனைத்து அரசியல் செயற்பாடுகளுக்கும் அரசாங்கமே பொறுப்பு.

நல்லிணக்கச் செயற்பாடுகளில் ரொனி பிளேயர் ஆலோசகராகப் பங்கேற்கவுள்ளதாக கூறப்படுவதில் உண்மையில்லை.

நாட்டில் தற்போது போர் நடக்கவில்லை எனவே,வெளிநாட்டு அமைதி ஏற்பாட்டாளர்களின் தலையீடு எமக்குத் தேவையில்லை.

எனக்குத் தெரிந்தவரையில் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளில் ரொனி பிளேயரின் தலையீடு இருக்காது.


பிரித்தானியாவின் முன்னாள் பிரதமர் ரொனி பிளேயரை வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர, பல்வேறு சந்தர்ப்பங்களில் சந்தித்துள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் அவர் கதிர்காமர் நினைவுரை ஆற்றுவதற்கு கொழும்பு வந்திருந்த போதும், மங்கள சமரவீர சந்தித்தார்.

அவர் ஓய்வுபெற்று ஒரு வாரத்துக்குப் பின்னர் சுற்றுலா வந்திருந்த போதும், மங்கள சமரவீர சந்தித்திருந்தார்.

எனினும் இலங்கையின் நல்லிணக்க செயற்பாடுகளில் அதிகாரபூர்வ பங்கை ஆற்றுவது குறித்து மங்கள சமரவீரவோ, ரொனி பிளேயரோ எத்தகைய கலந்துரையாடலையும் மேற்கொள்ளவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார். (செ-12)

# கிருஷ்ண காந்தி விசேட உரை



(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் 8-ம் திகதி இடம் பெற்ற தேர்தலில் வெற்றி பெற்று ஜனாதிபதியாக மைத்திரிபால சிறிசேன பதவியேற்று ஒரு வருடம் பூர்த்தியடையவுள்ளது.

இது தொடர்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள வைபவம் நாளை மறுதினம் 8-ம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதன்போது, மகாத்மா காந்தியின் பேரன கோபால் கிருஸ்ண காந்தி விஷேட உரையாற்றவுள்ளதாக, ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. கோபால் கிருஸ்ண காந்தி இலங்கைக்கான முன்னாள் இந்திய உயர் ஸ்தானிகர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(செ-12)

# ஊழல் அற்ற நல்லாட்சிக்கு...

ஒரு தலைவர் என்ற ரீதியில் ஜனாதிபதியை தான் கௌரவத்துடன் அறிமுகப்படுத்துவதாகவும் பாகிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டார்.

இரண்டு நாள் உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொண்டு இலங்கைக்கு வருகைதந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அவர்களுக்கும் ஜனாதிபதி அவர்களுக்கும் இடையிலான இருதரப்பு கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம் பெற்றதுடன் அங்கு உரையாற்றியபோதே பாக்கிஸ்தான் பிரதமர் இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்திற்கு வருகைதந்த பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் அவர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் வெகு விமர்சையாக வரவேற்றார்.

மரியாதை வேட்டுக்களுடன் கூடிய இர்ராணுவ மரியாதையும் பாகிஸ்தான் பிரதமருக்காக இங்கு இடம்பெற்றது.

பின்னர் இருநாட்டுத் தலைவர்கள் உள்ளிட்ட பிரதிநிதிகளுக்கிடையில் இருதரப்பு கலந்துரையாடல் ஆரம்பிக்கப்பட்டது.

பாகிஸ்தான் பிரதமரின் இலங்கை விஜயம் தொடர்பாக ஆரம்பத்திலேயே மகிழ்ச்சியைத் தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமரின் விஜயத்தின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையில் நீண்ட காலமாக இருந்துவரும் நட் புறவு மேலும் வலுவடைவதாகவும் தெரிவித்தார்.

இரண்டு நாடுகளினதும் பொருளாதார, வர்த்தக மற்றும் கலாசார உறவுகளை மேலும் வலுப்படுத்துவது தொடஉ பாக இரு நாட்டுத் தலைவர்களுக்கும் இடையிலும் விரிவான கலந்துரையாடல் இடம்பெறறதுடன் சேவைகள் மற்றும் முதலீடுகள் ஆகியவற்றின் ஊடாக இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கையின் உணவுப் பாதுகாப்புக்காக அரிசி, சீனி உற்பத்திக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கும் இதன்போது பாகிஸ்தான் பிரதமர் தனது இணக்கப்பாட்டைத் தெரிவித்தார்.

இலங்கையின் பால், சீமெந்து கைத்தொழிலை மேம்படுத்துவதற்கு உதவுமாறு ஜனாதிபதி இச்சந்தர்ப்பத்தின்போது பாகிஸ்தான் பிரதமரிடம் கோரிக்கை விடுத்ததுடன் அதற்கான உதவியினை வழங்குவதாக பாகிஸ்தான் பிரதமர் உறுதியளித்தார்.

உயர்கல்வி மற்றும் விளையாட்டு துறைகளில் இரண்டு நாடுகளுக்கும் இடையே பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை பரிமாறிக் கொள்வது தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப்பட்டதுடன் இலங்கை கிரிக்கட் பயிற்றுவிப்பாளர்களின் சேவையினை பாகிஸ்தான் கிரிக்கட் விளையாட்டின் மேம்பாட்டுக்காக பெற்றுத்தருமாறு பாக்கிஸ்தான் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் ஸ்கொஷ் விளையாட்டை மேம்படுத்துவதற்காக பாகிஸ்தான் பயிற்றுவிப்பாளர்களை தந்துதவுவதற்கு பாகிஸ்தான் பிரதமர் விருப்பம் தெரிவித்தார்.

இலங்கை உற்பத்திபொருட்கள உள்டங்

23ஆம் பக்கம் பார்க்க....

# இந்.மீனவர்...

தினம் உத்தரவிட்டுள்ளார்.

காரைநகர் வடக்கு கடற்பரப் பில் நேற்று முன்தினம் இரவு ஒரு படகில் வந்து அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட 4 இந்திய மீனவர்களையும் இலங்கை கடற்படையினர் கைது செய்து யாழ். மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்துறை அதிகாரிகளிடத்தில் ஒப்படைக்கப் பட்டனர்.

இவர்கள் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதவான் நீதி மன்றில் ஆயாப்படுத்தப்பட்ட போது நீதவான் அவர்களை எதிர் வரும் 19 ஆம திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (செ-9)


## ஆங்கில வகுப்புக்கள்

ஆங்கில பாடத்தில் மிகவும் பின் தங்கியநிலையில் உள்ள தரம் 01 – 05 வரையான மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள்.

**ஆரம்பம் - 18.01.2016**

**இடம் - யாழ்.இந்து ஆரம்பப்பாடசாலைக்கு அருகாமையில்**

**தொடர்புகளுக்கு :- 077 055 6375 / 077 660 4418**

(C-3336)


# வதை முகாமிலிருந்த...

கம்பிகள் கொண்டு மேயப்பட்டு காணப்பட்டதுடன், அறையின் மேற்பகுதியை சுற்றி வெளி வெளிச்சம் வராதவாறு தகரம் அடிக்கப்பட்டு மறைக்கபட்டு இருந்தன. சுவர்களில் ஆணிகள் அடிக்கப்பட்டு இருந்தன. அத்துடன் அறைக்கு மின் இணைப்பும் வழங்கப்படவில்லை.

அந்த அறையின் கதவில் எல்லாதர அதிகாரிகளும் உள் நுழைய முடியாது என சிங்களத்தில் எழுதி ஒட்டப்பட்டு இருந்தன.

அத்துடன் அந்த வீட்டின் மற்றும் ஒரு அறை வாசலில் வெளியாட்கள் உட் செல்ல தடை என சிங்களத்தில் எழுதப்பட்டு இருந்தது. அந்த அறையின் வாசலில் எம்.ஐ. ரூம் என ஆங்கிலத்தில் எழுத பட்டு இருந்தன, எம்.ஐ. என்பது **Military -intelligence** என்பதாக இருக்கலாம் எனவும் எனவே அந்த அறை இராணுவ புலனாய்வாளர்களின் அறையாக இருந்து இருக்கலாம். எனவும் சந்தேகம் எழுந்து இருந்தன.

அல்லது இரு வீடுகளுமே இராணுவ புலனாய்வாளர்கள் தங்கி இருந்த வீடுகளாகவும் அந்த வீடுகளில் கைது செய்யப்பட்டவர்கள் கடத்தப்பட்டவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்பட்டன.

அந்த வீட்டின் மற்றுமொரு அறையில் இராணுவ சீருடைகள் காணப்பட்டன.

தற்போது குறித்த இரு வீட்டின் மேல் கூரையில் வேயப்பட்டு இருந்த முட்கம்பிகள் இனந்தெரியாதவர்களால் அகற்றப்பட்டு உள்ளன.

வீட்டின் சுவர்களில் எழுதப்பட்டு இருந்த, சிங்கள எழுத்துக் கள் வர்ணம் பூசப்பட்டு மறைக்கப்பட்டுள்ளதுடன் வீட்டினுள் காணப்பட்ட இராணுவத்தினரின் உடைகள் மற்றும் இராணுவத்தினரின் ஆவணங்கள் என்பன தீயிட்டு கொளுத்தப்பட்டு வீட்டினுள் காணப்பட்ட இராணுவ தடயங்கள் அழிக்கப்பட்டு உள்ளன.

அண்மையில் இராணுவத்தினருக்கு வதை முகாம்களோ, சித்திரவதை முகாம்களோ நடத்த வேண்டிய தேவை இல்லை என இராணுவ ஊடக பேச்சாளர் பிரிகேடியர் ஜயனாத் ஜெயவீர தெரிவித்து இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-12)

# ரவிராஜ்...

இந்தப் படுகொலைச் சம்பவத்துடன் தொடர்புடையவர் என்று கைது செய்யப்பட்டு, தற்போது அர சதரப்பு சாட்சியாக மாறியுள்ள விஜய விக்கிரம மனம்பெரிகே சஞ்ஜய பிரீதிவிராஜ் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்த படுகொலை தொடர்பில் இவர் பொலிஸாருக்கு முன்னர் அளித்திருந்த மூன்று வாக்கு மூலங்கள் நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் வாசிக்கப்பட்ட போது, தாம் முன்னர் வழங்கிய இந்த வாக்குமூலங்கள் உண்மையானவை என்று அவர் உறுதிப் படுத்தியுள்ளார்.

அத்துடன், இப்படுகொலை தொடர்பில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபரான காமினி செனிவிரத்ன, நாரஹேன்பிட்டி மன்னிங் டவுனில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜை துப்பாக்கியால் சுட்டதை தாம் பார்த்ததாகவும் அவர் சாட்சியமளித்தார்.

இப்படுகொலை தொடர்பில் அவர் மேலும் சாட்சியம் அளிக்கையில்,

23ஆம் பக்கம் பார்க்க....

# இலங்கை - பாகிஸ்தான் இடை...

பரப்புதல், ஒருங்கிணைந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி, விஞ்ஞான ரீதியானதும் தொழில்நுட்ப ரீதியானதுமான தகவல்கள் மற்றும் அறிவினை பரிமாற்றுவதன் ஊடாக உயிரியல் தொழில்நுட்பம், நனோ தொழில்நுட்பம், உணவு தொழில்நுட்பம் மற்றும் ஏனைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு துறைகள் தொடர்பாக ஊக்குவிப்பதற்கும் இரண்டு நாடுகளுக்குமிடையே ஒத்துழைப்பை ஏற்படுத்துவதற்கு புரிந்துணர்வு உடன்படிக்கை மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இலங்கையின் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கும் பாகிஸ் தான் விஞ்ஞான மன்றத்திற்கும் இடையிலான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இங்கு கைச்சாத்திடப்பட்டது.

பாக்கிஸ்தான் வியாபார அபிவிருத்தி அதிகார சபைக்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபைக்குமிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடப்பட்டதுடன், இலங்கைக்கும் பாகிஸ்தானுக்குமிடையே தகவல் மற்றும் நிபுணர்களை பரிமாற்றம் செய்தல், வியாபார நடவடிக்கைகளை மேமபடுத்துவதற்கான வசதிகளை வழங்குதல், சந்தை ஆராய்ச்சி, இரு நாடுகளுக்குமிடையே வியாபாரத்தை மேமபடுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் இப்புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் மூலம் மேற்கொள்ளப்படும்.

இருநாடுகளுக்குமிடையே சுகாதார மற்றும் மருத்துவ துறைகள் தொடர்பான இருதரப்பு ஒத்துழைப்பினை பலப்படுத்தும் நோக்கில் சுகாதார துறையின் ஒத்துழைப்பு தொடர்பான ஒப்பந்தத்திலும் கைச்சாத்திடப்பட்டது.

கலாசார துறையின் ஒத்துழைப்பு தொடர்பாகவும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதுடன் கலை, கலாசார மற்றும் பாராம்பரியம் தொடர்பான துறைகளின் ஒத்துழைப்பின் ஊடாக இரு நாடுகளுக்கு மிடையில் இருதரப்பு உறவுகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் மேம்படுத்துதல் இதன் மூலம் எதிர்பாரக்கப் படுகின்றது.

இலங்கையின இரத்தினக்கல் மற் றும் ஆபரணங்கள் ஆராய்ச்சி பயிற்சி நிலையம் மற்றும் பாகிஸ்தான் கலை வடிவமைப்பு நிறுவனம் ஆகியவற்றிற்கிடையிலும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் துறையில் தொழில்நுட்பம், அறிவு மற்றும் நிபுணத்துவம் ஆகியவற்றை பரிமாற்றிக்கொள்வதற்கு இதன்மூலம் இரு நாடுகளுக்கும் வாய்ப்பு கிடைக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. (எ-12)

# மயங்கி வீழ்ந்த...

கடற்றொழிலாளி காலை 8.30 மணியளவில் கடலுக்கு மீண்டும் சென்று கடலில் போடப்பட்டிருந்த தனது மீன் வலையை எடுப்பதற்காக கடற்பரப்பில் சிறு தூரம் நடந்து சென்றுள்ளார். இதேவேளை அக்கடற்றொழிலாளிக்கு வலிப்பு ஏற்பட்டு கடற்பரப்பில் மயங்கி விழுந்துள்ளார்.

இதனை அவதானித்த ஏனைய கடற்றொழிலாளர்கள் அக்கடற்றொழிலாளியை அங்கிருந்து மீட்டு உடனடியாக காரைநகர் பிரதேச வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லும் வழியிலே அக் கடற்றொழிலாளி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில் இது தொடர்பான விசாரணைகளை யாழ். பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (செ-5,30)


## CNR எக்ஸ்பிறஸ் பொதி விநியோக சேவை

உலகின் முதல் தர கூரியர் நிறுவனத்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு/ வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.




(C-3335)

CNR World wide Express
No.401 Clock tower road,
Jaffna.
(பெருமாள் கோவில் அருகாமை)

அழையுங்கள் - 077 29 31 062



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிரித்தானிய பட்டப்படிப்புகள்

NEW INTAKE 2016

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
JAFFNA

Hotline 077 710 2131

(சி-3298)



## ஜீவக வாத தைலம்
Jeewaka Vata Thailaya

முதுகு வலி, கீழ் முள்ளந்தண்டு வலி, தசை வலி, கெண்டை புரளுதல், முழங்கால் வலியும் வீக்கமும், மூட்டுவாதம், விரல்கள், கை, கால், விறைப்பு, மூட்டுவலி, தகர்வுகள், உலுக்கு, வீக்கம், ஊமை உலுக்கு,அரிப்பு, எரிவு, நரம்பு சார்ந்த வலி, பாரிசவாதம், கால் பாதம் கடித்தலும் வீக்கமும், வாதம், மரத்துப் போதல் ஆகிய நோய்களுக்கு உடனடி நிவாரணத்தை வழங்கும். வெளிப்புறப் பூச்சுக்கு மாத்திரம். காயங்களில் பூசுவதைத் தவிர்க்கவும்.

25ml-150ரூபா | 50ml-280ரூபா | 100ml-450ரூபா

Manufactured & Marketed by
Jeewaka Herbals
No.17/3, wedagedara'Koskandawala yakkala
Ayu Lic No.6/2/1/02/11BR NO.W/Au/L/3621.
Contact: 071 227 1526

ஏக விநியோகஸ்தர்கள்,
சிவா நறுமணப் பூங்கா,
288, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 2567

(C-3331)



## B.com, BBA (Management) Medium Tamil

**இலங்கை தென் கிழக்கு பல்கலைக்கழகம் (ஒலுவில்)**

- A/Lல் மூன்று பாடம் சித்தி அடைந்தவர்கள் பதிவினை மேற்கொள்ள தகுதியுடையவர் ஆவர்.
- இப்பட்டநெறிகளின் கால எல்லை 3 ஆண்டுகளாகும்.
- விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

விபரங்கட்கு: S. அருள்நங்கை [நிர்வாகி]

021-222 8148
021-568 9477
077-846 9721
077-314 4762

**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

(C-3337)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.